பிஸ்மில்லாஹி.

மஹாதுபாரடைந்து

சுகானந்தமெய்திய

மாஹிஜாபின்

சரித்திரம்.

முதல்பாகம்.

சென்னை-சூளை:

ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

T 28207

Registered Copy Right.

பிஸ்மில்லாஹி.

மஹாதுயரடைந்து

சுகானந்தமெய்திய

மாஹிஜாபின்

சரித்திரம்.

[முதல்பாகம்.]

மதுரைமாநகரம்

சுந்தர ஜேயவீர சூரதீர கவிராஜ

கந்தசாமிபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

ஹகீம் ஷைக்தாவூத் சாஹிபு

ஹகீம் முஹம்மத் ஷம்ஷுத்தீன்சாகிபு

இவ்விருவர்களால்.

சென்னை-சூளை:

ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

Registered Copy Right.

ரிஜிஸ்ட்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில், 1867-வது வருஷத்திய 25-வது ஆக்ட்டின் 20-வதுபிரிவின் 6-வது விதியின்பிரகாரம் இந்நூலை இங்கிலீஷ்இலாகாவாகியமதராஸிலும் பிரஞ்சுஇலாகாவாகிய புதுச்சேரியிலும்,காரைக்காலிலும் காப்பிரைட்ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கின்றது ஆகையால் இந்நூலுக்குடையவர்களுமாகிய ஹகீம் ஷைக்தாவூத் சாகிபு, ஹகீம் முகம்மத் ஷம்ஷுத்தீன் சாகிபு இவ்விருவரின் உத்திரவின்றி இதைவேறுபாஷையில் மொழிபெயர்த்தலும் அல்லது, இதிற் கண்டிருக்கிற பாகங்களைபிற்றித்து அச்சிடுதலும் கூடாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

—(*)—

முக்கியகவனிப்பு.

இப்புத்தகமாவது இன்னும் இதரமான புத்தகங்களாவது ஔஷதங்களாவது தேவையானவர்கள் அடியிற் கண்டிருக்கும் கம்பெனியா ரவர்களுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். கேட்லாக் தேவையானவர்கள் எமக்குத்தெரிவித்துக்கொண்டால்இனாமாக அனுப்பப்படும்.

எமது விலாசம்.

ஹகீம் முகம்மத் ஷம்ஷுத்தீன்சாகிபு,

நெ. 106, சௌக்கார்பேட்டை, மதறாஸ்.

கடவுள் துணை.

மஹா துயரடைந்து சுகானந்தமெய்திய

மாஹிஜாபின் சரித்திரம்.

அங்கம் 1. காக்ஷி 1.

இடம் காபூல்தேசம்.

கதாநாயகர்.

இராஜன் கமறல்தீன்பாதுஷா

இராணி மாஹர்

இராஜகுமாரன் ஷம்ஷுத்தீன்

மந்திரி, பிரதானியர், ஜோதிடன். நகரவாசிகள்

ஆழிசூழுலகில்தாழ்வில்லாச்செல்வம் நிறைந்தோங்கியமாநகரென கல்வியிற்றேர்ந்த கவிஞர்களாற் புகலருங் கீர்த்திவாய்ந்த காபூல் தேசத்தைப் பரிபாலனஞ்செய்யும் கமறல்தீன் பாதுஷா மந்திரி பிரதானியருடன் தகத்மீதமர்ந்து செங்கோற்கரந்தாங்கி துஷ்டநிக்ரகசிஷ்டபரிபாலனனென்றவனியோர் புகழ்ந்துரைப்பக்குடிகண்மீது கருணைவாய்ந்து சிற்றரசர்திறைசெலுத்த தீரவீரப்ரகாசமாய் அரசுரிமைபுரிபவலாயினன், நகரவாசிகளும் தமதுமன்னன் நற்குணத்தைவெகுவாய்ப்புகழ்ந்து மனோல்லாசமெய்தியவராயினும், அந்நிய தேசத்தின் குடிபடைகளும் அந்நகரில்வந்து விசேஷித்திருந்தமையால்வர்த்தகவிஷயமும்வெகுவிமரிசையாய்நிகழ்வதாயின இத்தியாதி சம்பத்தெய்திடினும் மன்னன்மனதில் ஓர்விதசஞ்சலமெய்திசதா துயர சாகரத்திலாழ்ந்தவனாய் விசனமுற்றிருந்தனன். அச்சமயம் அருகிலிருந்த அமைச்சராதியோர் வியப்புற்று, ஈதென்ன ஆச்சர்ரியம்! காருண்யமூர்த்தியாகிய நமதிறைவன் யாதோ ஓர் வித மனவிசாரமாயிருக்கின்றனரேயென வினவுதலாயினர்.

மந்திரி:—மாநிலப்புகலரும் கீர்த்திவாய்ந்த மஹாராஜேஸ்வரா! எத்ததியும் ஒளிமழுங்காத தாமரைக்கமலம்போல தேஜஸ்விளங்கிய நின்முகாரவிந்தம் இத்ததி பருதியின் வெப்பத்தாற்றீய்ந்துலர்ந்த சரகெனவதங்கியிருக்குங் காரணமென்ன,

கமறல்தீன்:—அமைச்சர்காள்! எனக்கு யாதோர்குறையுமிலதெனினும், எனக்குப்பின் இந்நகரினைப் புரப்பதற்குமைந்தனிலதெனும் மனவிசாரமே பெரிதாய்ச் சதா சஞ்சலத்திலாழ்ந்திடச் செய்கின்றன.

மந்திரி:—அரசே யாதொன்றும் ஆண்டவன்செயலன்றி நம்மாலியலுமென்பது தகுதியன்று அஃதேனெனின்,

வெண்பா.

அடுத்துமுயன்றாலும் ஆகும்நாளன்றி
எடுத்தகருமங்களாகா—தொடுத்த
உருவத்தானீண்ட உயர்மரங்களெல்லாம்
பருவத்தாலன்றிப் பழா

என்னுந் தன்மையாய் எத்தகையகாரியமும் சுத்தசைதன்யமாய் விளங்கும் பகவான்கிருபையெனினும் எந்தெந்த காலத்தில் எவை கிடைக்குமோ அந்தந்த காலத்தில் அனுபவித்தலன்றி நாம் வீண் விசாரமெய்துதல் நன்கன்றென அமைச்சனுவ்போதித்தவை யுணர்ந்த மன்னன் ஓர்வித சஞ்சலமாயிருந்தனன்.

இங்ஙனம் பாதுஷாவின் மனவிசார மிவ்விதமிருக்க மஹாராணியாகிய மாஹர் கர்ப்பவதியாகி தசமதியும்நிறைந்து ஓர்சுபதினத்தில் பாலசூர்யப்ரகாசம்பொருந்திய தேஜஸமைந்த ஓர் ஆண்குழந்தையை ஈன்றனள் அருகிலிருந்த சேடியரகமகிழ்ந்தவராய் அரண்மனையிற்சென்று மன்னன்பாற்புகல, அன்னோன் மனமகிழ்ந்து சுபசெய்திபுகன்றதாதிகட்கு வேணவெகுமதியளித்து மாளிகைக்கு அனுப்பிவிட்டு, அருகிலிருந்த அமைச்சர்களால் ஜோதிடகணிதவல்லோனை வரவழைத்துத் தனது மைந்தன் ஜனனராசி லக்கின பலனைவிவரித்துரைப்பீரென அன்னோன் தனது அறிவிற்கெட்டியவிதமாய் இராணிவயற்றிற் ஜனித்த மகவின் ஜாதக நேர்மையை விவரித்துரைப்பதாயினன்.

ஜோதிடன்:—அரசே! உமதுமைந்தன்ஜனித்த இராசிலக்கினகுறிப்பைக் கவனித்திடின் மிகவும்மேன்மையாயிருக்கிறதெனினும் சிறிதுகாள் வெகுதுயரடைந்து நமது தேசத்தின் வர்த்தகன் புத்திரியினல் தனதுகஷ்டநிஷ்டூர மனைத்துமொழித்துசுகானந்தமாய் நின்சமுகம்வந்து இந்நகரின் மன்னனுயிருப்பான். ஆதலின் அவன் ஜனனேற்பவராசியின்படிஅவனுக்கு ஷம்ஷாதீனென நாமகரணமமைந்தன.

என! புகன்றவை வினவிய மன்னன் வியப்புற்று, ஈதென்ன சஞ்சல சந்தோஷமெய்துங் காரணமாயிருக்கின்றனவே யென்று ஜோதிடகணிதவல்லோனுக்குபொன்பொருளாதிய வேணவெகுமதியளித்துஅனுப்பினன். இராஜஸ்திரீகள் குழந்தைக்குந் தாய்க்கும் மங்களஸ்நானஞ்செய்வித்து ஆடையாபரண சிங்காரலங்கிர்தஞ் செய்வதாயினர்.

அரண்மனையிற் கொலுகலைந்து யாவரும் அவரவரிருப்பிடமேகினபின்னர் கமறல் தீன்பாதுஷா மாளிகையிற் சென்று மைந்தனையும் மனைவியையும்பார்த்து மனமகிழ்ந்தவனுய்க் குழந்தையைக் கரத்திலேந்தி, என்சந்ததி பெருகவந்துதித்த செல்வக்களஞ்சியமேயெனமுத்தமிட்டுத் தனது பத்தினியின்கரத்திற்றந்தனன் மஹாராணியாகிய மாஹர் தனது மைந்தனுக்குப் பாலூட்டிசீராட்டி வெகு மேன்மையாய் வளர்த்தனள்.

அப்பால் ஷம்ஷாதீன் கவிழ்ந்து, தவழ்ந்து, நடந்து, நாளுக்கு நாள் வெகுமேன்மையாய் வளர்ந்து, தாய்தந்தையர் மனமகிழுந்தன்மையாய் மதலைச்சொற்கள் பாஷித்து, சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடி மனமகிழ்ந்திருந்தனன். இவனுக்கு ஐந்துவயதான குறிப்பையுணர்ந்தபாதுஷாமனமகிழ்ந்து ஓர் வித்யாகுருவினிடம்விடுத்துபலகலை கற்பிக்கச்செய்தனன் ஷம்ஷாதீன் ஆசிரியன் திருவருளால்கல்வி நூலனைத்துங் கற்றுணர்ந்து இராஜாங்கத்திற் குரியனவாகிய ஆயுதபரீக்ஷையனைத்தும் வெகுவிமரிசையாய்க் கற்றுணர்ந்தனன். இவனுடைய ஜனனராசி லக்கினத்தின் கிரகசாரபலனுக்கியன்றனவாய்ச் சில துஷ்டபிள்ளைகளின் நேசம் வகித்திருந்தனன் ஓர் நாள் அவனுடையநேயர்களிற்சிலர் அவனைநோக்கி!ஹோ! மித்திரா

யாமித்தினம் மிருகவேட்டையாடுதற்கு வனத்திற்கேகுதும் வருவீரென்றனர். ஷம்ஷுத்தீன் சம்மதித்து அரணிற்சென்று தனது தந்தையின்பாற் புகன்று சிலவருள்வீரென்க பாதுஷாகிஞ்சிற்றும் சம்மதியின்றி புகலலாயினன்.

கமறல்தீன்பாதுஷா:— புத்ரா! நின்சித்தத்திலுற்றவை செய்யற்க என்வார்த்தையை மறுக்கில் அபாயமெய்துவாய்.

ஷம்ஷுத்தீன்:— பிதா! நீவிரிசைத்தமை வினவிய எனதுளம் கிஞ்சிற்றும் சம்மதித்திலது, அஃதேனின் உலகின்மாக்கள் ஓர்வித்தையைக் கற்றுணர்ந்திடில் அவற்றைப்பரீக்ஷிப்ப தன்றோர் முயற்சியன்றி கற்றவை சமயத்திற் பயன்படுமென சித்தத்திலெண்ணி சும்மாயிருந்திடிற் றீதெய்துமன்றோ, ஆகையால் யான் பயின்ற ஆயுதவித்தையை கவனிப்பதற்குக் கானகமணுகிவிலங்கின வேட்டையாடி அஸ்திரவித்யானுசாரத்தை பரீக்ஷித்துவருகிறேன்.

கமறல்தீன்பாதுஷா:— மைந்தா! நின்ஜனன ராசிக்கேற்ப உனக்கு யாதேனும் ஆபத்தெய்தி அநேகநாள்வரையினும் தனியாயலைந்து, வெகுநாட் சென்றபிறகு இந்நகரில் வருகுவாயென ஜோதிடன் புகன்றனன், ஆதலின், எனதுளம் இத்தகி உனைவனத்திற்கனுப்ப சம்மதித்திலது, நீவனமேகற்க, "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை"யெனும் ஆன்றோர் வாக்யத்தின்படியே என்வார்த்தையை மறுத்திடாதே,

என, பகர்ந்தவை வினவிய ஷம்ஷுத்தீன் சரிதானென்றொத்துக்கொண்டு அத்தினத்தில் அரணிற்றனே வீற்றிருந்தனன்.

இங்ஙனமிருக்க, மறுநாளுதயத்தில் இராஜகுமாரனாகிய ஷம்ஷுத்தீன் வெளியில் வந்தவுடனே துஷ்டநேயர்கள் சூழ்ந்து, அவனுக் கிசைந்தவிதமாய் பாஷித்துக்கொண்டிருக்கையில், அவர்களிலொருவன் வேட்டையாடுதற்குப் புறப்படுவீரென்றனன். ஷம்ஷுத்தீன் தனது தந்தை கானிற்கேகலாகாதென மறுத்த காரணதிகளைத்தும்புகன்று, யான் வருகேனென்றனன் அந்த அற்பர்கள் அவனுக்குப் பற்பலவித ஆசைவார்த்தைகளைப்புகன்று தந்திரோபாய

மாய் அவன் மனதைக் கலைத்து, கமறல்தீன் பாதுஷாவுக்கும் தெரியாமல் கானகமார்க்கமாய் அழைத்துக்கொண்டுபோயினர், அவர்களனைவரும் அஸ்வாரோகணராய்க் கரததிற்றனுசேந்தி சென்றமையால், நாலைந்துதினம் வரையினும் பக்ஷிகளையடித்துப் பக்குவமாய்ச்சமைத்துப் புசிப்போமெனும் பேராவலுடன் அரிசி, பருப்பு, நெய் மசாலைகளும் பாத்திரங்களுமெடுத்துக்கொண்டு வனத்திற்சென்று அங்ஙனம் ஓர் கூடாரமடித்து யாவரும் சற்றுநேரம் உட்கார்ந்து, தமது மனதிற்கிசைந்தவிதம் தமாஷான பனுவல்கள் பாடியாடினர். அவர்களிற்சிலர் சமையல்செய்வதாயினர், சிலர் கரத்திற்றனுசேந்தி பக்ஷிவேட்டை யாடுதற்குப்போயினர் அவர்களுடனே ஷம்ஷுத்தீனும் மிருகவேட்டையாடுவோமெனும்விருப்பத்தாற் பஞ்சகல்யாணி புரவியின்மீதமர்ந்து கரத்திலேந்தியதனுசிற் கணைதொடுத்து மிருகங்களின்மீதெய்தவுடனே விலங்கினம் யாவும் வீறிட்டுச்சிதறியோடின அச்சமயம் ஓர் புள்ளிமான் இவன்கணைக்குத் தப்பி கானகமார்க்கமாய் ஓடுகையில், ஷம்ஷுத்தீனுக் குரித்தாகிய கிரகசாரபலனும் சரியாய்வந்தொத்துக்கொண்டதால், அவனுக்கும் அந்தமானைக் கொல்லவேண்டுமெனும் ஆசையதிகரித்து அதனைத் தொடர்ந்துபோயினன். அவனுடன்சென்ற நேயர்களனைவரும் தாம் பிடித்துக்கொண்டுவந்த பக்ஷிகளினிறைச்சியைப் பக்குவமாய்ச்சமைத்து திவ்யான்னசுகபோஜனத்துடன் புசித்து மனோல்லாசமாய் அவ்வனத்தில்மிகவும் சந்தோஷமாய்விளையாடிக்கொண்டிருந்தனர். ஆனால், இராஜகுமாரனாகிய ஷம்ஷுத்தீனைக்காணாமல் கிஞ்சிற்று மனவருத்தமுடையவராயினும் அவனைத் தேடுதற்கும் முயற்சிபுரிந்திலர். இவ்விஷயத்தை அரசனுக்கும் புகன்றிலர், அஃதேனெனில் நாம் பாதுஷாவுக்குத் தெரியாமல் ஷம்ஷுத்தீனை கானிலழைத்துவந்ததால் இச்சமயம் அவன் காணாமற்போன விஷயத்தைக் கவனிப்பாராயின், நம் மனைவர்கட்கும் ஆவிக்கபாயமுறுந்தன்மையான ஆபத்தெய்தும், ஆதலின் இச்செய்தியை நம்மைத்தவிற மற்றவர்க்குத் தெரியாதவிதமாய் மறைக்கவேண்டுமென ஒருவர்க்கொருவர் திட்டஞ்செய்துக்கொண்டு, அக்கானிற்றானே வனபோஜனஞ்செய்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனம் இவ்விதமா யிருக்கையில் அந்திப்பொழுதகன்றும் மைந்தன் மாளிகைக்குவராத காரணமென்னவென்று மஹாராணி

யாகிய மாஹர் மனவிசாரமாயிருக்கையில் கமறல்தீன்பாதுஷா அரண்மனை விடுத்து மாளிகையில்வந்து விசாரிப்பதாயினன்.

கமறல்தீன்பாதுஷா:—காதலி! நமதுமைந்தனுகிய ஷம்ஷுதீன் இந்தினமுழுதும் அரண்மனையில்வருகாத காரணமென்ன, அவனுக்கு யாதேனும் திரேக அசௌக்யமுற்றனவோ,

மாஹர்:—நாயகா! ஈதென்னமாயம்அருணோதயத்திலிருந்து அந்திப்பொழுதுவரையினும் மைந்தனைக்காணு மனவிசாரமாயிருக்கின்றேனே அவனெங்குசென்றிருப்பான்.

என, மனமெலிந்துக் கண்ணீர்த் ததும்பக் கதறியழுதனள். பாதுஷா! மனந்திகைத்து, அடடா! ஈதென்னவிபரீதம்? "அன்றெழுதின விதியை அழித்தெழுத வியலாதென்பதுபோல, அவனுக்கிசைந்தவிதமாய் கிரகசாரபலன் வந்தொத்துக்கொண்டதோவென, அச்சமயமே அரண்மனையிற்சென்று அங்கிருக்கும் சேவகரையனுப்பி, மந்திரிபிரதானியரை வரவழைத்து உற்றவையனைத்தும் விபரமாய்ப்புகன்று இத்ததியே மைந்தனைத் தேடிப்பார்ப்போம் வருவீரென் றழைத்துக்கொண்டு தானும்பாதசாரியாய் அந்நகரமுழுதுந்தேடியலைந்துங்காணுமையால் பெற்றும் மலடாயினகாரணமாயிற்றென மனம்வெறுத்து அரண்மனைக்குப்போய்விட்டனர். நகரவாசிகளும் மன்னனுக்குற்ற மனவிசாரத்தைக்குறித்து வெகுவாய்த்துக்கித்துக்கொண்டிருந்தனர். இராஜகுமாரனுகிய ஷம்ஷுதீன் வனவாசியாயலைந்து மனிதசஞ்சாரமின்றி பயங்கரமான இருட்சூழ்ந்த கானிற்சென்று வழிதெரியாமற் சித்தப்ரம்மையுற்றவனுய்க் காபிரிவனத்திற் செல்வதாயினன்.

காக்ஷி 2.

இடம்　　காபிரிவனம்

கதாநாயகர்

ஷம்ஷுதீன்.　　காபிரிஸ்திரீ.　　நபிநாயகஞர்.

இங்ஙனம் ஷம்ஷுதீன் நிலேகலவரசந்தேக ஆபத்தானஆச்சரிய காக்ஷிபாயிருக்கையில் அவ்வனத்திற் சஞ்சரிக்கும் நரமாம்ஸபக்ஷ ணகாபிரிகளின் அதிகாரியினுடைய சுபுத்ரியாகிய ஓர் காபிரிஸ்திரீ யானவள் தனதுசேடியருடன் அவணிருக்கும் நந்தவனத்திற் செ ன்று தாமரைப்பொய்கையிலிறங்கி ஸ்நானபானம்புரிந்துமனேல்லா சமாய் விளேயாடிக்கொண்டிருந்தனள். அச்சமயத்தில் ஷம்ஷுதீனு ம் அங்குசென்று அந்தப்பெண்களேக்கண்ணுற்று ஆச்சரியமுற்றவ ஞய் அடடா ஈதென்னவிபரீதம், இவ்விதமும் ஸ்திரீகளிருப்பரோ இவர்களேக்காணில் நம்மைப்போன்ற மனிதரூபமாயிருக்கின்றன ரேஇவர்கள்ஆடைஆபரணமின்றிய மிருகங்களேப்போன்றவிகாரமா யிருக்கும்காரணம்யாதோவெனசந்தேகித்தவனுய்அவர்களேகண்ணு ற்றுத்திரும்பிப்போவதற்கும்மனமின்றியவனுய்மயக்கமுற்றிருந்தன ன். அச்சமயம் காபிரிஸ்திரீகளனேவரும் ஷம்ஷுதீனேக்கண்ணுற்று தமது நாயகியைநோக்கி அம்மணிஇதோ ஓர் நரமாம்ஸபக்ஷண ம்வந்திருக்கின்றதென புகன்றனர், அவள்இவனே உற்றுப்பார்த்து இவனேக்காணிற் சுந்தர புருடனுயிருக்கின்றனனே இவன்தான்நம க்குத்தகுந்த மணுளனெனமதித்து திடீரென்றேடிவந்து அவனே தனதுநாயகனெனமதித்து முத்தமிட்டனள் அந்தகாபிரிஸ்திரீயின் அவயவாதிகள் தன்மேல்பட்டவுடனே ஷம்ஷதீன் மோகவெறியிஞ ல் திடீரென சோர்ந்துவீழ்ந்து மதிமயக்கமாயிருக்கையில் காபிரி ஸ்திரீ அவனேத்தனது ஆசைதீர அங்ஙனமே சுகிக்க ஜாடை காட் டினள் இவனும் கொழுத்தவாலிபனுகையால் அங்ஙனமேசரசலீலா விநேத சாஸ்திரகுறிப்பின்படியே அறுபத்து நான்குவித ஆலி

ங்கன அபிநய மனோல்லாசமாய் நாகமும்சாரையும் மகிழ்வதுபோற் கூடிக்குலாவி ஒருவர்க்கொருவர் சுகானந்தமாய் விளையாடிக்கொண்டிருக்கையில் காபிரிஸ்திரீயும் ஷம்ஷுதீனும் ஆனந்த பரவசமடைந்தனர். அருகிலிருந்த காபிரிஸ்திரீகளும் இவனுடைய சவுந்தரியத்தையும் இவன்புரியும் விநோதங்களையும் கண்ணுற்று மனமயக்கமுற்றவராய் அவனுடன் சுகித்து விளையாடினார்கள்.

அப்பால், இவர்களனைவரும் ஷம்ஷுதீனைத்தமது சரசநாயகன்போல மதித்துத் தமது வாசஸ்தானத்திற்கு அழைத்துச்சென்றனர், அங்ஙனம் அநேககாபிரிகள் கறுத்ததேக முடையவராய்க்கிழவரும் வாருலிபம் சிறுவர்களும் ஸ்திரீகளுமாய்க்காணப் பட்டன. ஷம்ஷுதீன் மனமிரண்டு அடடா ஈதென்னஇராக்ஷதரிடம் சிக்கிக்கொண்டகாரணம் போலாயிற்றேயென சித்தப்ரம்மை யுற்றுத் திகைத்திருந்தனன். இவனுடைய சரசநாயகியராகிய காபிரிஸ்திரீகள் இவனைத் தமது பஞ்சணையிலழைத்துச்சென்று அன்றையதினமெல்லாம் அவனுடன் அன்பாய் விளையாடிக் கொண்டிருந்தனர் அப்பால்யாவரும் போஜனசாலையிற் சென்றனர் இவனும் அவர்களுடனே சென்று நாற்காலியின் மீதமர்ந்துமேஜையில்வைத்திருக்கும் சாராயவகைகளையும் கறிவகைகளையும் பார்த்தவுடனே சந்தேகமெய்தலாயினன். அஃதேனெனின் தன்னைப்போன்ற மனிதர்களை அவயவாதிகளுடன் அப்படியே நெய்யிற் பொரித்துமேஜையின் மீதுவைத்திருப்பதனால் இவர்களென்னபிணந்தின்னும் பேய்களோவென பார்த்திருக்கும்போதே தனது சரசநாயகிகளாகிய காபிரிஸ்திரீகள் ஆளுக்கோர் கத்திபை எடுத்துக்கொண்டு மேஜையில்வைத்திருக்கும் நரமாம்ஸங்களைத் துண்டுதுண்டாயறுத்து மென்று தின்றனர். இவையனைத்துங்கண்ணுற்ற ஷம்ஷுதீன் ஆச்சரியபயங்கரமெய்தியவனாயிருப்பினும் தனது வயிற்றின்பசியினால்மேஜையிலிருக்கும்கனிவர்க்கங்களை மாத்திரம் புசித்துக் களைதெளிந்தனன். காபிரிகளனைவரும் வயிறுறப்புசித்தவுடனே எழுந்து கைகாலலம்பிக்கொண்டு, மறுபடியும் இரைதேடுதற்குப் போயினர். அப்பால் கொஞ்சநேரம் பொறுத்து சிலகாபிரிகள் நான்கு மனிதர்களைஉயிருடனேபிடித்துக்கொண்டுவந்தனர். ஷம்ஷுதீன் அவர்களைக்கண்டு பரிதாபமுற்றவனாய், ஐயோ இவர்கள் எங்கு செல்வதற்குப் பிரயா

ணமாகினரோ? இன்றைக்கு எமலோகமணுகுவதற்குத்தயாராயின ரென்றுவிசனமுற்றிருக்கும்போதே இரண்டுகாபிரிகள் எழுகினுற் செய்திருக்கும் சூலத்தினுல் ஒவ்வொருமனிதரையுங் குத்திக்குத்தி எதிரிலிருக்கும் அக்கினியில் வாட்டிக்கொண்டிருக்கையில் அவர்கள் பிராணன் துடித்து கதறியழுதிடும் கூக்குரலைக் கேள்வியுற்றும், அவர்படுந் துன்பத்தைப் பார்த்தும் மனஞ்சகியாதவனுயிருந்தனன். அப்பால், காபிரிகள் அந்த நான்கு மனிதரையும் நெருப்பில் வாட்டிப்பொரித்து அன்றைய சாயங்கால உணவின் பக்ஷணமாய்ப் புசித்துவிட்டனர். இவையனைத்துங் கவனித்த ஷம்ஷுதீன் மனமிரண்டு அடடா! இனி யாமும் இங்கு சிறிதுநாள்வரையினுமிருந்தால், நம்மையும் இவர்கள் இலேசாய்ப் புசித்துவிடுவார்களெனமதித்து, பயங்கரமுடையவனுய் ஓடிப்போவதற்குத் தருணம் பார்த்துக்கொண்டிருக்கையில் நல்லசமயம் வாய்த்ததுபோல இவனுடைய சரசநாயகிகள் எங்ஙனமோ சென்றிருந்தனர். அச்சமயத்தில் ஷம்ஷுதீன் மெல்லென எழுந்து யாதொருவர் கண்ணுக்குந் தோற்றுமல் ஆரண்யமார்க்கமாய் ஓடிப்போகையில், வழியிலெதிருற்ற ஓர் சோலையிற்சென்று அவணடர்ந்து செழிப்புள்ளதாகிய விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்திருக்கும் பழதினுசுகளைப் பறித்துப்புசித்து நன்னீரருந்திக் களைதெளிந்து, தென்றற்காற்று வீசுதற்கினிமைபொருந்திய வசந்தமண்டபத்திற்சென்று சற்றுநேரம் சயனித்து நித்திரை புரிவதாயினன்.

இங்ஙனம், ஷம்ஷுதீன் நிலை இத்தகையதா யிருக்கையில், இவனுடைய சரசநாயகியராகிய காபிரி ஸ்திரீகள் இவனிருந்த இடத்தில் வந்துபார்த்தனர், ஷம்ஷுதீன் காணுமையால் தமது வம்ஸத்தினராகிய காபிரிகள் கொன்று தின்றுவிட்டனரோவென வயறெரிந்து மணாளனைப்பிரிந்த மங்கையர்போல சதாசஞ்சலத்திலாழ்ந்தவராய் விசனமுற்றிருந்தனர்.

இங்ஙனம், நிற்க அல்லா சுபுஹானுஹுவத் தஆலாவின் கிருபையால் நபிநாயகம் சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் யாதோ ஓர் காரணார்த்தமாய் கானிற் செல்லுந்தருணம், வழியிலெதிருற்ற நந்தவனத்திற்சென்று ஸ்நானபான நேமநிஷ்டை புரிந்து

ஆண்டவனை தொழுது நிமாஸ்படித்துவிட்டு காய் கனி கிழங்குகளை பறித்துப்புசித்துப் பசிதணிந்து வசந்தமண்டபத்தைநாடி வருக லாயினர். அங்கு சயனித்திருந்த ஷம்ஷுதீன் விழித்தெழுந்து முஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கண்ணுற்று இனி நமக்கு நற்காலம் வாய்ந்ததெனெ அவர்மலரடியில்வீழ்ந்து பணிந்து நாயகமேயான் உலகிற் ஜனித்து இத்தகைய ஆபத்துறலாயிற்றென கண்ணீர்த்ததும்பக் கதறியழுதனன். அம்மஹான் இவன் மனக் குறிப்புணர்ந்து இவன் யாதோர் குரூரபயங்கர இடுக்கணிற் சிக்கியவன்போற் காணகிறதெனமதித்து, அவனை விசாரிப்பாரா யினர்.

நபிநாயகம்:—அப்பா! நீயார், உனைக் காணில் அரசபுத்திரன்போற் காண்கின்றனவே யாதுகாரணத்தால் இருட்சூழ்ந்த கானில் யாதோர் துணையுமின்றி வந்தகப்பட்டுக்கொண்டனை?

ஷம்ஷுதீன்:—நாயகமே! யான் காபூல் தேசத்தில் அரசுபுரியும் கமறல்தீன் பாதுஷாவின் புத்திரன். என்பெயர் ஷம்ஷுதீன் யான் சிறுபிள்ளைத்தனமாய் அற்பசிநேகிதருடன் கூடிக்கொ ண்டு ஆரண்யத்தில் வேட்டையாடவந்து, ஓர் மானைத் துரத் திக்கொண்டு வெகுதூரம் போயினேன். அங்கு சில காபிரி ஸ்திரீகளேனை யழைத்துக்கொண்டு போயினர். அச்சமயம் நரமாம்ச பக்ஷணிகளாகிய காபிரிகள் நான்குமனிதரை இழுத் துக்கொண்டுவந்து எழுகு சூலத்தில்குத்தி நெருப்பில்வாட்டி புசித்தனர். இதனைக்கண்டவுடனே மனமிரண்டு ஓடிவந்து விட்டேன்.

நபிநாயகம்:—அப்பா! நீ சொல்வதும் சரிதான். இந்த வனத்தின் மேற்கே இரண்டு காதத்திற்கப்பால் நரமாம்ஸ பக்ஷணிகளா கிய காபிரிகள் வசிக்கின்றனர். அவர்களிடம் சிக்கியவர் மறு படியும் திரும்புவதில்லை. ஆனாலும் நீ தெய்வாதீனமாய்த் தப் பிப்பிழைத்தவை கவனிக்கில், எனக்கே ஆச்சரியமாயிருக் கின்றன. ஆயினும் பெரிதல்ல இம்மார்க்கமே செல்வாயாகில் காஸ்மீகர் தேசந்தோன்றும் அந்நகரிற்போய் ஜீவித்திருப் பாய்.

என, ஆசீர்வதித்துவிட்டுப்போயினர், ஷம்ஷுதீன் அம்மஹான் அனுக்கிரகத்தின்படியே அவ்வனத்திலிருந்து காஸ்மீகர்தேசத்தின் மார்க்கமேசென்று; வழியிலெதிருற்ற சோலையிலணுகி பசிவேதனையால் அவணடாங்கு செழிப்புளதாகிய சந்தனவிருக்ஷத்தின் கீழ் சயனித்துக்கொண்டிருந்தனன். அத்தருணத்தில் முசாபரியாகிய தனவந்தனொருவன் தனது நண்பர்களுடனே சேர்ந்து மறுதேசஞ்செல்கையில், சமையல் செய்வதற்காக வழியிலெதிருற்ற சந்தனசோலையில் கூடாரமியற்றி, யாவரும் வீற்றிருப்பதாயினர். அவர்களுடனேவந்த சுயம்பாகிகள் எஜமானர்கட்கிசைந்த விதமாய் அங்ஙனம் ஓர் சுத்தமான இடத்தைத் தயார்செய்து சமயற்கூடம் ஏற்படுத்தி, அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜனத்துடன் நாவுக்கினிய நல்லுணவாதிகளாகிய பலகார டக்ஷணங்களும் சமைத்து, எஜமானர்கட்குத் தெரிவிக்கலாயினர். அன்னோரகமகிழ்வெய்தி அருகிலிருக்கும் நதியில் ஸ்நானபானஞ்செய்துக்கொண்டு ஆண்டவனைத்தொழுது, அவணிருந்து மீண்டு சமையற்கூடத்தில் வந்தமர்ந்து, சுயம்பாகிகளால், பாத்திரங்களில் வட்டித்திருக்கும் புலவ், பிரிஞ்சி, கிச்சிடி, குருமா, சட்ணி முதலாகிய நாவிற்கினிய நல்லுணவாதிகளுடன் ஒயின் சாராயங்களும் குடித்து, மதோன்மத்தராய் ஒருவர்க்கொருவர் சரசசல்லாப மனோல்லாசமாய் விளையாடிக்கொண்டிருக்கையில் வயற்றுப் பசியால் நித்திரைசெய்துக்கொண்டிருந்த ஷம்ஷுதீனனவன் விழித்தெழுந்துபார்த்து இவர்கள்யாவரோ அறிகிலேன் நமது வறுமை யகற்றுதற்காக அல்லாகுத் தஆலாவுடையகிருபையாலும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய துவாபரக்கத்தாலும்நாம் நலம்பெருதற்கிசைந்தனவாய் வந்தனர்போற் காண்கிறதென மதித்து, மெல்லென எழுந்து அவர்களருகிற் சென்று, மிகவும் வணக்கத்துடன் முழங்காலில் நின்று தனதிருகரத்தையும்நீட்டி சொல்வதாயினன்.

ஷம்ஷுதீன்:—ஐயா! ஆண்டவன் சிருஷ்டித்த ஜீவனில் யானொருவன் ஏழையாயிருக்கின்றேனே, ஆயினும், உமது முகதரிசனங் கண்ணுற்றமையால் எனது வறுமைநோயகல்வதற்குச் சந்தேகமிலது. அஃதேதெனெனின்,

வெண்பா.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற்கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யாவரோ
டிணங்கி இருப்பதுவும் நன்று.

என்னுந் தன்மையாய் உமது முகதரிசனங் கண்ணுற்று ஆனந்த பரவசமடைந்தேனென சந்தோஷமாய்ப் புகன்றமொழியைக் கேள்வியுற்ற அவர்களனைவரும் ஷம்ஷுதீன்மீது கிருபைகூர்ந்து அப்பா! நீயாதொன்றுக்கும் அஞ்சேலென அபயாஸ்தம் தந்து தங்களுடனே அவனையும் விருந்தமு தருந்தச்செய்து மனோல்லாசமாய் சற்றுநேரம் அந்த நந்தவனத்திலிருந்து, ஷம்ஷுதீனையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்குப்போயினர்.

அந்த தனவந்தனுடைய சிநேகிதனாகிய அப்துல் அசீஸென்னும் ஓர் கப்பல் வர்த்தகன் அங்குசென்று ஷம்ஷுதீனைப்பார்த்து இவன் யார் இராஜகுமாரனைப்போ லிருக்கின்றனனேயென தனது மனதிலெண்ணிக்கொண்டு தனதுநண்பனாகிய தனவந்தனைநோக்கி ஐயா! இவன்யார் இவனை எங்கிருந்து அழைத்துக்கொண்டு வந்தீரெனவினவினன். அவன் நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்று, இவனுக்குயாதொரு மனிதசகாயமுமில்லையென்றனன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற அப்துல் அஸீஸென்னும் கப்பல் வர்த்தகன் மனமகிழ்ந்து என தன்பிற்குரிய நண்பா! எனக்கு வேணபொருளிருந்தும் அதனைச்சிலவழிப்பதற்குப் பிள்ளைஜனித்திலாத மனத்துயராதிகரித்து எனதுளத்தைத் தகிக்கின்றன ஆதலின் இவனை என்னுடன் அனுப்பிவிடுவீரென்க அந்தத் தனவந்தனும் சம்மதித்து, ஷம்ஷுதீனை அவனுடன் அனுப்பிவிட்டனன்.

காக்ஷி 3.

இடம்　　　　காஸ்மீகர்தேசம்

கதாநாயகர்.

அப்துல்அசீஸ். முன்னுஜான். ஷம்ஷுதீன். மாஹிஜாபின்.

இங்ஙனம், நிற்க, கப்பல் வர்த்தகனாகிய அப்துல்அசீஸென்பவன் ஷம்ஷுதீனை யழைத்துக்கொண்டு தனதில்லத்தை நாடிவருகையில், அவனுடைய பத்தினியாகிய முன்னுஜான் ஆச்சரியத்துடன் வினவுதலாயினள்.

முன்னுஜான்:—பிராணபதி! இச்சிறுவன்யார்? இவனை எங்கிருந்து அழைத்துக்கொண்டு வந்தீர்?

அப்துல்அசீஸ்:—சரசி! மனைக்கழகு மைந்தர்களின் பெருமையன்றி வேறுளதோ?

முன்னுஜான்:—ஆம் நீர்பகர்ந்தவை உண்மையே, அன்றியும் மைந்தனில்லாவீடு மயானமென்றே சொல்லப்படுமெனினும் நாமீன்றால் நமக்குச் சொந்தமன்றி அந்நியபிள்ளைமீது ஆசைப்படுதல் பஞ்சவர்ணக்கிளியைப் பறக்கவிடுத்து சதா துயரிலாழ்ந்த ஆஜம்ஷாவின் கதியைப்போலாகுமல்லவோ?

அப்துல்அசீஸ்:—ஆ! ஈதென்ன ஆச்சரியம்? கானிற்பறக்கும் கிளிப்பிள்ளையைப்பற்றி விசனப்படுவதுண்டோ? அதனால்அவனுக்கு ஜீவனம் நடக்குமோ? இதனைக் கேட்போர் நகைப்பத் தடையுளதோ? சரி, அப்படியானால் அச்சரிதையினைச் சற்று விவரித்துரைப்பாய்.

முன்னுஜான்:—பிராணபதி! பெற்றபாசத்திலும் வளர்த்தபாசம் விசேஷமாகையால் கிளியை இழந்த ஆஜம்ஷா அதிகவிசன சாகரத்தி லாழ்ந்தவனுயினன். அஃதெவ்விதமெனின் ஓர்நாள் கானகவாசியாகிய வேடனெருவன் தனது குலாசாரவழக்கப் படியே பறவைகளைப் பிடிக்கும் கண்ணிவலையை ஓர் ஆல விருக்ஷத்திற் பிணைத்திருந்தனன். அச்சமயம் சில பஞ்சவர் ணக்கிளிகள் கும்பலாய்ப்பறந்துசென்று கண்ணிவலையிற் சிக் கிக்கொண்டன. அத்தருணம் அருகிலிருந்த வனவேடன் திடீ ரென்று கிளிகளையெல்லாம் பிடித்துக் கூண்டிலடைத்துத் தனது தோளின்மீதெடுத்துச் சென்றனன். வழியிலெதிருற்ற மார்க்கத்தில் ஆஜம்ஷாவெனும் வர்த்தகன்கண்டு அந்தக்கிளிப் பிள்ளைகட்குக் கிரயம்தந்து வாங்கிக்கொண்டு மறுநகரிற் சென்று அதிக லாபத்துடன் விற்கிரயம் செய்துக்கொண் டான். ஆனல், அவைகளில் ஓர் கிளிப்பிள்ளைமாத்திரம் மிக வும் அழகுடையதாதவும் குழந்தையைப்போல அன்பைவிளை விக்கும் அருமையான பறவையாகவு மிருந்ததால் ஆஜம்ஷா அதனைமாத்திரம் விற்கிரயம் செய்யாமல் ஆசையாய் வளர்த் துக்கொண்டிருக்கையில் அது மோசஞ்செய்தோடிப்போன தால் இவன் வெகு விசாரமாய்த் தேடித்திரிந் தலைந்தனன். அத்தன்மையாக நாம் இவனை எவ்வித அன்பாய் வளர்த்தா லும் ஓடிப்போகாமலிருப்பானே அவ்விதமாய்ப் போய்விட் டால் நாம் மனத்துயரி லாழ்ந்து விசனப்படுவதற்குச் சந் தேகமுளதோ?

அப்துல் அசீஸ்:—பெண்ணே! நீ பகர்ந்தவை உண்மையே யெனி னும் ஆஜம்ஷாவென்பவன் கிளிப்பிள்ளைக்கு உணவாதிகள் தவராம லளித்தால் அவை ஓடிப்போகுமோ? அத்தன்மை யாகவே நாம் இந்த சிறுவனுக்கு அன்னவஸ்திரம் குறையா மற்கொடுத்து ஆதரித்து வந்தால் பெற்றதந்தையினும் சிறந்த உற்ற அன்னைதந்தையென மதித்து நம்மிருவர்மீதும் பாசம் மிகுத்து நம்மைவிட்டுப் பிரியான்.

முன்னுஜான்:—சரசா! ஒருவர்மீது ஒருவர்க்குப் பாசம் விளைவதனை த்தும் பிராரத்வ கர்மானுசாரத்தியல்பின்றி அவரவர்களால்

சேர்ந்திடுமென்பதற்கியலுமோ; அன்றியும் ஆஜம்ஷாவென்பவன் கிளிப்பிள்ளைமீதுற்ற அன்பினால் கூண்டில் விடுத்திடாமல் தனது சரீரத்தைப்போற் காப்பாற்றிக் கொண்டிருந்தனன். அவ்விதமிருந்தும் கிளிப்பிள்ளையானது கிஞ்சிற்று தூரம் சென்று பார்ப்போமெனும் ஆவலால் ஜிவ்வென்றெகிரிபறந்து போயின. அதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஆஜம்ஷா மனம் பதறி பின்பற்றி துடர்ந்துஓடினும் அகப்படவில்லை. அதனால் அவன் மிகவும் சஞ்சலமடைந்தனன்.

என, இவ்விருவரும் இவ்விதமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அருகிலிருந்த ஷம்ஷுதீன் கவனித்து, அடடா! ஈதென்ன ஆச்சரியம்? நாம் அண்டின இடமும் அநியாயமானாற்போலநமது வறுமைவந்து மறைக்கின்றதன்மையாயிருக்கின்றதே. இதனை ஆண்டவனே தவிர்க்கவேண்டுமன்றி யார் தீர்ப்பாரென சஞ்சலமுற்று மிகவும் பரிதாபகுணத்தினளாய்முன்னுஜான் திருவடியைப்பணிந்து, என தன்னையே நீர்என்னை உமது பிள்ளையைப்போல வளர்த்தீரானால் யான் உம்மைவிடுத்து ஒரு நாளும் பிரியேன் இது உண்மையென்று வாக்குதத்தஞ் செய்தனன். இவன் பகர்ந்தவை வினவிய சதிபதி இருவரும் சந்தோஷமாய் ஷம்ஷுதீனைக் காப்பாற்றுதலாயினர்.

இங்ஙனம் நிற்க முன்னுஜான் கர்ப்பவதியாகி தசமதியும் நிறைந்து ஓர் பெண்குழந்தையைப்பெற்றாள். அப்துல்அசீஸ் மனம் பூரித்து, பக்கீர்களுக்கு அன்னதானம் வஸ்திரதானம்செய்து ஒரு ஜோதிடகணிதவல்லோனை வரவழைத்துத் தமது புத்திரியின் ஜாதகங்கணித்து, மாஹிஜாபின்யென நாமகரணஞ் சூட்டினன். முன்னுஜான் குழந்தைக்குப் பாலூட்டிச் சீராட்டி வெகுமேன்மையாய் வளர்த்துக்கொண்டிருக்கையில், மாஹிஜாபின் கவிழ்ந்து தவழ்ந்து நடந்துநாளுக்குநாள் வளர்ந்துஐந்துவயதானபிறகுதாய் தந்தையரின் புத்திரவாஞ்சை தவிர்க்கும்படியாய் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கையில் அப்துல் அசீஸ் தமது குலாசாரவழக்கப்படியே வித்தியாசாலையில் விடுத்தனன் மாஹிஜாபின் ஆசிரியன் திருவருளினால் எழுத்து, அசை, சீர், தளை, இலக்கண இலக்கிய சாராம்சமனைத்தும் தெள்ளிதாய்க் கற்றுணர்ந்து, நீதிசாஸ்திர

நான்முறையனைத்தும் வாசித்தனள். இவ்விதமாய் பத்துவயது வரையினும் ஷம்ஷுத்தீனென்பவனைத் தனது தமயனென்றே மதித்து இருவரும் வித்யாசாலைக்குப்போவதும், வீட்டில்வந்து அமுதுண்பதும், மற்றவேளையில் மனதிற்கிசைந்த விடத்திற்சென்று விளையாடிக்கொண்டிருப்பதுமாய்க் காலங்கழித்து வந்தனர். சில சமயம் அப்துல் அசீஸ் வர்த்தகஞ் செய்வதற்கு அந்நியதேசத்திற்சென்றிருந்திடினும் தானேவீட்டின் செலவனைத்தும் தயார்செய்து அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமின்றிபதாய் பார்த்துக்கொள்ளுவான். இப்படி யிருக்கையில் தெய்வாதீனமாய் முன்னுஜான் திரேகமெலிந்து வியாதிபதிகரித்து வாழ்நாள் குறுகி ஆவியகன்றனள்.

இவ்விபரீதத்தைக் கண்ணுற்று மனம்சகியாத அப்துல் அசீஸ் விசனசாகரத்திலாழ்ந்தவனும் மனையாளை அடக்கம்செய்து உற்றுரிமையாவும் நடாத்திவிட்டு இனிநாம் இந்நகரிலிருப்பதினால் யாது பயன்? இனிநமது மனதிற்கிசைந்த தேசத்திற்சென்று சஞ்சரிப்போமென தீர்மானித்துத் தன்னிடமிருக்கும் பொருளனைத்தும் விற்கிரயம்செய்துவிட்டு, வளர்ப்புப்பிள்ளையாகிய ஷம்ஷுத்தீனுடனும்தனது புத்திரியாகிய மாஹிஜாபினுடனும் கப்பல்மீதமர்ந்து ஆழிசஞ்சாரியாய் அநேக தீவுகளிற் சென்று வர்த்தகஞ் செய்துக்கொண்டிருக்கலாயினன்.

இங்ஙனம் இவ்விதமாய் இம்மூவரும் ஆழி சஞ்சாரிகளாய் அநேகதீவுகளிலுஞ்சென்று வர்த்தகஞ் செய்துக்கொண்டிருக்கையில், ஓர்நாள் இவர்களுடைய மரக்கலம் கடல் மத்தியில் அதிவேகமாய்ச் செல்லுந் தருணம், இடிமின்னல் குமுறலுடன் காற்றும் மழையும் விசேஷித்து நெறநெறென பொழிந்தமையால், கப்பல் அதிர்ந்து சுழல்காற்றிற்சிக்கி சரேலென ஹலப்தேசத்தின் கடற்கரை மார்க்கமாய்ச்சென்று பளீரென கப்பல் சுக்கல் சுக்கலாய் ஒடிந்துவிட்டன. அப்துல் அசீஸ், ஷம்ஷுத்தீன், மாஹிஜாபின் மூவரும்திடீரென ஜலத்திற்குதித்து ஒடிந்த மரத்துண்டுகளைப்பிடித்து மெல்லென நீந்திக்கொண்டு கரையின் மீதில்வந்து ஈரவஸ்திரத்துடன்நின்று இனியாது செய்வோம் எவ்விதமாய் உலகில் ஜீவிப்போமென்று மனவிசாரமாயிருந்தனர்.

அங்கம் 2. காக்ஷி 1.

இடம் ஹலப்தேசம்

கதாநாயகர்.

அமீர் ஷாஜஹான் அப்துல்அசீஸ்

மாஹிஜாபின். ஷம்ஷுத்தீன்.

இங்ஙனம் காஸ்மீகர்தேசவர்த்தகன் கதி கடலில்கப்பல்மூழ்கி விட்டதேயெனும் சஞ்சலம்வாய்ந்த அரியாயஆபத்தாயிருக்கையில் அந்த ஹலப்தேசத்தின் வர்த்தகனுகிய அமீர்வீட்டிலிருக்கும் ஷாஜஹானென்பவன் தமது எஜமான்வீட்டின் செலவனைத்தும் தயார் செய்பவனுகையால் அன்றையதினமும், தனது தொழிலினை யனுசரித்து கடைவீதியிற் செல்லுந்தருணம், அவ்வூராரனைவரும் கூட்டங்கூடி இன்றிரவு இடி மின்னல் குமுறலுடன் மழை வருஷித்தமையால் அநேக மாடமாளிகை கூட கோபுரங்களனைத்தும்இடிந்து விழுந்தனவென்று பாஷித்துக்கொண்டிருக்கையில் ஷாஜஹான் அங்ஙனம் தமாஷாய் வேடிக்கைப்பார்த்துக்கொண்டே கடற்கரை வழியாகச்செல்கையில் அங்ஙனம் ஆதியில் மரக்கலம் மூழ்கி அவதிப்படலாயிற்றேயெனும் மனசஞ்சலமாயிருக்கும் அப்துல் அசீஸ், ஷாஜஹான், மாஹிஜாபின் மூவரும் கண்ணீர்த் ததும்பக் கதறியழுதுக்கொண்டிருக்கையில், ஷாஜஹான்அங்குசென்று அவர்களைப்பார்த்து இவர்கள்யாவரோ கப்பல் வர்த்தகராயிருக்கின்றனர். இன்றிரவில் பொழிந்த மழை இடி குமுறலால் இவர்கள் ஆரோகணித்துவந்த கப்பல் ஒடிந்துப்போயினதால் ஜலத்தில் வீழ்ந்து ஈரவஸ்திரத்துடன் தத்தளிக்கலாயினர்போற் காண்கிறதென மதித்திருக்கையில், அவர்களுடன் வந்திருக்கும் மாஹிஜாபினென்னும் பெண்ணைக்கண்ணுற்று மனமயங்கினவனுய் ஈதென்ன ஆச்சரியம்? இத்தகையதாகவும் சித்திரப்பதுமையைப்போற் பெண்களையும்கர்த்தன் சிருஷ்டித்தனுப்பிய காரணத்தைக்கவனித்திடில்எனது அதிர்ஷ்டானுகூலமென்றே மதித்திடல்வேண்டும். அடடா! என்ன

அழகு! என்ன அழகு! இவளுடைய திரேகத்தின்காந்தி சூரியன் பிரகாசத்திலும் பத்துபங்குக்கதிகமாய் ஒளி வீசுகின்றனவே இவளென்ன உண்மையான ஸ்திரீதானோ அந்தரத்துலாவும் அப்சரசமங்கையோ? ஆ! ஹா! இவள் திரும்புகையில் திரேகமுழுதும் மின்னற்பிரகாசிப்பதுபோற் ஜோதிமயமாய்த்துலங்கும் விநோதத்தைக் காணில் நேத்திரானந்தமாய் விளங்குவதன்றியும் எனதுளம் பூரித்து மதோன்மத்தனைப் சித்தப்ரம்மை யுண்டாகின்றனவேயென சோர்ந்து மையலாற்சொக்கி மறுபடியும் மனதைரியத்துடனே அந்தப்பெண்ணின் கரத்தைப்பிடித்து கன்னத்தைக்கடித்துகாதற்றணிவோமெனும் பேராவலுடன் அவர்களருகிற் செல்லுந்தருணம் அப்துல் அசீஸ் ஷம்ஷுத்தீன் இருவரும் துணையாயிருப்பதைக்கண்டு மனமிரண்டு பயங்கரத்துடனே சற்றுநிதானித்து இச்சமயம் நாம் மதியின்றியமூடனாய் அந்தப்பெண்ணின் கையைப்பிடித்தால் இவ்விருவரும் நம்மை நையப்புடைத்து இடுப்பையுடைத்து எமலோகத்திற்கு அனுப்பிவிட்டால் என்னசெய்கிறது, உயிரிருந்தால் தானே இந்தப்பெண்ணுடன் சகல சுகானந்தமும் அனுபவிக்கலாமன்றி ஆவியகன்றால் யாரைமணந்து அன்பாய் விளையாடுவோம் ஆகையால் அவளுடன் தந்திரோபாயமாய்ப் பேசிக்கொண்டிருந்து விஸ்வாசஹீன வீட்டெலியைக்கவ்விக்கொண்டோடுவதுபோல சமயம் பார்த்துக்கொண்டிருந்து கபீலென இந்தப்பெண்ணை அழைத்துக்கொண்டுஅந்கியதேசத்திற்கு ஓடிப்போவோமென தீர்மானித்து அவர்களருகிற்சென்று விசாரிப்பதாயினன்.

ஷாஜஹான்:—ஸலாம் அஜரத்

அப்துல் அசீஸ்:—வாலேக்கும் ஸலாம்.

ஷாஜஹான்:—அஜரத் நீங்கள் யாவர்? எத்தேசத்தினர்? யாதுகாரணமாய் இக்கடற்கரையில் யாதோர் துணையுமின்றி முசாபரிகளாய்ச் செல்கின்றீர் அன்றியும் நீங்கள் ஜலத்தில் வீழ்ந்தவர் போல ஈரவஸ்திரத்துடனும்திரேகமெங்ஙணும் மணல்நிரம்பியிருப்பதையும் கவனித்திடில் கடலில்மூழ்கி நீந்திக்கொண்டு

வந்தவர்போற் காண்கின்றனவே. இந்தப்பெண் உமது குமாரத்திதானே ஐயோ இவளைப்பார்த்தால் எனக்குப்பரிதாபமாயிருக்கின்றது. என, தனது மனைவாக்குக் காயமிம்மூன்றையும் மாஹிஜாபின்மீது செலுத்தியவனாகையால் வெகு விஸ்வாசமாய் பேசிக்கொண்டிருந்தனன். இவன்மனக்குறிப்புணராத அப்துல் அசீஸ் இவனை மிகவும் நல்ல உத்தமனென்றே தீர்மானித்துத் தமக்குற்ற ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய்ச சொல்வதாகினன்.

அப்துல் அசீஸ்:—அப்பா! யான் காஸ்மீகர்தேசத்தின் கப்பல் வர்த்தகன் என்பெயர் அப்துல்அசீஸ் இவன்பெயர் ஷாஜஹான் இவனை எனது பிள்ளையைப்போல் வளர்த்துக்கொண்டேன். இவனும் எனது புத்திரனைப்போல விஸ்வாசம் மறந்திடாமல் என் உடலுக்குயிராய் என்னைவிட்டுப் பிரியாதிருக்கின்றனன். இந்தப்பெண் எனது சுபுத்திரியாகும் எனது பத்தினி இறந்துவிட்டதால் யான் இவர்களிருவரையும், அழைத்துக்கொண்டு ஆழிசஞ்சாரியாய் அநேகதீவுகளினுஞ்சென்று நவரத்னவியாபாரஞ்செய்துக்கொண்டிருந்தேன். தற்சமயமும்வழக்கப்படியே கப்பல்மீதமர்ந்து கடல்மார்க்கமாய்ச் செல்லுந்தருணம் எமது பகைஞரைப்போற் காற்றும் மழையும் இடிமின்னலைத் துணையாயழைத்துக்கொண்டுவந்து எமது கப்பலையுடைத்து எங்களையும்கடலில்தள்ளி கொல்வதற்கிசைந்தது அத்தருணம் எங்கும் நிறைந்து ஏகபரம்பொருளாய் திருவருள்செலுத்தும் அல்லாசுபுஹானுஹுவத் ஆலாவின் கிருபையால் யாங்கள் தப்பிப்பிழைத்து ஒடிந்த மரததுண்டுகளின் மீமதர்ந்துமெல்லென நீந்திக்கொண்டுவந்து கரையிற்சேர்ந்தோம். இனி பிழைக்கும்விதம் எவ்வாறென எனதுளம் பலவிதமாய்ச் சிந்திக்கலாயின.

ஷாஜஹான்:—ஆ! ஆண்டவனே உமது சிருஷ்டியாலுற்பவித்த ஜீவர்களாகிய இவர்கட்கித்தகைய துயரெய்தியதெனின் கேட்போர் மனது கல்லாயிருந்திடினும் கரைந்துருகுமன்றே? அஜாத் நீர் இனியாதொரு மனததுயருமெய்தாதீர் இறைவனைத்தொ

மூதுஃஈமான்வகித்திருந்தால் குறையொன்றணுகா குவலயத்திற் சிறப்பெய்தியவராய் ஜீவித்துப்வீர், நல்லதிருக்கட்டும் நீர் எனை நேசித்தவுடனே உமது வறுமையொழிந்ததென்றே தீர்மானித்துக்கொள்வீர். அஃதேனெனின் நட்புடையார் நலம்பெறுந்தன்மையாய் எனது அன்பான சிநேகிதராகிய உம்மையான் காப்பாற்றுவேன் உமக்கும் என்மீது பூரணதயை இருத்தல் வேண்டுமன்றோ ?

அப்துல்அஜீஸ்:—ஆ ! அதற்கென்ன சந்தேகமா? அப்பா உப்பிட்டவரை உள்ளநாள்வரையினும் மறந்திடலாகாதெனும் நீதியை யனுசரித்தன்றோ உலகிற் ஜீவிக்கவேண்டும் ஆகையால், நீர் இத்தேசத்தி லிருப்பவராகையால், யாங்கள் பிழைக்கும் மார்க்கத்தை எங்களுக்குக் காண்பித்தருள்வீர்.

என, புகன்றவை வினவிய ஷாஜஹான் பசியுள்ளவனுக்கு திவ்யான்னபோஜனங்கிடைத்ததுபோல சந்தோஷ சாகரத்தில் மூழ்கியவனாய் மனம்பூரித்து அடடா நமது அதிர்ஷ்டானுகூலத்தை யாவராற் சொல்வதற்கியலும், இந்தப்பெண் நமது மனையாளாயினளென்பதற்குச் சந்தேகமில்லையென மதித்து, இனி இவர்களை நமது வீட்டிற்கழைத்துச்செல்வோமாகில் எஜமானாகிய அமீர் இவளைக்கண்டவுடனே கலியாணஞ்செய்துக்கொள்ளுவான் அச்சமயம் நாம் எவ்விதத்திலேனும் தந்திரோபமாய் இந்த சுந்தரரூபியை கண்காணாதேசத்தில் அழைத்துச்சென்று காதலுடன்வாழ்ந்திரும்போமெனும் வீணாசையினால் வெகு நம்பிக்கையான உத்தமன்போல் புகலலாயினன்.

ஷாஜஹான்:—அஜரத்! நீங்கள் இதைக்குறித்து யாதொரு சந்தேகமுமெய்தாதீர் இந்த ஹலப்தேசத்தில் மஹாதனவந்தனென கீர்த்திவகித்திருக்கும் அமீரென்பவர் எனது எஜமான் அவரிடம் அநேகர் ஜீவிக்கின்றனர். கோபமின்றிய சாந்த குணமமைந்த நற்குணாளர் யான். உம்மைப்பற்றி வெகுவாய்ப்புகழ்ந்து சிபாரிசுசெய்கிறேன் வருவீர்.

என, தந்திரோபாயமாய்ப்புகன்று, தன்னுடனே அம்மூவரையும் அழைத்துக்கொண்டு கடற்கரையை விடுத்து அமீர்வீட்டிற்கழைத்துச்சென்றனன். அன்றையதினத்தில் அவ்வீட்டிலிருக்கும் சுயம்பாகிகளனைவரும் பதார்த்தம் வாங்கிக்கொண்டு வரப்போன ஷாஜஹானைக் காணுமல் திப்ரமைபடைந்தவராய், ஐயோ பத்து நாழிகையாய்விட்டதே இன்னமும் ஷாஜஹான் வரவில்லையே இனிமேல் எவ்விதமாய்ச் சமையல்செய்கிறதென ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு அமீரிடத்திற் புகன்றனர், அவன் அதிக கோபதீப்தனுய் வாயில்வந்தபடி அவனைத் தூஷித்து, வயற்றுப்பசி சகிக்கவியலாமல் மிட்டாய் பால், பழம், புசித்து சோபாவின்மீது சாய்ந்து சோக்கராவினுல் தயார்செய்த உக்காவைப் பிடித்துக்கொண்டிருந்தனன்.

இங்ஙனம் இவர்கள் நிலை இவ்விதமாயிருக்கையில் பெண்ணுசையினுல் மனந்திகைத்திருக்கும் பேதையாகிய ஷாஜஹான் கடற்கரையிலிருந்தவரை மெதுவாய் அழைத்துக்கொண்டு அவர்களின் பிறகேவந்தனன். அச்சமயம் அமீர் அவர்களுடனே வந்த மாஹிஜாபினைக்கண்டு மதன்விடும் சரத்தினுல் மனமயங்கி மையலுற்றவனுய்த்திகைத்துத் திப்ரமையடைந்து ஆ! ஹா! ஷாஜஹான்மிகவும் உத்தமன் நமது காதற்றணிக்கும் மாதரசியை அழைத்துவந்தனன் பார்த்தனையாவென்று புந்நகைபுரிந்து அவனை அருகிலழைத்து ஆசையாய்விசாரிப்பதாயினன்.

அமீர்:—அடா! ஷாஜஹான் இத்தினமென்ன யாவரையும் பசிபாற் கலங்கும்படி செய்தனையே ஈதுனக்கு நீதியோ?

ஷாஜஹான்:—பிரபு! யாம் தினந்தோறும் அன்னம் புசிக்கின்றோமே இன்றையதினம் வயறறைக் காயப்போடலாகாதா இதோ இவர்களைப்பாரும்?

அமீர்:—நல்லதிருக்கட்டும் உன்குற்றத்தை மன்னித்தேன் இவர்கள் யார்? உனக்கென்னவேண்டும் உமது உறவினரா? எங்கிருந்து அழைத்துவந்தனை?

ஷாஜஹான்:—இன்றைய அதிகாலையில் யான் கடற்கரைவழியாய்ச் சென்றேன் அங்ஙனம் திக்கற்ற பரதேசியைப்போல திகைத்

தழுதுக்கொண்டிருந்தனர் யான் மனந்தாளாமல் தயாநிதியாகிய உம்மிடத்தில் அழைத்துக்கொண்டுவந்தேன் மற்றசங்கதியை நீர் அவர்களையே விசாரித்துக்கொள்ளவேண்டும்.

அமீர்:—ஆ! அப்படியா! சாஹேப்நீர்யார்உமது தேசம்யாது இந்தப் பெண்ணும் பிள்ளையும் உமக்கென்னவேண்டும் நீங்கள் கடற்கரையில் சஞ்சலத்துடன் அழுதுக்கொண்டிருக்க வேண்டிய காரணமென்ன இவையனைத்தும் எனக்கு விபரமாய்த்தெரிவிப்பீர்.

அப்துல்அசீஸ்:-ஐயா யான் கர்ஸ்மீகர்தேசத்தின்வர்த்தகன் என்பெயர் அப்துல்அசீஸ் இவன் எனது வளப்புப்பிள்ளையாகிய ஷம்ஷுதீன் இவள் எனது குமாரத்தியாகிய மாஹிஜாபின் யான் நவரத்தின வியாபாரியாகிய கப்பல்வர்த்தகனென எத்திசையிலும் கீர்த்திபெற்றவனாயிருந்தேன், ஆனால் எனது மனையாள் மரணமுற்றதால் அந்நகரிலிருப்பதற்கு மனமின்றியவனும் இவ்விருவரையும் அழைத்துக்கொண்டு ஆழி சஞ்சாரியாய் அநேக தீவுகளினுஞ்சென்று நவரத்ன வியாபாரஞ்செய்துக்கொண்டு ஜீவித்திருந்தோம். அவ்விதமாய் எமதுவழக்கப்படியே கப்பல்மீதமர்ந்து கடல்மார்க்கமாய் வருகையில் காற்றும் மழையும் பொழிந்து கப்பலை ஒடித்து கடலில் மூழ்கிவிடச்செய்ததனால் யாங்கள் மூவரும் ஆதரவற்ற பரதேசிகளாய்மயங்கி நிற்கையில் இந்த உத்தமன் உம்மிடம் அழைத்துக்கொண்டுவந்தனன்.

அமீர்:---அஜரத் நீங்கள் இதைக்குறித்து விசனப்படவேண்டாம் நீர் எமது வம்ஸத்தினராகையால், உமக்கு யான் யாதொரு குறையுமில்லாமல் காப்பாற்றுவேன் நல்லதிருக்கட்டும் இவையனைத்தும் பின்னால் யோசிப்போம். யான் இந்தப்பெண்ணை விவாகஞ்செய்துக்கொள்வதற்கு ஆவலுற்றவனாயிருக்கிருக்கின்றேன் ஆனால் உமது இஷ்டம் யாதோ தெரிகிலேன்

அப்துல்அசீஸ்:---ஆ! அதற்கென்ன! நீர் எனது மருமகனாவதற்கு யான் எவ்வளவு புண்ணியஞ்செய்திருத்தல் வேண்டும் இனி உமது இஷ்டத்தின்படியே விவாகஞ்செய்துக்கொள்வீர்.

என, பகர்ந்ததைவினவிய அமீர் மஹா சந்தோஷமெய்திய வனாயிருந்தனன், அப்பால் அப்துல் அசிஸ், ஷம்ஷுத்தீன், மாஹிஜா பின் மூவரும் அமீர் உத்திரவின்படியே ஷாஜஹானால் நேமித்திருக் கும் விடுதியிற்போயிருந்தனர். அப்பால் சுயம்பாகிகள் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனத்துடன் நாவிற்கினிய நல்லுண வாதிகளாகிய பலகாரபக்ஷணங்களும் சமைத்து நவரத்னகசிதமய மாய்த்துலங்கும் மேஜையின்மீது சமைத்தவையனைத்தும் கொணர் ந்து பாத்திரங்களில்வைத்து ஒயின் சாராயங்களும் கிளாசுகளும் வைத்து யாவரையும் அமுதுண்க வருவீரென்றழைத்தனர். அச்ச மயம், அமீர் அப்துல்அசீஸ் ஷம்ஷுத்தீன் ஷாஜஹான் முதலானவர் களொருபுறமும் மாஹிஜாபின் முதலான ஸ்திரீ ஜனங்களொருபுற மும் உட்கார்ந்து சுயம்பாகிகளால் வட்டித்த பாத்திரங்களிலிருக் கும் புலவ், பிரிஞ்சி குறுமா முதலானவை புசித்து ஒயின் சாராயங் களைக்குடித்து, பக்குவமாய்ப் பொரித்துவைத்திருக்கும் புரு, கிளு வை, சிட்டு, கோழி உள்ளான்முதலாகிய பறவை இறைச்சிகளைத்தி ன்று பசிதணிந்தெழுந்து கைவாயலம்பிக்கொண்டு காற்றுவாடை வீசுதற்கினிமைபொருந்திய வசந்தமண்டபத்திற்சென்று அங்ங னம்சிங்காரித்திருக்கும் சோபாக்களில் சாய்ந்துக்கொண்டு வாசனை குடாக்கு நிரம்பிய உக்காக்களை வாயில் வைத்துப்பிடித்துக்கொ ண்டு மனோல்லாசமாய்ப் பாஷித்துக்கொண்டிருக்கையில் அப்துல் அசீஸ் தனக்குற்ற அநியாய ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகன்று வருத்தப்படலாயினன். அச்சமயம் அருகிலிருந்த அமீர் நகைத்துச் சொல்வதாயினன் ஐயா! சுகதுக்கம் அனுபவிப்பதை நீர் உலகியல்பென மதித்திடாமல் வீண்விசாரப்படுவதாலாய பய னென். ஆவதும் அழிவதும் ஆண்டவன் செயலன்றி அணுவேனும் நம்மால் முடியுமோ யாதாமொருவருக்கும் வறுமை சிலதுகாலம் வாழ்வுஞ்சிலதுகாலமன்றி சுகமனுபவிப்பவர் சதா சுகமும் துயரா னுபவிப்பவர் சதாதுன்பமு மனுபவிப்பார்களா அத்தன்மையாக வே நீர் வாலிபதிசையில் சுகானந்தமாயிருந்து வயது முதிர்ந்து துக்கப்படலாயினீர். தற்சமயம்யாதொருமனத்துயரானுகாமற்சுகஜீ வியாயிருப்பதற்கு நமது ஷாஜஹானால் இங்ஙனம்வந்துசேர்ந்தீர்

ஆனல் என்னைப்போற் கஷ்டநிஷ்டூரமடைந்தவர் காசினியிலுள ரோ ஆ! ஹா! யானனுபவித்த துன்பத்தை நினைக்க நினைக்க மன த்துயரதிகரிக்கின்றனவே.

அப்துல்அசீஸ்:---ஆ! அப்படியா! மஹாதனவந்தராகிய உமக்கும் கஷ்டதிசையணுகியதோ என்ன ஆச்சரியம் பிரபு? யான் அவ ற்றைக் கவனிப்பதற்கு ஆவலுற்றவனாயிருக்கின்றேன். ஆத லின் சற்று தயைபுரிந்து உமக்குற்ற ஆபத்தை விவரித்துரை ப்பீர்.

அமீர்:---சரி! அவ்விதமே தெரிவிக்கின்றேன் கவனிப்பீர். ஆதியில் எனது தந்தை யிருக்கும்போது யானும் ஆழிசஞ்சாரியாய்அவ ருடனே அநேகதீவுகளினுஞ்சென்று வர்த்தகஞ்செய்துக்கொ ண்டிருந்தேன் ஓர் நாள் யாங்களிருவரும் ஓர் தீவிலணுகி அங்ஙனம் சில அவிழ்தமூலிகைகளை கிரயத்திற்கு வாங்கிக் கொண்டு திரும்புந்தருணம், என்தந்தைமிகவும் விர்த்தாப்பிய ராகையால் பசிதாளாமல் நடக்கச்சக்தியற்று மயக்கமாய் ஓர் மரத்தடியில் உட்கார்ந்து புத்திரா! நாவரக்ஷிதணிய சுத்தஜ லங்கொண்டு வருவாயென்றனர், யான் நன்கெனச்சம்மதித்து பாத்திரத்தையெடுத்துக்கொண்டு ஆற்றுக்குச்செல்வோமென இரண்டடி எடுத்துவைத்தேன் அச்சமயம் ஓர் வேங்கையான து ஜிவ்வென்றெகிரி என்மேற்பாய்ந்தது யான் அதனுடைய பாய்ச்சலுக்குத் தப்பிக்கொண்டு அருகிலிருந்த விருக்ஷத்தின் மீது ஆரோகணித்து ஐயோ தள்ளாதகிழவனை தனியாய்விடு த்தோமே அவனுடையகதி ஆவிக்கபாயந்தானென தீர்மானி த்து மனசஞ்சலமுற்றவனாய் அழுதுக்கொண்டிருந்தேன்.

என, பகர்ந்து தனது தகப்பனை நினைந்து மருமுருகி தனது இரண்டு கையினாலும் முகத்தில் பகீர் பகீரென்றடித்துக்கொண்டு ஆ! என்னை அன்புடன்வளர்த்த தந்தையே இனி எக்காலத்தில் உன் முகத்தைப் பார்ப்பேனென்று கதறி பதறி கண்ணீராருய்ப்பெருக

பூமியிற் புரண்டழுது மரணமூர்ச்சையாயினன். அருகி லிருப்பவர் மனந் திகைத்து மர்மரகஸ்ய முணராதவ ராகையால் ஆ! ஈதென்ன விந்தை, நன்மொழி பாஷித்துக்கொண் டிருந்தவர் அகஸ்மாத்தாய் அழுதுத் துடித்து பூமியில்வீழ்ந்துவிட்டனரேயென்று, ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு பற்பல விதமாய் பாஷித்துக்கொண்டிருக்கையில் அப்துல்அஸீஸூம்,ஷம்ஷூதீனும்,கண்ணுற்று வியப்புற்றவராய் ஆ! ஹா! இந்த மஹானுபாவர் நம்மிலும் விசேஷ துயரனுபவித்தவர்போற் காண்கிறதென மதித்து, அமீரைத் தூக்கி உட்காரவைத்து ஐயா? ஏனிவ்விதமாய் மனமெலிவதாயினீரென்று தமது கைக்குட்டையால் அவன் கண்ணைத் துடைத்தனர். அச்சமயம் அமீர் தனது தந்தையை நினைந்தழுத விசனத்தினல் திரேகமனைத்தும் வியர்த்து நாவரண்டு கண்ணெரிச்சலுற்றதால் பந்நீரினல் முகத்தைக் கழுவிக்கொண்டு வாய்கொப்பளித்து மறுபடியும் தாம்பூலமணிந்து வாசனைவீசும் குடாக்குசுளைப் பிடித்துப் புகையருந்தி சற்றுநேரஞ்சென்ற பிறகு அப்துல் அஸீஸ் ஷம்ஷூதீன் முதலானவர்களுக்குச் சொல்வதாயினன்.

அமீர்:—ஐயா! யான் வேங்கையின் பாய்ச்சலுக்குத் தப்பித்துக்கொண்டு விருக்ஷத்தின்மீதேறிய பிறகு அந்தத்துஷ்டமிருகம் தனது பற்களினல் என்தந்தையின் கழுத்தைக் கடித்தோடிப்போயின. அச்சமயம் எனது திரேகம் நடுக்கமுற்றுக் கைசோர்ந்து மெய்சோர்ந்து ஆற்றெணு விசனசாகரத்தி லாழ்ந்தவனய் ஆ! எனை ஈன்ற தந்தையே யென முகத்தி லறைந்துக்கொண்டு பூமியில் வீழ்ந்தேன், அங்ஙனம் கற்பாங்கு நிலமா யிருக்குமாகில் அப்போதே யான் கைகாலொடிந்து முடவனகி நடக்கச்சக்தியற்று கானின் துஷ்டமிருகங்களின் வாய்க்கிரையாயிருப்பேன். அது மணற்பாங்கு நிலமாகியதால் எனது சரீரத்தில் காயம்படாமற் பிழைத்துக்கொண்டேன். என்றாலும் எனது சஞ்சலத்தைமாற்றுதற்கு ஆண்டவன்தவிர மற்றொருவரும் துணையில்லாமலிருந்ததால் சற்றுநேரம் அழுதுத் துடித்து அப்பால் என்மனதை யானேதேற்றிக்கொண்டு அங்கிருந்து பிரயாணமாயினேன். அந்தக் கானகமார்க்கமாய்ச் செல்லுந்தருணம், விருக்ஷங்கள் சூழ்ந்தடர்ந்து பயங்கரமா யிருக்கும். ஆரண்யத்தில் நடக்கச் சக்தியற்ற ஓர் காபிரிக்கிழவன் என்னைக் கண்ணுற்று மிகவும் மரியாதையுடன் முழங்காலின்மீது நின்றுக்கொண்டு, அப்பா யானெனது வயற்றுப்பசியினல் தத்தளித்து மரணத்தை எதிர்நோக்கினவன

யிருக்கின்றேன். விருக்ஷங்களின்மீ திருக்கும் கனிவர்க்கங்களை யாகிலும் பறித்துப் புசிப்போமென்றிடினும் எழுந்திருக்கச் சக்தியற்றவனுயிருக்கின்றேன். ஆகையால், எனை உனது தோளின் மீது தூக்கிக்கொண்டு காய்த்துக்கனிந்திருக்கும் விருக்ஷங்களருகிற் செல்வீராகில் அந்தப் பழதினுசுகளையாகிலும் பறித்துப்புசித்துக் களைதெளிவேனென்றனன். யானும்சரிதானென்றொத்துக் கொண்டு அநதக்காபிரிக்கிழவனைத் தோளின்மீது சுமந்துக்கொண்டு விருக்ஷங்களருகிற் போய்க்கொண் டிருந்தேன். அந்தப் பாவி கனிவர்க்கங்களைப் பறித்துப்புசித்துக் கொட்டையும் தோலும் எனக்குக்கொடுத்து, அடா வாகனமே நீ இதை புசித்துக் கொண்டிருவென்றனன்.

ஷம்ஷுத்தீன்:—சபாஷ்! ஈதென்ன வெகுவேடிக்கையான ஆள்தூக்கி உத்தியோகமா யிருக்கின்றனவே, அப்பா லெவ்விதமாயினீரோ, இதை கவனிக்கில் வெகு தமாஷாயிருக்கும்போற் காண்கின்றனவே?

அப்துல்அசீஸ்:—அப்பா! ஷம்ஷுத்தீன் நீ வாலிபனுகையால் வருத்தமுணராமற் பாஷிக்கின்றனே, ஐயா! அமீர்! அப்பால் நிகழ்ந்த விசேஷமென்ன!

அமீர்.—அஜரத் யான் அந்த விஸ்வாசகாதகனுகிய காபிரிக்கிழவனைச் சுமந்துதிரிந்தும், அவன் கிஞ்சிற்றும் விஸ்வாசமில்லாமல் எனை யோர் வாகனம்போல மதித்துக் காலினுல் உதைத்தும், கையினுல் தலையில் அடித்தும் அந்த மரத்தருகில் போ இந்த மரத்தருகில் போவென்றும் மிரட்டிக்கொண்டு தோளிலிருந் திறங்காமலிருந்தனன். யான் மிகவும் கோபத்துடன் சிரித்து, என்னடா கிழவா! சகாயம்புரிந்த எனக்கு அபாயத்தை விளைவிப்பதுபோல உன்குலத்திற்கிசைந்த குரூர துர்க்குண சேஷ்டையைச் செய்கின்றனையேயீ துனக்கு நீதியோவென்றேன். அந்ததுராத்மாகிஞ்சிற்றும் மனமிரங்காமல் தனதுகாலினுல் எனதுகழுத்தை மிகவும் உறுதியாய்ப் பிணைத்துப் பின்னிக்கொண்டு அடடா வாகனமே! யானுனது தோளின்மீதிருந்து கீழிறங்குதற்கு நம்மைப் படைத்தஆண்டவனுலு முடியாதென்று கடுகடுத்துச்சொன்னுன். அவ் வார்த்தையைக் கேள்வியுற்ற யான் வெஞ்சினமுற்று சீச்சீ துஷ்டப்பிசாசே! அற்பர்கட்குச் சகாயம்புரிந்திடில் ஆபத்துவிளையுமல்லவோவென்று திடீரென்று அவனைக் குப்புறவிழத்தள்ளி விட்டு ஓடிப்போயினேன்.

என, புகன்றவை வினவிய சபையோரனைவரும் கலகலவெனசிரித்துக்கொண் டிருந்தனரேயன்றி பதில் யாதொன்றும் புகல்வதற் கியலாதிருந்தனர். அச்சமயம் ஷம்ஷுதீன், தலையசைத்து ஐயா! எப்போதும் உத்தமர்கட் குதவிசெய்தால் உயிரைக்காப்பாற்றுவர். துஷ்டர்கட் குதவிசெய்தால் உயிரைப் போக்குவாரென்பதற்குத் திருஷ்டாந்தமாய் விஸ்வாச காதகனுகிய வேடனொருவன் தனதுஆபத்தையகற்றி ஆதரித்திரக்ஷித்த இரண்டு வானரங்களையும் கொன்றான். அஃதெவ்விதமெனின்.

விருத்தம்

வல்லியந்தனைக்கண்டஞ்சி மரந்தனிலேறும்வேடன்
கொல்லியபசியைத்தீர்த்து இரக்ஷித்தகுரங்கைக்கொன்றான்
நல்லவர்க்குதவிசெய்தால் நலமதுமிக்கதாகும்
புல்லர்கட்குதவிசெய்தால் உயிர்தனைப்போக்குவாரே.

என்னுந் தன்மையாய் நேரிடுமென்றனன். அமீர் அதிசயித்து, ஐயா அச்சரிதையினை விவரித்துரைப்பீரென்க. ஷம்ஷுதீன் புகல்வதாயினன்.

விஸ்வாசமற்ற வேடன்கதை.

அவனியோர் புகலருங்கீர்த்திவகித்த அமீர்சாஹேப்! ஓர் கானகத்திலிருக்கும் வனவேடன் தனது குலாசாரவழக்கப்படியே கரத்திற்றனுசேந்தி வனவிலங்கின் வேட்டையாடுதற்கு ஆரண்யமார்க்கமாய்ச் செல்கையில் ஓர் வேங்கை எதிருற்று அவனைக்கொல்வதற்கு ஓடிவந்தன. வேடன் மனமிரண்டு தனது உயிரைக் காப்பாற்றும் நிமித்தம் அருகிலிருக்கும் விருக்ஷங்களின்மீதேறிக்கொள்வதற்கு ஓடோடியும் சென்று பார்த்தும் எந்தவிருக்ஷமும் இவன் கைக்கடங்காத பருமனுயிருந்ததால் மனந்திகைத்து ஐயோ இன்றோடுவாழ்நாள்குறுகியதோவென தீர்மானித்து அழுதுக்கொண்டே வேங்கையின் பாய்ச்சலுக்குத்தப்பித்து விருக்ஷங்களைத் தாவுவதும், வேங்கைபின்றொடர்வதும் இவன் ஓடுவதுமாயிருக்கையில், அங்ஙனம் அடர்ந்து செழிப்புளதாகிய ஓர்ஆலவிருக்ஷத்தின்கிளைமீதில் வசித்திருக்கும் ஆண் பெண்களாகியஇரண்டுவானரங்கள் இவன்பரிதாபநிலையைக்கண்ணுற்று மனஞ்சகியாமல் அவனைக் காப்பாற்றவேணுமென்றநல்லெண்ணத்தினுல் குரங்குகளிரண்டும் ஓர்பெரிய கிளையின்நுனியில் உட்கார்ந்து தமதுமுழுபலத்துடன் அமிழ்த்தினஉடனே கிளை பூமியிற்றாழ்ந்தது, வானரங்க

ளின் சைகையைக்கவனித்தவேடன் திடீரென அவ்விருக்ஷத்தின்கிளை யைத் தாவிப்பிடித்து ஏறிக்கொண்டனன். புலியானது அதிவேகமா ய்ப்பாய்ந்து இவனிருக்கும் மரத்தினருகில் வந்து குரங்குகளைப் பார் த்து, ஓ மதியற்ற வானரங்களே! கரத்திற்றனுசேந்தி நம்போன்றமிரு கங்களை வதைக்கும் எமனைப்போன்ற வேடனுக்கு இடந்தந்தீரே! ஈதுமக்கு நீதியோ! அன்றியும், எனக்கு மெத்தவும் பசியாயிருக்கின் றது, அவனைக் கீழேதள்ளிவிடுவீராகில் யான் அவனைக் கொன்று புசி த்துப் பசிதணித்துக் கொள்ளுவேனென்றது.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற குரங்குகளிரண்டும் கோபித்து ஓ! வேங்கையே உயிரைக்கொல்லவந்த எமனைப்போன்ற பகைஞரா யிருந்திடினும் அபயமெனவந்தால் ஆதரித்தல் வேண்டுமன்றோ! அஃ தன்றி நீர்மேற்குமிழியைப்போன்ற நமது சரீரத்தை அழியாதவஸ்து வென தீர்மானித்து ஆவிபோகுமேயென அலறித்துடித்து அடைக்க லம்புகுந்தவரை ஆதரியாமற் றள்ளிவிடுவதுதர்மவிரோதமாகும், ஆத லால் எமது உயிர்போனாலும் இவனைக் கீழேதள்ளிவிடமாட்டோம். நீர் வீணாய்க்காத்திருப்பது சரியல்ல எங்ஙனமாயினும்சென்று உனது வயற்றிற் கிரைதேடிக்கொள்வா யென்றனன். வேங்கைக்குக்கோபம் பிறந்து சரி! சரி!! நல்லதிருக்கட்டும் எவ்விதமாயினும் இவனைப்பிடித் துக் கொன்றுதின்னுமற்போனால் யானும் வீரபராக்ரமம்பொருந்திய வேங்கையாவென்று சபதஞ்செய்துக்கொண்டு விருக்ஷத்தடியிற் படுத் துக்கொண்டிருந்தது. அச்சமயம் வேடன் எவ்விதமாய்க் கீழிறங்கு வான். அவனுக்கு மரணகாலஞ் சமீபித்துவிட்டதெனும் மனசஞ்ச லமே பெரிதாயிருந்தது, அவ்வித மிருந்தபோதினும் வானரங்களின் சகாயத்தினால் யாதோ ரபாயமுமின்றி யிருந்தனன், பகற்காலமெல் லாமிவ்விதமா யிருந்து, அந்திப்பொழுதானவுடனே நிசி வந்தெய்திய தால் குரங்குகளிரண்டும் வேங்கைக்கு அகப்படாமல் அருகிலிருக்கும் மரங்களின்மீது ஜிவ்வென் றெகிரிப்பாய்ந்து அவ்வனத்தில் அடர்ந்து செழிப்புற்றிருக்கும் விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்திருக்கும் இனி மைசேர் கனிவர்க்கங்களாகிய மா, பலா, வாழை, அன்னாசி, கிச்சிலி, மாதுளை, முதலாகிய பழதினுசுகளைப் பறித்துப் புசித்துக் களைதெளி ந்து தம்மை நம்பிவந்திருக்கும் வேடனுக்கு வேண்டியகனிவர்க்கங்க ளும் பறித்துக் கொண்டுபோய்த் தமது வாசஸ்தானமாகிய விருக்ஷத் திற்போயமர்ந்து அவனுக்குக்கொடுத்துப் புசிக்கச்செய்தன, அவ்வே டன் மனோல்லாசத்துடன் வானரங்கள் தந்த பழதினுசுகளைப் புசித்

துப் பசியாறினன், இவையனைத்துங் கண்ணுற்று வேங்கைக்கு ஆற்றொணு ஆச்சரியமும் கோபமும்விசேஷித்தன. அப்பால் இரவுமூன்று ஜாமமாயினபிறகு வேடனுக்கு நித்திரையணுகியதைக் கண்ணுற்ற வானரங்களிரண்டும் தமது கைகளைக்கோர்த்து வேடனுக்குசைகைக் காண்பித்தன. அவன் ஊஞ்சல்மீது சயனிப்பவன்போலகுரங்குகளின் கையிற் சயனித்து நித்திரைசெய்துக்கொண்டிருந்தனன். அச்சமயம், வேங்கை அதிசயித்து ஓ! மதியில்லா குரங்குகளே யான் மெத்தப்பசியாயிருக்கின்றேனே இனியாகிலும் இவனைக் கீழேதள்ளிவிடுவீராகில் யான்புசித்துப் பசி தணிந்துக்கொள்ளுவேனென்று கர்ச்சனையுடன் புகல, அவைகளிரண்டும் கிஞ்சிற்றும் சம்மதியாமல் இனி அஜாக்கிரதையாயிருந்தால் நித்திரையே சத்துருவானதுபோல இவ்வேடன் தூக்கத்தினுற் புரண்டுருண்டு கீழே தவறிவீழ்ந்து வேங்கையின்வாய் பக்ஷணமாய்விடுவானெனத் தீர்மானித்துத் தமது கைகளைப் பலமாய்க் கோர்த்துக்கொண்டு பெற்ற தாயார் பிள்ளையைக் காப்பாற்றுவது போல அவனை ஆதரித்தன. அவ்வேடனும் நித்திரைதெளிந் தெழுந்திருந்தனன். அப்பால், குரங்குக ளிரண்டும் தமது வழக்கம்போல் ஒன்றையொன்று பிடித்துக்கொண்டு நித்திரைபுரிவதாயின, அச்சமயம் வேங்கைக்குப்பசியும கோபமும் அதிகரித்ததால் விருக்ஷத்தைப் பார்த்தவண்ணமே உறுமிக்கொண்டிருந்தது, அப்போது வேடன் சற்றுயோசித்து அடடா? இதுதான் நல்லதருணம் இந்த இரண்டுகுரங்குகளையும் கீழேதள்ளிவிட்டால் வேங்கை கொன்றுதின்றுபசியாறி ஓடிப்போய்விடுமென மதித்து வானரங்களிரண்டும் நித்திரைபுரியும் சமயம் திடீரென தள்ளிவிட்டனன். குரங்குகள் சபீலென புலியின் வாய்க்ககப்படாமற் பூமியிற்குதித்தோடி மறுபடியும்பக்குவமாய்மரத்தின்கிளையிற்பாய்ந்து பழையபடியே வந்துட்கார்ந்துகொண்டன அச்சமயம், வேங்கை அவைகளை நோக்கி, வானரங்களே பார்த்தீர்களா? அந்த வேடனுடையசெய்கையை கிஞ்சிற்றும் தயாளமின்றி செய்நன்றிமறந்தவனுய் உங்களைப் பூமியிற்றள்ளிக் கொல்வதற்கெண்ணினுன், ஆகையால் இனியாகிலும், அவனைத் தள்ளுவீர்களென்க, வானரங்கள் சம்மதியாமல் ஐயா! புலிராஜனே நீரேன் வீணெண்ணங்கொள்கிறீர் எமது ஆவியகன்றிடினும் அபயமென வந்தவரை ஆதரியாமற் போவோமோவென்று பலவித நீதிமொழிகளைப் புகன்றன. இவைகளின் வாய்மையனைத்துங் கவனித்த வேங்கை வியப்புற்று நம்மைப்போன்ற மிருகங்கட்கும் இவ்வளவு பேரறிவு விளங்கியிருக்கின்றனவேயென, ஆச்சரியத்துடன் அவணிருந்து மீண்டு ஆரண்யமார்க்கமாய்ப்

போய்விட்டன. அப்பால் நிசியகன்று அருணோதயமானவுடனே வானரங்களிரண்டும் அவனைக் கீழிறங்கும்படி சைகைகாண்பித்து தாங்களும் அவனுடனே விருக்ஷத்தை விடுத்திறங்கி அவனுக்குத் துணையாய்ச் செல்லும்போது வேடன் சற்றுயோசித்து அடடா? இந்தக்குரங்குகளிரண்டும் நன்றாய்க்கொழுத்திருக்கின்றன, இதனைப்பக்குவமாய்ச் சமைத்துப்புசித்தால் வெகுநேர்த்தியாய் நாவிற்கினிய நல்லுணவாயிருக்குமெனமதித்து, அந்த வானரங்களிரண்டும் வரிசையாக முன்னற்செல்லும்தருணம் இவன் பின்னால் நடந்தவண்ணமாய்த் தனது கரத்திற்றங்கிய தனுசினால் ஓங்கியடித்தனன். அந்த அடியினால் சதிபதிகளாகிய அந்தவானரங்களிரண்டும் இறந்து சொர்க்கபதவியிற் போய்ச்சேர்ந்தன. அப்பால், வேடன் அவ்விரண்டையும் ஓர்மரத்தின்கிளையிற்கட்டித் தோலுரித்து அவைகளின் இறைச்சியை வஸ்திரத்திற்கட்டிக்கொண்டும் தோலை முதுகின்மீதுபோட்டுக்கொண்டும் போயினன். அச்சமயம், முன்னம் இவனைத் துரத்திக்கொண்டுவந்த வேங்கை எதிரில்வந்து சபாஷ்? இதோ வேடன் அகப்பட்டானெனத் தீர்மானித்து புசிப்பதற் கெத்தனிக்கையில் அவன் கையிலிருக்கும் குரங்குகளின் தலையையும் முதுகின்மீதிருக்கும் தோலையும்பார்த்து அடடா! இவன் விஸ்வாசதுரோகமாய் இவனைக்காப்பாற்றிய குரங்குகளைக் கொன்றுவிட்டானென்றுணர்ந்து இந்தப்பாவியை ஆண்டவனே தண்டிப்பார். இந்தப் பாபசொரூபியைத் தின்றாலும் தோஷமணுகுமென நிந்தித்து அப்பால் ஓடிப்போயின. மர்மரகஸ்ய முணராதவேடன் சற்று நிதானித்து அடடா நாம்செய்தசாமார்த்தியம் வெகு தமாஷானதுதான். இந்தக்குரங்குகளைக்கொன்றுதோலைப்போர்த்துக்கொண்டிருந்ததைக் கண்ணுற்ற வேங்கை மனமிரண்டு ஓடிப்போயினவென சந்தோஷித்தவனாய்த் தனதுவீட்டுக்குபோய் நிகழ்ந்தவையனைத்தும் தனதுமனைவி மைந்தரிடம்புகன்று, குரங்குகளின் இரைச்சியையும் கொடுத்தனன். வேடச்சி அதனைப்பக்குவமாய்சமைத்துத் தனதுமணாளனுக்கும் மைந்தனுக்கும் படைத்துத் தானும் புசித்து மகிழ்வெய்தி யிருக்கையில், விஸ்வாசகாதகனாகிய வேடனுடைய மனைவி மைந்தர் திடீரெனமரணமுற்றனர். அந்தப் பாதகனும் வியாதியால்மெலிந்து உயிர்போகாமல் வயற்றின் பசியாற்களைத்து நாள்தோறும் அவதிப்பட்டுக்கொண்டிருந்தனன். ஆகையால் யாதாமொருவரும் நன்மை செய்தால் நலம்பெறுவர். தீமைசெய்தால் துன்புறுவர். அத்தன்மையாசவே அந்தக் காப்பிரிக்கிழவனுக்கு நீர் உபகாரம்செய்தபடியால் சுகானந்தமாயிரு

க்கலாயினீர், அந்த துஷ்டனேவெனின் அந்தக்கானிற்றுனே பலவித துயருற்று மரணவேதனையால் அலைச்சறப்படுவா னென்றனன்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அமீர் சிரித்து, அப்பா! அஃதென்ன கஷ்டம் அப்பால் நிகழ்ந்தவை கவனிப்பீராகில் வெகுபயங்கரமான ஆச்சரிய காக்ஷியாயிருக்குமென்றனன், அருகிலிருந்த அப்துல் அசீஸ் யோசித்து அடடா! ஈதென்ன இவர் நம்மிலும் வெகு துயருற்றவர்போற் காண்கிறதேயென மதித்து வினவுதலாயினன்.

அப்துல் அசீஸ்:—சாஹேப்! நீர் அனுபவித்த கஷ்டகிஷ்டேரம்கொஞ்சம் சொல்லும்போதே கேட்போர் மனதை வெகுவித சஞ்சலத்தில் ஆழ்ந்திடச்செய்கின்றனவே, மற்றவையும் கேட்கில் எவ்விதமாயிருக்குமோ அவையனைத்தும் யாம்கவனிக்கவேண்டும் விவரித்துரைப்பீர்.

என, புகன்றவைவினவிய சபையோரனைவரும் வியப்புற்றவராய் அடடா! ஆண்டவனுற்ஜனித்த மாந்தர்களித்தியாதி துயரனுபவிப்பரெனின் இதைவிட ஆச்சரியமும்வேறுளதோ? அன்றியும் சுகதுக்கம் வாய்ப்பது தெய்வாதீனமென்றிடினும் அனுபவிக்கும் மனிதனுக்கு எத்தகைய கஷ்ட கிஷ்டேரம் வந்தெய்துமென்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண் டிருக்கையில் ஷம்ஷுதீனும் வெகு பரிதாபமுற்றவனுய்த் தானனுபவித்தவை யனைத்தும் மறந்து இந்த அமீர் மிகவும் துயருற்றவர். இவரைப்போல் யாதொருவரும் துன்பமடைந்திலரென்று சொல்லிக்கொண்டிருந்தனன், ஷாஜஹான் சற்று யோசித்து ஈதென்ன நமது எஜமான் பஞ்சத்திற்சிக்கிய பரதேசி கெட்டுப்பிழைத்த காரணம்போற் பகர்ந்தனரோ இவையனைத்தும் உண்மையாயிருக்குமோ! இவரைவிட நாமே சிறந்தவனு யிருக்கிறுே மென்பதற்கு ஆக்ஷேபனையில்லையே இவரொன்ன மாடு, ஒட்டை, குதிரையைப்போல ஆள்தூக்கி உத்தியோகத்திலு மிருந்தனரென்கின்றுரோ. சீச்சி! இவ்வளவுதானே இவருடைய சம்பத்தியல்பு, இன்னும் ஏதேதோ கஷ்டமடைந்தனர்போற் சொல்கின்றுரோ இதனையும் சற்றுகவனிப்போமென்றிருந்தனன். அச்சமயம் அப்துல்அசீஸானவன் அமீரைப்பார்த்து, சாஹேப்! நீர் பகர்ந்தவையனைத்தும் பரிதாபமா யிருந்திடினும் இன்னும் ஏதேதோ கஷ்டமடைந்தீர்போற் பகர்ந்தீரே அதனையும் யாங்கள் கவனித்துணர்க விவரித்துரைப்பீரொன்று வினவுதலும் அமீர், அவ்விதமே புகலுதும் கவனிப்பீரென தனது சிறுமையின் கொடுமையைச் சபையோர்முன் சொல்வதாயினன்.

அமீர்:—யான் காபிரிக்கிழவனிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஆரண்யமார்க்கமாய் வருகையில், வழியிலெதிருற்ற கிளைவழிமார்க்கமாய்ச் சென்றேன். அங்ஙனம், சிலமுசாபரிகள் மூட்டை முடிச்சுகளுடனும் ஒட்டைகளின்மீதேறி சென்றனர். யானும் அவர் பின்பற்றி சென்றேன்; அந்திப்பொழுதானதால் அவர்களனைவரும் அவ்வனத்தின் பூங்காவிற்சென்று சாமான்களை இறக்கி ஒட்டகங்களை அவிழ்த்துஜலத்திற்குளிப்பாட்டி மரக்கிளையிற் பிணைத்துவிட்டு தாங்களும் ஸ்நானபானநேமநிஷ்டையனைத்தும்புரிந்து நிமாஸ்படித்து ஆண்டவனைத்தொழுது அங்ஙனம் சமயற்கூடம் தயார்செய்து நாவிற்கினிய நல்லுணவாதிகளாகிய பலகாரங்களுடன் அறுசுவை பதார்த்தத் திவ்யான்ன சுகபோஜனம்சமைத்து யாவரும் ஓரிடத்தில் ஒன்றுயமர்ந்து பாத்திரங்களில் யாவையும் வைத்துக்கொண்டு மதுமாம்ஸ பக்ஷணதிகளுடன்சுகானந்தமாய்ப் புசித்து பாத்திரங்கழுவி வைத்துவிட்டு உக்காக்கவில் வாசனைவீசும் குடாக்குகளைப்போட்டு நெருப்பிட்டு அவரவர் வாயில்வைத்துக்கொண்டு ஆளுக்கொரு தம்மிழுத்து தமாஷாய்ப் பாடியாடிக்கொண்டிருந்தவர் எனை கவனித்தவருமல்ல, யானும் அவர்களிடம்சென்று யாதொன்றும் விசாரித்தவனுமல்ல ஆனல் எனக்கு மெத்தப்பசியாயிருந்தமையால் அவ்வனத்தின் விருக்ஷாதிகளிற் காய்த்துக் கனிந்திருக்கும் இனிமைசேர் பழதினுசுகளிற் சிலவற்றைப் பறித்துப்புசித்து நன்னீரருந்திகளைதெளிந்து சற்றுநேரம் உட்கார்ந்து எனக்குற்ற ஆபத்தை நினைந்து அடடா? நாம் வீட்டைவிட்டு புறப்பட்டவேளையிலென்ன அவசகுணந் தோற்றினவோ அதனுற்றான் வரும்வழியிற் புலியின்வாய்க்குத் தந்தையைப் பறிகொடுத்து யானும் வீட்டுக்குத்திரும்பாமற் கானகவாசியாயலைகின்றேனேயென விசனப்பட்டுக்கொண்டிருக்கையில் அங்கிருந்தமுசாபரிகளனைவரும் பிரயாணமாயினர், யானும் அவர்களுடனே செல்லுந்தருணம், அருணோதயமாயின. சூரியனும் கீழ்த்திசையில்உதயமாயினன். காதவழி தூரத்தில் மாடமாளிகை கூடகோபுரம் தேவாலயங்களும் தோற்றின யான் அவைகளைக்கண்ணுற்று மனசஞ்சலந்தீர்ந்தவனாய் இனி நமதுதுயர் தவிர்ந்ததென அதிவேகமாய் அந்நகரிற்பிரவேசித்து இராஜவீதியாய்வருகையில் அரண்மனைதோற்றக் கண்ணுற்று வியப்புற்றவனாய் அடடா? இத்தகையதாய் நவரத்னங்களிழைத்த மதிற்சுவர்களமைந்த அரண்மனையில் மந்திரிபிரதானிய

ருடன் அரசுரிமைபுரியும் மன்னன் எத்தகைய பாக்யவானு யிருப்பனே? அன்றியும் பூலோக இந்திர னிவனென்பதற்குச் சந்தேக மில்லையென மதித்துக் கொண்டிருக்கையில், ஆகாயத்தி லிருக்கும் அப்சரஸமாதர்களைப்போல் அரணின் உப்பரிகையின் மீது சில சேடியருடன் அழகானந்த தேஜஸமைந்த முகவஜீகர மிலகும் ஓர் கன்னிகை ஜோதிப்ரகாசமாய்த் தோன்றினள். அவ ளைக் கண்ணுற்ற யான் மதிமயங்கி மெய்சோர்ந்து, யாதொன் றுந் தோற்றுமலும் யான் விழித்திருப்பவனென் றுணராமலும் கனவுகாண்பதாய் நினைத்திருந்தேன். அச்சமயம் நான்கு மனி தரோடிவந்து எனைப்பிடித் திழுத்துக்கொண்டு போயினர். அத் தருணம் எனதுளம் பலவிதமாய் சிந்தித்தன. என்றாலும், வெறி யனைப்போ லவர்களுடனே அரண்மனைக்குச் சென்றேன். மந் திரி பிரதானிய ரனைவரும் என்னை உபசரித்து மங்களஸ்நானஞ் செய்வித்து, ஆடை ஆபரணங்களா லெனை சிங்காரித்து, யான் காதலுற்று மதிமயங்கியமாதரசியை அழைத்துக்கொண்டு வந்து எனக்குக் கலியாணஞ் செய்து இளவரசு பட்டமுந் தரித்து மன மகிழச்செய்தனர். யான் அந்நகரத்திற்றுனே சில நாள் வரையி னும் பூலோக இந்திரனென புலவராற் புகலரும் பெருமைவாய் ந்து சுகானந்தமா யிருந்தேன்.

என, பகர்ந்தவை வினவிய சபையோ ரனைவரும் வியப்புற்றவ ராய், ஆ! ஹா! இவ்விதமாய் சுக மனுபவித்தவர் இத் தொல்லுலகி லுளரோவென ஆச்சரிய மடைந்து அமீரை வெகுவாய்ப் புகழ்ந்து, முகஸ்துதியாய்ப் பாஷித்துக் கொண்டிருக்கையில், அருகிலிருந்த ஷாஜஹான் தமது எஜமானுக்குற்ற நற்கால திசையில் சற்றேனும் நமக்குக் கிடைத்திருந்தால் யான் அந்நகரினை விடுத்து வருவேனே ஆ! ஹா! ஆண்டவன் என்னைப் படைத்ததனுல் என்ன சுகத்தை யனுபவித்தேன். ஐயோ! காலமெல்லாம் கஷ்டத்தை யனுபவித்து, இன்னும் கலியாண மில்லாமலும், கண்ணுற்ற பெண்களைப் பார்த்து காதலுற் றலைகிறேனே கர்த்தனே யென்று பெருமூச்சு விட்டனன். சிலர் பொறுமை வகித்து நம்மைப்போன்ற மனிதன் அந்நாளினும் அழகானந்த முகவஜீகர தேஜஸமைந்த அரச புத்திரியை மணந்து இராஜயோகமா யிருந்தனன். இந்நாளினும் வறுமை நோயின்றி பெ ருமைவாய்ந்த ஐஸ்வரியத்திற்சிறந்த தனவந்தனென் றெவரும் புகழ்ந் துரைப்ப மனைவி மைந்தருடன் சுகானந்தமா யிருக்கின்றனன், யாம்

ஜாண்வயற்றை வளர்ப்பதற்கும் முடியாமற் பேய்போ லலைந்து விருந்து கிடைக்கும் வீடுகள் தோறும் நாய்போல் திரிந்து சோறுகண்டவிடமே சொர்க்கலோகமென மதித்து, உயிரிருந்தும் பெருமையின்றிய நடை பிணம்போலுலாவித் திரிந்து, சோற்றுக்குச் செலவும், பூமிக்குப் பாரமுமா யிருக்கின்றேனே யென வயறெரிந்து தன்னைத் தானே வெறுத்துக்கொண்டு விசனப்படுவதாயினன். சிலர் இம்மஹானுபாவன் தர்மகுணத்திற் சிறந்தவரானதினால் எந்நாளினும் சுகானந்தமாகவே யிருக்கின்றார். ஆனாற் சில சமயம் ஆபத்தெய்திடினும் ஆண்டவன் சகாயத்தினால் யாதொரு கெடுதியுமின்றி தப்பித்துக்கொள்ளுகின்றார். ஆகையால், யாவரா யிருந்திடினும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை வேட்கை யென்னும் அஷ்டவித துர்க்குணத்திலும் சிக்காமல், நற்குணத்தின ராயிருந்திடில் நலம் பெறுவோம், அன்றியும், நன்மை செய்தால் நலம் பெறுவர், தீமை செய்தால் துயருறுவரென்பதற்கு யாதொரு சந்தேகமு மிலதென மதித்து அமீரை வெகுவாய்ப் புகழ்ந்தனர்.

இங்ஙனம், சபையோரனைவரும் ஒருவர்க் கொருவர் பலவிதமாய்ப் பாஷித்துக் கொண்டிருக்கையில், அப்துல் அசீஸானவன் அமீரைப்பார்த்து ஐயா! நீர் அரச புத்திரியை மணந்து, அவ்வளவு சுகானந்தமா யிருந்தீரே அந்நகரினை விடுத்து இந்நகரினில்வந்து, எம்மைப்போன்ற வர்த்தகரா யிருப்பதாயினீரே ஈதென்ன விந்தை! ஆ! ஹா!! உலகிற் ஜனித்த மாந்தர்கட்கு இராஜயோகம் கிடைப்பதே அருமையாச்சுதே நீர் அரச புத்திரியின் சரச நாயகனாயிருந்தும் பிரியமின்றி யவர்போற் பிரிந்து, இந்நகரில் வரத் தகுமோ? இன்னும் சிறிதுநாள் வரையினும் அந்நகரி லிருந்தால் இராஜாதிபதியா யிருப்பீரே யென்றனன்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அமீர் கலகலவென சிறித்து, ஐயா! அந்நகரினுற்ற ஓர்வித அநியாய துர்ப்பழக்கத்தின் குரூரபயங்கர சேஷ்டையைக் கவனித்திடில் நினைக்குந் தோறும் பயமாயிருக்கின்றனவே, அச்சமயம் எனக்குற்ற ஆபத்தை நினைக்குந்தோறும் திகிலாயிருக்கின்றன. அந்நாளில் ஆண்டவன் எனக்கு நல்லயுக்தியைத் தந்ததனால் யான்உபாயமாய்த்தப்பித்துக்கொண்டுவந்து, உங்கள்முன் யானுமொரு மனிதனா யுலாவுகின்றேன். இல்லாமற்போனால், யான் இறந்து மூன்று வருஷமாய் விடுமென்று பரிதாபமாய்ப் புகன்றனன்.

சபையோ ரதிசயித்து ஈதென்ன விபரீதம்? இவர் சரித்திரத்தைக் கேட்கில் கொஞ்சநேரம் பயங்கரமாகவும், கொஞ்சநேரம் தமாஷாகவும் கொஞ்சநேரம் சந்தோஷமாகவும், கொஞ்சநேரம் பற்பலவித வேடிக்கையாகவு மிருக்கின்றதேயென ஒருவர்க்கொருவர் பாஷித்துக்கொண்டிருந்தனர். ஷம்ஷுதீன் சற்றுநிதானித்து, ஐயா உமக்கு இராஜயோகம் கிடைத்தும் பயங்கரமான ஆபத்துற்றகாரண மென்ன வென்று வினவ, தனக்கு நேர்ந்த விபரீத கஷ்ட நிஷ்டூரத்தை விளம்புவதாயினன்.

அமீர்:—ஐயா! எனக்கு அகஸ்மாத்தாய்க் கிடைத்த இராஜரீகத்தின் விபரீத தொடுவழக்கின் அநியாய ஆபத்தைச் சொல்லுகின்றேன் கவனிப்பீர். அஃதெவ்வித மெனின் யான் அந்நகரின் இளவரசு பட்டந்தரித்துக்கொண்டு இராஜனுக்குப் பதிலாய் யானே அரசாங்கத்தியல்பினைக் கவனித்து, சர்வாதிகாரனு யிருந்தேன. ஆனல், அந்நகரின் துர்ப்பழக்க மெவ்வித மெனின் புருஷனிறந்தால், மனைவி மற்றோர் விவாகஞ் செய்துக் கொள்ளலாம், மனைவி இறந்தால் புருஷனையும் மயானத்திற் சேர்த்து விடுவது மா யிருந்தது, அவற்றிற் கிசைந்தனவாய் இராஜகுமாரத்தியாகிய எனது மனைவி சிலநாள் வியாதியால் மெலிந்து மரணமுற்றனள். ஸ்திரீகளெல்லாம் அவளுக்கு ஸ்நானஞ் செய்து வைத்து சிங்காரித்தனர் அரசன் மந்திரி, பிரதானியர் நகரவாசிக ளனைவரும் கிஞ்சிற்றேனும் விசனமின்றியவராய் அந்நாளை ஓர் நந்நாளாய் கொண்டாடி என்னையும் முத்துச் சிவிகையின்மீது அந்தப் பிரேதத்தின் பக்கத்தில் உட்காரவைத்து பல்லக்கைத் தூக்கிக் கொண்டு மயானத்தில் வந்திறக்கி அங்ஙனம் அவர்கள் வழக்கத்திற் கிசைந்த சடங்குக ளனைத்தும் நடாத்திவிட்டு, மயானத்தின் கதவைத் திறந்து யாவருமுள்ளே சென்று பிரேதத்தைப்பள்ளத்திற் புதைத்து விட்டு கோரியின்மீது பட்டுத் வஸ்திரத்தினல் மூடி, மணமிகுந்த மல்லிகை மலர்சரங்களிட்டு மூன்று ரொட்டியும், ஒரு பாத்திரத்திற் ஜலமும் வைத்துவிட்டு என்னை அங்ஙனமே யிருப்பாயென் றுரைத்து சகலரும் வெளியிற்போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டனர். யான் மர்ம ரகஸ்ய முணராதவனுகையால் என்னமோ ஏதோவென்று அங்ஙனமே உயிரில்லா பிணங்களுடன் யானொரு உயிர் பிணமாயிருந்தேன். வெகு நேரமாயிற்று, வெளியிற்போனவர் மறுபடியும் திரும்ப

வில்லை, யான் மனந்திகைத்து குடுகுடுவென் றேடிப்போய் கத வைத்திறப்பதற்கு முயற்சி செய்தும் வெளிப்பக்கம் தாளிட்டிருந்ததால் மூடினதாள் திறக்கப்பட வில்லை, எனக்குப் பயமும் பசியும் அதிகரித்தது என்ன செய்வேன். தலையைப் பூமியில் முட்டிக் கொண்டேன், முகத்தி லறைந்துக் கொண்டேன், அழுதேன், துடித்தேன், என்னைத் தேற்றுவா ரருகிலில்லாமையால் மனந்துணிந்து கோரியருகில்வந்து, மூன்று ரொட்டிகளையும் புசித்து, பாத்திரத்தி லிருக்கும் ஜலத்தைக் குடித்துவிட்டு "சுடுகாட்டின் வெட்டியான் பிணத்திற்குக் காவலிருப்பதுபோல" அந்தக் கோரி முழுதும் சுற்றிக்கொண்டு வருகையில் சிலகோரியருகில் ஒவ்வொரு மனிதன் இறந்துகிடப்பதும் ஓர் கோரியண்டை ஓர் மனிதன் சாவதற்குச் சமயமாய்த் தத்தளிப்பதையும் பார்த்து மனமிரண்டு அவனை விசாரித்தேன், அவன் அந்நகரின் வழக்கத்தையெல்லாம் புகன்று திடீரென வீழ்ந்திறந்தனன், எனக்கு மறுபடியும் பயங்கர மதிகமாயிற்று, நித்திரையு மில்லை ஆண்டவனைத் தொழுது, ஜெகரக்ஷகா! யான் அண்டினஇடமும் அநியாயமாயிற்றே யென அழுதுக்கொண்டு அந்தக் குகைவழியே வெகுதூரம்சென்றேன் அருணோதயமாயிற்று, சூரியனும் பிரகாசித்தனன். அந்தவெளிச்சத்தை உற்றுப்பார்த்தேன் கடற்கரையும் அலைகளின் சப்தமும் கண்டு அம்மார்க்கமே சென்று கடலருகில் வந்தேன், அங்ஙனம் ஓர் கப்பல்போய்க் கொண்டிருந்தமையால் கைக்குட்டையை விசிரினேன். மாலுமி மரக்கலத்தைக் கடற்கரையிற் கொண்டு வந்தனன், யான் அதன்மீது ஆரோகணித்து யான் அனுபவித்த துயரனைத்தும் அவன் பாற் புகன்றேன். அவன் பரிதாபமடைந்து, தனது சுயதேசமாகிய இந்நகரிற் கொண்டுவந்து விடுத்தனன், இச்சமயம், யானும் உங்களைப்போன்ற மனிதனு யிருக்கின்றேன்.

என, கண்ணீர் சொரிந்துக் கதறியழுது களைத்து வீழ்ந்தனன், சபையோ ரனைவரும் விசனமடைந்து அமீர் மனதைத்தேற்றி பந்நீர் தெளித்து சற்றுநேரம் விசிரிக் கொண்டிருந்தனர். அமீர் மெல்லென எழுந்து, பந்நீரினல் முகங்கழுவிக்கொண்டு பஞ்சவர்ண பட்டுத்துவாலையினல் முகத்தைத் துடைத்துக்கொண்டு தண்ணீரருந்தி, தாகவிடாய்தணிந்து ஐயா! அப்துல் அவீஸ் யான் அனுபவித்த கஷ்டநிஷ்டூரத்தைக் கவனித்தீரன்றே, ஆகையால் யாதா மொருவருக்கும் சுகதுக்

கம் வாய்ப்பது உலகியல் பின்றி வேறுளதோ? மனிதராய் ஜனித்தோர் உடலில் உயிருள்ளவரையினும் வெகு ஜாக்ரதையாய் ஜீவித்தல் வேண்டும். அஃதெவ்வித மெனின் பொய் சொல்லுதல், கொலை செய்தல், களவுபுரிதல் கள்ளுண்டல், பிறர் பொருளை இச்சித்தல் முதலாகிய துர்க்குணங்களை விலக்கி நன்மார்க்கத் தியல்பினை யனுசரித்து பக்தி யானந்தமா யிருக்கவேண்டு மென்று, பற்பல நீதிவாக்யங்களை பாஷித்துக் கொண்டிருந்தனன். அந்திப் பொழுதான வுடனே யாவருமெழுந்திருந்து, ஸ்நானபானஞ் செய்துக்கொண்டு ஆண்டவனைத் தொழுது போஜன சாலையிற் சென்று யாவரும் ரவுண்டு சோபாக்களின்மீது உட்கார்ந்திருந்தனர். அச்சமயம் சுயம்பாகிகளனைவரும் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனாதிகளுடன் நாவிற்கினிய நல்லுணவாதிகளாகிய மதுமாம்ஸ பக்ஷணாதிகளும் வெள்ளிப்பாத்திரத்திற் கொண்டுவந்து வைத்தனர். அமீர் அப்துல்அசீஸ், ஷம்ஷுதீன் முதலான ஆண்பிள்ளைகளும், அவர்கட்கு எதிரில் வீற்றிருக்கும் மாஹிஜாபின் முதலான ஸ்திரீஜனங்களும் மிகவும் மனக்களிப்புடன் அருகில்வைத்திருக்கும் கிளாஸுகளில் சாராயங்களைவார்த்துக் குடித்து மாம்ஸ வகைகளைப்புசித்து மதோன்மத்தராய் வெறியதிகரித்து ஒருவர்க் கொருவர் வேடிக்கையாய்ப் பாடிக்கொண்டு அன்ன பதார்த்த மனைத்தும் புசித்துப் பசிதணிந்தபிறகு யாவரும் எழுந்திருந்து கைவா யலம்பிக்கொண்டு தாம்பூலம் தரித்து வாசனை திரவியங்களைத் திரேகத்திற் பூசிக்கொண்டு அவரவர்க்கிசைந்த விதமாய் அடிமையாட்களாற் சிங்காரித்திருக்கும் மஞ்சத்திற்போய் சயனித்து நித்திரைசெய்து அருணோதயத்தில் யாவரு மெழுந்திருந்து ஆற்றிற்சென்று ஸ்நானபானஞ் செய்துக்கொண்டு பலகாரபக்ஷணாதிகளை யருந்தி சந்தோஷசித்தரா யிருக்கையில் அமீரானவன் மாஹிஜாபின் தேஜஸமைந்த முகவஜீகரத்தைக் கண்ணுற்று மதிமயக்க முற்றவனுகையால், அந்தப் பெண்ணைக் கலியாணஞ் செய்துக்கொண்டு காதற் றணியவேண்டு மெனும் விருப்பத்தினல் அப்துல்அசீஸுக்குச் சொல்வதாயினன்.

அமீர்:—அஜாத் நீர் நற்குணத்தின ராகையால் உமக்குற்ற கஷ்டகீஷ்ரேமனைத்தும் ஒழிந்தன. இனி யாதொரு மனவருத்தமும் உமக்கணுகாது, அன்றியும், நீர் எமது இனத்தினராகையால், எனது சம்பத்தனைத்தும் உமக்கே சுவாதீனமாயிற்றென் றெண்ணுவீர் ஆனல் என்மனதைப்போல உமதுளமு மிருக்குமாகில் உத்தமமா யிருக்கும்.

அப்துல் அசீஸ்:—சாஹேப்! நீர் அவ்வித மன உறுதியாயிருக்கையில் யான் விஸ்வாசமற்றவனாவேனோ? அன்றியும் உப்பிட்டவர்களை உயிருள்ளவரையினும் மறக்கலாகாதெனும் நீதிவாக்கியத் தியல் பிற் கிசைந்தவிதமே யானுமைவிட்டுப்பிரிந்திடேன். யான் எனது மக்களுடன் திக்கற்ற பரதேசியைப்போல சித்தந் திகைத்து கடற்கரையில்நின்று கண்ணீர்சொரிந்து கதறியழுகையில், அஞ்சாதீரென்று ஆதரித்திரக்ஷித்து உமது சமுகம் அழைத்துவந்த ஷாஜஹானையும், உம்மையும் எனதிருநேத்திரம்போலமதித்திருப்பேன். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லையென்றெண்ணுவீர்.

அமீர்:—ஆம் அதற்கென்ன ஆக்ஷேபனையா? இந்த ஷாஜஹானும் வெகு விஸ்வாசமுள்ளவன் அவனுக்குத் தாய்தந்தை அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் உற்றார் உறவின் முறையா ரெவரு மிருந்தும் எனது சகோதரனைப்போற் சதாகாலமும் விட்டுப் பிரியாதிருக்கின்றனன். யானும் அவ்விதமே எனது கஜானாவின் திரவுகோலையும் அவனிடந்தந்து வீட்டின் வரவு செலவையும் பார்த்துக் கொள்ளும்படியே உத்திரவு செய்திருக்கின்றேன். அன்றியும், அவனால் எனக்கு வெகு நன்மை விளைந்திருக்கின்றன தற்சமயமும் எனது உயிர்த்தோழரைப்போன்ற உம்மை என்முன் அழைத்து வந்தனன். நீங்களிருக்கையில் யான் சதா காலமும் சுகானந்தமாகவே யிருப்பேன்.

அப்துல் அசீஸ்:—ஐயா! எப்போதும் நல்லவர்க்கு நல்லோர் துணையும் கெட்டவர்க்குக் கெட்டோர் துணையும், துஷ்டர்கட்கு துஷ்டர் துணையும், ஞானவான்கட்கு ஞானவான் துணையும், வாய்ப்பது உலகியல்பென்றே மதித்தல்வேண்டும், இந்த ஷாஜஹான் மிகவும் நற்குணத்தினனாகையால், அவனுக்கு தாங்கள் துணைவ ராயினீர், இவ்விஷயத்தைக்குறித்துயானும் மனக்களிப்புற்றேன்.

ஷம்ஷுத்தீன்:—ஆம் அதற்கென்ன சந்தேகமா?

விருத்தம்.

நல்லவர்க்கு நல்லவரே துணையிருப்பா ரெந்நாளும்
ஞாலமீதில்
புல்லர்கட்குப் புல்லர்களே துணையிருந்து பலவிடத்தும்
புகழிலாமல்

வல்லவர்கள் தம்முடனே பகைவிளைத்துப் பலநாளும்
வருந்துவார்கள்
தொல்லுலகி லிவ்விதமே மாந்தர்களிற் பலவிதமாய்த்
தோற்றுவாரே.

என்னுந் தன்மையாய் இந்த ஷாஜஹான் உத்தமகுணத்தினஞ கையால் உம்மைவிட்டுப் பிரியாமலிருக்கின்றன னென்றனன். அச் சபையிலிருப்போ ரனைவரும் அவனை வெகுவாய்ப் புகழ்ந்துகொண் டாடினர். அப்பால் அமீர் தான்கோரிய எண்ணத்தை நிறைவேற்ற வேணுமேயென்னும் விருப்பம் மனதிலிருப்பதால் அப்துல் அசீஸை வினவுதலாயினன்.

அமீர்:—ஐயா! நீங்கள் பகர்ந்தவையனைத்தும் உண்மையே, சரி! நல் லதிருக்கட்டும் உமது சுபுத்ரியாகிய மாஹிஜாபினென்பவளை யான் மணம்புரிவதற் கிச்சித்தேன், ஆனால் உமதிஷ்டம் யாதோ தெரிவிப்பீர்.

என, பகர்ந்தவை வினவிய அப்துல் அசீஸ், மனமகிழ்ந்து அவ் விதமேநன்கெனச்சம்மதித்தனன் அவர்களினத்தினரனைவரும்ஓர்சுப முகூர்த்தமேற்படுத்தி அமீருக்கும் மாஹிஜாபினுக்கும் கலியாணஞ் செய்து மனோல்லாசமெய்தினர், அப்பால் வந்த விருந்தினரனைவரும் அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜன பலகாரபக்ஷணங்களரு ந்தி சந்தோஷித்தராய் அமீரிடம் செலவுபெற்றுக்கொண்டு அவரவ ரிருப்பிடமேகினர். அப்துல்அசீஸ், ஷம்ஷுத்தீனும், தமது வழக்கப் படியே வியாபாரம் செய்வதற்குக் கிஞ்சிற்று திரவியம்வேண்டுமென, அமீரைக்கேட்க, அவனும் அவ்விதமேநன்கெனச்சம்மதித்து ஆயிரம் விராகன் கொடுத்தனுப்பினன். அவ்விருவரும் மதன்பூரில்வந்து நவ ரத்ன வியாபாரம் செய்துக்கொண்டிருந்தனர்.

அப்பால், அமீரானவன் மாஹிஜாபினுடனே சரசசல்லாபமனோ ல்லாசமாய் விளையாடிக்கொண்டிருக்கையில் ஷாஜஹான்பார்த்து வய றெரிந்து ஐயோ! என்னைபோன்ற அறிவீனரும் வையகத்திலுள ரோ? யான் எவ்வளவோ ஆசைநேசவிஸ்வாஸமாய் இவர்களை அழை த்துக்கொண்டுவந்தும் யாதொரு லாபமுமில்லாத லோபமாயிற்றே யானெவ்விதமாய் மனந்துணிவேனென்று அல்லும்பகலும் மாஹிஜா பின்மீதுற்ற காதலால் ஊணுறக்கமின்றி வீணாசையைத் துணையாய்வ

கித்து, எத்தருணம் அமீர் பிரிவானோ அத்தருணத்தில் இந்தப்பெண் ணைத் தந்திரோபாயமாய் அழைத்துக்கொண்டு ஓடிப்போக வேண்டு மென்று காத்திருந்தும் சமயம் சரிப்படாமலும் அமீர்வீட்டைவிட்டு வெளியிற்போகாமலு மிருந்தனன்.

இங்ஙனம், இவர்கள்நிலே இவ்விதமாயிருக்கையில், அந்நகரிலிரு க்கும் நூரத்தீனென்னும் வர்த்தகன் யாதோ ஓர்விஷயமாக விருந்து செய்வதற்கு எத்தனித்து யாவும் சித்தப்படுத்திவிட்டு தனது அடிமை யாட்களிடம் விருந்து சீட்டு எழுதிக்கொடுத்து தனது சிநேகிதர்கட் கெல்லாம் ஒவ்வொன்றுகொடுத்து தீவிரமாய் அழைத்துவருவீரென் றனுப்பினன். அவர்களும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து நூரத் தீன் குறிப்பித்தவர்களுக்கெல்லாம் கொடுத்துக்கொண்டு வருகையில் ஒருவன் அமீர்வீட்டிற்குவந்து ஷாஜஹான் கையிற்கொடுத்து உமது எஜமானுக்கு எங்கள் வருகையைத் தெரிவிப்பீரென்றனன். அவ்வா ர்த்தையைக்கேள்வியுற்ற ஷாஜஹான் இரகஸ்யமாய் அந்நிருபத்தை பிரித்துப் படித்துப்பார்த்து அதிலெழுதியிருக்கும் சங்கதியைக் கவ னித்துணர்ந்து மனோல்லாசமெய்தியவனாய் இன்னும் சற்றுநேரத்திற் குள் அமீர் விருந்துக்குப்போய்விடுவான். அச்சமயத்தில் யாம் கஜா னாவைத்திறந்து நவரத்னங்களையும் பொன் பொருளையும் வாரி மூட் டைகட்டிக்கொண்டு மாஹிஜாபினையும்தந்திரோபாயமாய்அழைத்துக் கொண்டு எந்நகரிலாயினும் ஓடிப்போய் சரசசல்லாபசுகானந்தமனோ ல்லாசத்துடன் ஆசாபாசமாய் அமரேந்திரன்போற் சந்தோஷமாய் வாழ்ந்திருப்போமெனும் பேராசையுடன்கடிதத்தைக்கொண்டுபோய் தனது எஜமானாகிய அமீர்கையிற் கொடுத்தனன், அவன் அந்நிருபத் தைவாசித்துப்பார்த்து, அடா! ஷாஜஹான் யான்விருந்துக்குப்போ ய்வருகிறேன் நீவெகு ஜாக்கிரதையுடன் வீட்டிற் காவலிருப்பாயென ப்புகன்று, தனது பத்தினியாகிய மாஹிஜாபினிடம் செலவுபெற்றுக் கொண்டு ஆடையாபரண சிங்காரலங்கிர்தனாய் விருந்துநடத்தும் வீட் டிற்குப்போயினன்.

இங்ஙனம் நிற்க, நூரத்தீன்வந்த விருந்தினரனைவரையும் உபச ரித்து அவரவர்கட்கிசைந்த ஆசனமளித்து வீற்றிருக்கச் செய்தனன். சுயம்பாகிகள் சுடுகையாய்ச்சமைத்துவைத்திருக்கும் புலவ், பிரிஞ்சி, கிச்சடி, குறுமா, சட்ணி, மதுமாம்ச பக்ஷணாதிகளுடன் பலகாரதினு சுகளும், வெள்ளிப்பாத்திரங்களிற் கொண்டு வந்து மேஜையின் மீது

வைத்தவுடனே யாவருமெழுந்திருந்து கைகால் சுத்தஞ்செய்து வாய் கொப்பளித்து, வஸ்திரத்தினுற் சுத்தஞ்செய்துக்கொண்டு நாற்காலியின்மீ தமர்ந்து அங்கு வைத்திருக்கும் கிளாசுகளில் ஒயின் சாராயங் களை வார்த்து மனேல்லாசமாய்க் குடித்து, நெய்யில் பொரித்திருக்கும் மாம்ஸ வகைகளைத் தின்று மதோன்மத்தராய் திவ்யான்ன சுக போஜனம் புசித்து நன்னீரருந்தி சுகானந்தமா யாவருமெழுந்திருந்து கைவா யலம்பிக்கொண்டு தென்றற்காற்று வீசுதற் கினிமைபொருந்திய வசந்த மண்டபத்திற்போ யமர்ந்திருந்தனர். அச்சமயம் நூரத்தின் ஆக்ஞையின்படியே அடிமையாட்கள் மணமிகுந்த அத்தர் புனுகு ஜவ்வாது பன்னீர் முதலாகிய வாசனைதிரவியங்களும்; தாம்பூலமும் தங்கத் தாம்பாளத்திற் கொண்டுவந்து வைத்தனர். விருந்தினரனைவரும் வாசனுதிகளைச் சரீரத்திற் பூசிக்கொண்டு தாம்பூலங் தரித்துக் கொண்டு உக்காக்களைவாயில்வைத்து தம்பிழுத்துக்கொண்டு தமாஷாயிருக்கையில், அப்சரஸ மாதர்களைப்போன்ற அழகானந்த முகவஜ்ர தேஜஸமைந்த நடனமாதர், ஸ ரி க ம ப த னி ஸ, வெனும் சுரக் யானந் தவருமல் சங்கீத சாஹித்திய பனுவல்களைப்பாடி அபிநயசிங் கார இயலிசை வழுவின்றி பரதநாட்டியம்புரிந்து கானின் மயிலினம் போல் நிர்த்தனம் செய்துக்கொண்டிருந்தனர். இவ்வித அற்புத ஆநந்த ஆட்ட கச்சேரியைக்கண்ணுற்ற சபையோ ரனைவரும் சந்தோஷசித்தராய் நூரத்தினிடம் செல்வுபெற்றுக்கொண்டு அவரவ ரிருப்பிடமேகினர்.

இங்ஙனம் நிற்க, அமீர் வீட்டிலிருந்த ஷாஜஹானனவன் மாஹிஜாபினை அழைத்துக்கொண்டு அந்நியதேசத்திற்கு ஓடிப்போகவேண்டுமென்னும் துர்க்குணத்தினுல் திடீரென கஜானுபெட்டியைத்திறந்து நூறு விராகனைத் திருடிக்கொண்டுபோய் இராஜ உடுபாவனைகளாகிய நவரத்ன மயமாய்த்துலங்கும் ஆடை ஆபரணங்களை வாங்கியணிந்துக் கொண்டு மாஹிஜாபின் முன்னுல்வந்து எனதன்பிற்கிசைந்த சரச நாயகி அதி தீவிரமாய்ப் புறப்படுவாய் மறுநகர்க்கேகி மனேல்லாசமாய் சுகித்திருப்போமென்றனன், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அந்தப்பெண் திடுக்கிட்டு, அடடா! ஈதென்ன விபரீதம்? யாவனே இராஜகுமாரன் இங்ஙனம் வந்து நம்மை அழைக்கின்றனே ஐயோ மணாளனின்றிய மங்கையர் தனித்திருப்பது சரியல்லவென்பதற் கேற்றவிதமா யமைந்ததே சரி நல்லதிருக்கட்டும் இவனை இலேசாய் விடக்

கூடாது நமது ஷாஜஹானும் அருகிலில்லையே நல்லதிருக்கட்டும் இவ்விடம் சற்றுநேரம் பாஷித்துக்கொண் டிருந்தோமானால் அவனும் வந்துவிடுவான், அப்பால் நடப்பதைக் கவனிப்போமென்று விசாரிப்பதாயினள்.

மாஹிஜாபின்:— ஐயா! நீர்யாவர்? யாதுகாரணமாய் இங்கு வருகலாயினீர்?

ஷாஜஹான்:—எனது அன்பிற்கிசைந்த சுந்தரசொரூபி. நீங்கள்கடற்கரையில் யாதொரு சகாயமுமின்றி தத்தளித்திருக்கையில் அஞ்சேலென ஆதரித்து அமீர்முன் அழைத்துக் கொண்டுவந்துவிடுத்து உங்களுக்குச் சகலபாக்கியமும் கிடைக்கும்படிசெய்த ஷாஜஹான் யான்தானே உனக்குக் கிஞ்சிற்றேனும் தெரியாமற்போயினதா? மாதர்கள் பூஜிதம்பெறும் தேஜோன்மய முகவஜீகரி.

மாஹிஜாபின்:—ஆ! அண்ணா! இன்றைக்கென்ன தன்னையும் மறந்து ஏதேதோ உளறுகின்றீரே ஈதென்ன இராஜாதிபதியைப்போல் வேஷமணிந்துவந்தீரே. யானுன் சகோதரியைப் போன்றவளாயிருந்தும் நீர் வேறுவிதமாய்மதித்துப் பாஷிக்கின்றீரே ஈதென்னமதியீனம்.

ஷாஜஹான்:—எனதாசைநேச விஸ்வாசமிகுந்த மாதரசியே யானென்ன அற்பமானவனோ நீ அவ்விதமாய் யாதொரு சந்தேகமுமெய்தாதே. யானுன்மீதுற்ற காதலால் ஊணுறக்கமின்றி களைத்திளைத்திருப்பதனால் இத்தனைநாளாய் ஆடை ஆபரணமின்றிய வறுமையாளன்போ லிருந்தேன். ஆனால் இத்தினத்தில் நாமிருவரும் ஆசைநேசமாய் அந்நியதேசஞ்சென்று சதிபதியாய்ச் சுகித்திருப்பதற்கு நேரிட்டதால் யான் பழையபடியே சிங்காரமாய் வந்திருக்கின்றேன் இதோ பார்த்தனையா யாம் அநேககாலவரையினும் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமெய்தாமல் ஆயுள்வரையினும் சுகஜீவியா யிருப்பதற்குத் தகுந்த பொன்பொருளைவாரி மூட்டைகட்டி வைத்திருக்கின்றேன் இனியாதொரு மனக்கவலையுமின்றி புறப்படுவாய் காதலி.

மாஹிஜாபின்:—அண்ணா! நீர் ஆண்பிள்ளையா யிருந்தும் அற்பசுகத்திற் கிச்சித்து அறிவைப் புறப்படுத்தி வெறியனைப்போற் பாஷிப்பதுமன்றி, யான் பகர்ந்தவையும் கவனியாமற்பிதற்றுகிறீரே. ஈதுமக்கு நீதியோ?

ஷாஜஹான்:—ஆ! கண்மணி! விண்மணியினுஞ் சிறந்தநன்மணி! நவமணியினும் ப்ரகாசம்பொருந்திய பொன்மணி! பெண்மணியே நீ பகர்ந்தவை என்னாற் றடுக்கவசமோ? காதலி ஆயினும் நின் மீதுற்ற மையலால் யான் கவனித்திலேனாயினும் மன்னித்து மறுபடியும் நின் கனியொத்தவாயால் என்மனம் சற்றுதேற சரசசல்லாப மனோல்லாசமாய் பகருவாய் நாயகி.

மாஹிஜாபின்:—அண்ணா! நீரென்ன கிஞ்சிற்றும் மதியின்றியவர் போற் பாஷிக்கின்றீரே யானுனை அண்ணனென மதித்திருக்க நீரெனை தங்கையென் றெண்ணுவது தகுதியல்லாமல் தாரமென மதிப்பது நியாயமாகுமா? இனி இத்தகைய அற்பவார்த்தை பாஷித்திடாதீர்.

ஷாஜஹான்:—ஆ! சரசநாயகி! நீ பகர்ந்தவை வினவிய எனதுளமும் மகிழ்வெய்தின அஃதெவ்விதமெனின். நீ எனை அண்ணலென் றெண்ணுவ தெவ்வாறுளதெனின் பெருமைபொருந்திய நாயகனுயமைந்தன. யானுனை தங்கையென் றெண்ணுவதற்குப் பதப்பொருள் தன்-தன்னுடைய, கை-கரம், ஆகவே. தனது கரத்திற் கொப்பானவளெனப்படும். அவ்விதமாதலின், நாமிருவரும் ஒரே சரீரம்போன்ற பிரியா நட்பினரென் றுவமையாயின. ஆதலால், யாமிருவரும் சரசசல்லாபமாய் சுகித்திருப்பதே சிலாக்கியமாகும்.

மாஹிஜாபின்:—அண்ணா! யாதாமொரு ஸ்திரீயை மணம்புரிந்தால், நாயகியன்றி அந்நியமாதரைச் சகோதரியைப்போல மதித்திடவேண்டுமல்லவோ?

ஷாஜஹான்:—பெண்ணே! அவ்விதமாய்ப் பாஷிப்பதடாத வழுவெனமதித்திடுவாய். தனது தாயார் கர்ப்பத்திற் ஜனித்த ஸ்திரீகளையே சகோதரிகளெனப்படுமென்றி, மற்றவர்மீது மனதிசைந்தால் மனைவியென்றே கருதல்வேண்டும். அவ்விதமாகவே அமீருக்கு உன்மீதுற்ற மையலால் உனைமணந்து சுகித்திருப்பதாயினன். அவ்விதமாகவே யெனக்கும் உன்மேற் காதலதிகரித்தமையால் யாமிருவரும் சரசசல்லாபமாயிங்கிருப்பதற்குச் சரிப்படாதென உனையழைத்துக்கொண்டு மறு நகரேக மனதிலெண்ணி ஆவலாய் வந்திருக்கின்றேன் இனி தாமதஞ் செய்யாமற் புறப்படுவாய் எஜமான் வருவதற்குள் ஓடிப்போய் விடுவோம்.

மாஹிஜாபின்:—ஆ! ஈதென்ன அநியாயம் எஜமான் பத்தினி தாய்க்குச் சமானமாச்சுதே தாரமென்றெண்ணுவது தர்ம விரோதமல்லவோ?

ஷாஜஹான்:—காதலி! இன்னும் தாமதஞ்செய்வது நன்கல்ல. எனது எஜமான் இத்தனைநாள் வரையினும் தன்சுகத்தைத் தான்பார்த்துக்கொண்டாரேயன்றி எனக்கு மணஞ்செய்யவில்லை. அன்றியும், யான் ஆசையாய் அழைத்துவந்த உன்னையும் அவரே கலியாணஞ் செய்துக்கொண்டார். எனது மனமும் உனது அழகானந்த முகவஜீகரத்தையே நாடுகின்றது.

மாஹிஜாபின்:—அண்ணா! நீர் இவ்விதமாய்த் தத்தளிப்பது, மனப்பேயின் குரூரசேஷ்டையன்றி மற்றவையல்ல. அதனாற்றான் கலைவல்லோர் மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாமென்பதாயினர். அஃதெவ்விதமெனின். ஆண்டவன் மனிதனை சிருஷ்டித்து உலகிலுய்வதற்காகவே மனமென்னும் புரவிக்குப் பஞ்சசேந்திரியங்களினாற் சேணந்தொகுத்து அறிவானந்தன் கையிற்றந்து அஞ்ஞானசாகரத்தை விடுத்து மெஞ்ஞானக் கரைமீது வந்து ஆண்டவனருள்பெற்று ஜனனமரணமின்றி நித்யானந்தமா யிருப்பாயென்றிடில் ஞானசஹிதமாய் விளங்கும் அறிவானந்தன் வெகு ஜாக்கிரதையுடன் பஞசேந்திரிய சேணத்தைப் பக்குவமாய்ப்பிடித்து மனப்புரவியை நடத்திக்கொண்டு போனாலும், ஆசையென்னும் மாயவிருட்சூழ்ந்து வழிதெரியாமற் செய்யுமாகில் அறிவானந்தன் சேணத்தைக் கைநழுவவிடுத்துவான் அச்சமயம் மனம் பலவிதமாய்ச் சிதறுண்டு பாபத்திற் சிக்கி ஆபத்தடையும். அதற்கு திருஷ்டாந்த மெவ்விதமெனில் ஒரு ஸ்திரீயை நேத்திரத்தினால் பார்த்தவுடனே சீ! இவள்கெட்டாளென மதித்திடாமல் காதலுற்றுப் பின் தொடர்ந்தால் அவள் கணவனால் வெட்டுண்டிறந்து, அலகையாய்த்திரித்து அவதிப்படுவார் பின்னும் பலவித சஞ்சலமனைத்தும் நேர்ந்து துன்புறச்செய்யும் ஈதனைத்தும் கவனித்துணர்ந்தவரே மேன்மக்களென்றுணர்வீர்.

என, பாஷித்துக்கொண்டிருக்கையில் விருந்துக்குப் போயிருந்த அமீர் தனது வீட்டிற்குவந்து தனது வழக்கத்தைப்போல மாஹிஜாபினிருக்கும் மாளிகையிற் சென்றனன். அச்சமயம் ஷாஜஹான் மனமிரண்டு திகிலுற்று,

வெண்பா.

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

என்னுந் தன்மையாய் நாகசர்ப்பமானது தனது பற்களில் விஷமிருப்பதனுல் மனிதர் கண்ணுற்ருல் கொன்றுவிடுவாரே யென்பதாய், யாதொருவர் கண்ணுக்குந் தோற்ருமல் மறைந்தோடிப்போகும் தண்ணீர்ப்பாம்பு தன்னிடம் விஷமில்லாதிருப்பதினுல் தன்னை யாவரென்செய்குவரென பயமின்றி வெளியிற்சஞ்சரித்திடினும் சிறு பிள்ளைகளும் கையிலெடுத்து விளையாடுவார். அத்தன்மையாகவே. யாதாமொருவரும் தமதுளத்தில் யாதொரு ஐயமுமின்றி அன்னியமாதரை தாய், தங்கை, தமக்கையென மதித்திருந்தால் அவர்கள் எவர்கட்கும் அஞ்சாமல், அறைவீட்டிலிருக்கும் பெண்களுடன் ஆசாபாசமாய்ப்பேசினுலும் அவ்வீட்டின் புருஷர்பார்த்து யாதொரு சந்தேகமுங்கருதார். ஆனுல் பெண்ணென்ருற் பேய்போலலையும் சில வீணர்கள் மாத்திரம் யாவராயிருந்திடினும் சரியே அழகான பெண்களைகண் சைகைகாட்டி அழைத்தோடிப்போவதும், அகப்பட்டால் அடிஉதை அபிஷேக ஆபத்தெய்துவதுமா யிருப்பார். அத்தகைய வம்பர்கள் யாதாமொரு பெண்களுடன் பேசிக்கொண்டிருந்தால் நாற்புரத்திலும் பார்வையாயிருப்பார் யாவரேனும் வந்துவிட்டால் பயந்தோடிப் பதுங்குவாரென்பது உலகியற்கை யென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயமே. அவற்றிற்கிசைந்தனவாய் ஷாஜஹானென்பவன் மாஹிஜாபினை கைவசப்படுத்தி அழைத்தோடிப்போவதற்குச் சித்தமாயிருந்ததால், அச்சமயம். அமீர்வந்துவிட்ட குறிப்பை யுணர்ந்து திடீரென ஓடினும் பதுங்குவதற்கு முடியாமல், திருடனைப்போற் கலங்குவதைக் கண்ணுற்ற அமீர் மர்மமுணராமற் சிரித்துக்கொண்டு என்னடா ஷாஜஹான் இன்றைக்கென்ன இராஜவேஷமணிந்திருக்கின்றனையென்று வினவினன். ஷாஜஹான் அடாதமொழிபகர்ந்தால் ஆபத்தெய்துமென கிஞ்சிற்றும் ஆலோசனையின்றியவனுய் மாஹிஜாபின்மீது காதலுற்ற மனமயக்கத்தினுல் அமீரைப்பணிந்து எஜமானே இத்தனைநாளாய் என்வயிற்றிற்கு அன்னமளித்தீரே அதுபெரியகாரியமல்ல இன்றையதினம் யான் விரும்பியதைக் கொடுப்பீராகில் எனது

உடலில் உயிருள்ளவரையினும் உம்மை மறந்திடேன். எனது இஷ்ட தெய்வம்போல் தினந்தோறும் மனதாற் றுதித்திருப்பே னென்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்று அமீர் இவன் மனக்குறிப்பை இன்னதென்றும் கவனித்திடாமல், வேறுவிதமாய் மதித்து இன்றையதினம், இவன் சினேகிதருடனே எங்ஙனமோ போவதற்காக ஆடை ஆபரணாதிக ளணிந்திருக்கின்றனன். ஆனால் செலவுக்கு ஏதாயினும் கொஞ்சம் திரவியம்வேண்டும்போ லிருக்கின்றது. அதற்காகவே நாமில்லாசமயம் மாஹிஜாபினிடம் கேட்கலாயினன் இதற்குள் யாம் வந்துவிட்டதால் நம்மைக்கண்டு பயப்படுகிறானென மதித்து, அவனை தன திருகரத்தினாலும் பிடித்துக் கொண்டு சொல்வதாயினன்.

அமீர்:—அடா ! ஷாஜஹான் யானிருக்கும் வரையில் உனக்கு யாது குறையுளது, உன் தாய்தந்தை சகோதரரைவிட யான் பத்து பங்குக் கதிகமாய் உன்னைககாப்பாற்றுகிறேனே. அன்றியும், உனது நற்குணத்திற்காகவே யான் கஜானா திரவுகோலையும் உன்னிடந் தந்திருக்கின்றேனே. ஆகையால் உனக்குவேண்டிய திரவியங்க ளெடுத்துச் செலவுசெய்துக்கொள்ளுவாய், உன்விஷயமாய் எவ்வளவு குறைந்தாலும் யான் கவனித்திடேன். அவ்விதமிருக்க மாஹிஜாபினையும் என்னையும் என் கேட்கிறாய் ?

என, பகர்ந்தவை வினவிய ஷாஜஹான் சற்றுயோசித்து அடடா. இனி நமதெண்ணம் நிறைவேறிற்று நமது எஜமான் நம்மீது வெகு ஆசாபாசமா யிருக்கின்றனர். இனி நமது சரசநாயகியாகிய மாஹிஜாபினை வசப்படுத்திக் கொள்வதற்குச் சமயமுமிதுதானென் றுணர்ந்து தனக்கு வரப்போகிற ஆபத்தை நினையாமல், இனி அதிஷ்டானுகூலந்தானென மதித்துச்சொல்வதாயினன்.

ஷாஜஹான்:—ஐயா ! எஜமானே உமது கிருபை யிருக்கும்வரையில் எனக்கு யாதொரு குறையுமில்லை யெனினும், ஓர் ஆசைமாத்திரம் எனதுளத்தைப் பலவிதமாய்த் தத்தளிக்கச்செய்கின்றன அஃதென்னெனின். இந்த மாஹிஜாபின் முகதரிசனங்கண்ணுற்றயான்மையாலற்றிகைத்து மனமெலிவதாயினேன். ஆகையால் நீர் என்மீது கருணைவாய்ந்து இந்த ரூப சுந்தரியை என்மனதிற்கிசையும்படியாகச் செய்தீரானால் யானும்மை எந்நாளினும் மறவேன்.

மாஹிஜான்:—அடா பாபி ! இவ்விதமாய்ப் புகல்வது நீதியோ ?

ஷாஜஹான்:—ஆ! கண்மணி! என்காதலைத் தீர்ப்பாய்ப் பெண்மணி !

என, பகர்ந்தவை வினவிய அமீர் கோபாவேசத்துடன் கர்ஜ்ஜித்துத் தனது கரத்திலிருந்த கத்தியினல் அவன் நாசியைப்பிடித்துக்கரகரவென் றறுத்துத்துரத்தினன். அச்சமயம் ஷாஜஹான் குய்யோமுறையோவென கூச்சலிட்டுக் கதறியழுதுக்கொண்டு ஒடிப்போயினன் இந்த அநியாயத்தைக் கண்ணுற்ற மாஹிஜாபின் பரிதாபமடைந்து, ஆ ! அண்ணு ! அந்நாளில் யாங்கள் ஆதரவற்ற பரதேசிகளாய்க் கடற்கரையில் அழுதுக்கொண்டிருக்கையில் அஞ்சேலென ஆதரித்து, அழைத்துக்கொண்டுவந்த உமக்கு என்னுல் நாசி இழந்திடலாச்சுதோ ? ஐயோ எங்களுக்குச் சகாயம்புரிந்த உமக்கு அபாயமெய்திடலாச்சுதோவென கண்ணீர்த்ததும்பக் கதறியழுது மூர்ச்சித்து வீழ்ந்தனள். அமீர் ஷாஜஹான் துர்க்குணத்திற்கிசைந்த ஆக்கினை விதித்தது சரியானதென்று சம்மதித்திடினும், அவன் சிறுவயதிலிருந்து தனது உயிர்த்தோழனைப்போற் காலமெல்லாம் கஷ்டப் பட்டதையும், மாஹிஜாபின் விசனப்பட்டு மூர்ச்சித்து வீழ்ந்ததையும் கவனித்து மனந்தாளாமற் பரிதாபமடைந்து தாதிப்பெண்களால் அந்தப்பெண்ணைத்தூக்கி உட்காரவைத்து பந்நீர் தெளித்து மயில்விசிறியினல் ஜில்லெனக் காற்றுவீசும்படியாய் விசிறி மூர்ச்சைதெளிவித்து, துக்கப்படுவோருடன் தாமும் துயரப்பட்டால் அழுகுரல் அதிகமாய் விடுமெனமதித்து, மனதைரியம்விடாமல் மாஹிஜாபினுக்குப்புகல்வதாயினன்.

அமீர்:—சரசநாயகி ! நீ இவற்றைக்குறித்து வீண்விசாரமெய்தவேண்டாம். அடாதுசெய்தோர் படாதுபடுவா ரென்பதற்கிசைந்தனவாய் அந்த ஷாஜஹானுடைய துர்க்குணத்திற் கிசைந்தனவாய் ஆண்டவனல் அவனுக் கத்தகைய ஆக்கினைநேரிட்டது அதைப் பற்றி நீ விசனப்படுவது நன்கல்ல. மனிதராய் ஜனித்தோர் நீதிமார்க்கமாய் ஜீவிப்பதன்றி அநியாயத்திற் பிரவேசிக்கத் தகுமோ ?

மாஹிஜாபின்:—பிராணபதி ! நீர் நவின்றமை வினவுவோர் நகைப்பத் தடையுளதோ ? அஃதேனெனின் உம்மிடத்தில் ஊழியம் புரியும் அடிமையாகியவனுக்கு எவ்வளவு மதியிருக்கும். அற்ப குணத்தினனுகையாலன்றே ? தனது தாய், தந்தை, சகோதரரைவிடுத்து சோறுகண்டவிடமே சுகமென நாய்போல நமது வீட்டிற்காவலிருந்து அடிமைத்தொழிற்புரிந்து வயற்றைவளர்க்

கும் ஏழையாகிய ஷாஜஹானை நமக்குச் சமானமாய் மதித்து அவன் புரிந்த குற்றத்திற்கு நாசியை அறுத்துத்துரத்தினீரே ஈதென்ன அநியாயம். அவனுடைய மூடமதியினால் பிதற்றிய தை நாம் ஸ்திரப்படுத்திக் கொள்வதடுக்குமோ? அவன் என்னமோ வெறியனைப்போல் உளறினால் யான் சம்மதித்தேனோ? யான் அவனுக்கு வேணமதி யுரைத்துத் தடுத்திடுஞ் சமயம் நீர் ஓடிவந்து இத்தகைய குரூர பயங்கரக் கொலைத்தொழிற் புரிவது குற்றமல்லவா?

என நவின்றமையுணர்ந்த அமீர் சரிதானென்று தலையசைத்துகாதலி மிஞ்சிப்போன காரியத்திற்கு யாமென்னசெய்யலாம் எழுந்திருப்பாயென கையைப்பிடித்தனன். மாஹிஜாபின் கோபாவேசத்துடன் கையை விசிரினள். விரல்நகம் அமீர் இடது கண்ணிற்பட்டு கண்விழி சிதறி உதிரம்பெருகி குய்யோமுறையோவென கூச்சலிட்டு ஐயையோவென அழுதுத்துடித்து மரணமூர்ச்சையாய்க் குருடனாயினன். அருகிலிருந்தோ ரனைவரும் ஓடிவந்து அமீரைத்தூக்கி உட்காரவைத்து நேத்திரத்தை மிருதுவான வஸ்திரத்தாற்றுடைத்து பன்னீரில் ரோஜாமலரை நனைத்து கண்ணில் ஒற்றிக்கொண்டிருந்தனர். அச்சமயம் சிலர் வைத்தியரை அழைத்துவந்து தகுந்த மருந்துகளாற் சவுக்கியப்படுத்தச் செய்தனர். எவ்விதமான பக்குவஞ்செய்திடினும் பார்வையின்றிய குருடனாயினன்.

அப்பால், அமீர் தனக்குற்ற அநியாய ஆபத்தையும், அவமானத்தையும் கவனித்து மனஞ்சகியாமல், இனி இந்த துன்மார்க்கி நம்மிடத்திலிருக்கலாகாது துஷ்டருக்குச் சகாயம்புரிந்தாற் கஷ்டத்தை விளைவிப்பதுபோல இந்த விபசாரிக்கு யாம் எவ்வளவோ நன்மை புரிந்தும் ஷாஜஹான்மீதுற்ற மையால் நமது நேத்திரத்தைத் தனது விரல் நகத்தினாற் கலக்கிவிட்டனளென மதித்து தனது அருகிலிருப்பவரை அழைத்து இங்கு நடந்த அநியாயத்தையெல்லாம் ஓர் நிருபத்திலெழுதித் தருவீரென்க, அவர்களிலொருவன் அவ்விதமே நன்கெனச்சம்மதித்து அமீர்புகன்றவிதமே எழுதித்தந்தனன். அதை ஓர் சோக்கராப்பையனிடந்தந்து மதன்பூரில் நவரத்னவியாபாரஞ் செய்யும் அப்துல்அஜீஸ் கையிற்கொடுத்து, இந்நிருபத்தைக்கண்டவுடனே வந்து உமது குமாரத்தியாகிய மாஹிஜாபினை அழைத்துக்கொண்டு போய் விடுவீரெனப்புகலுவாயென் றனுப்பினன். அவனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்துக் கட்டுசாதங் கட்டிக்கொண்டு ஓர் ஒட்டகத்தின்மீது ஆரோகணித்து அந்நகரைவிடுத்து ஆரண்யமார்க்கமாய்ச் செல்வதாயினன்.

காக்ஷி—2

இடம். ஆரண்யம்.

கதா நாயகர்.

ஷாஜஹான். வைத்தியன். சோக்கரா. பக்கீர்.

இங்ஙனம் நிற்க, முன்னம் அற்பசுகத்திற் கிச்சித்த அமீரால் நாசியிழந்த ஷாஜஹானென்பவன் நகரிற் செல்வதற்கு நாணமுற்றவனாய் வனவாசியாய்ச்சென்று பிராணனை விடுத்திடுவதே நன்கெனக் கருதி, வெகு ரோஷத்துடனே மனம் வெறுத்து ஆரண்யத்தில் வந்து, அங்கிருக்கும் நதியிலிறங்கி இரத்தத்தை யெல்லாம் கழுவிக்கொண்டிருக்கையில், வழிப்போக்கனாகிய ஓர் வைத்தியன்ஷாஜஹானிருக்கும் ஆற்றங்கரையில் கட்டுசாதம் புசிப்பதற்கு வந்து, அவனிருக்கும் நிலைமையைக் கண்ணுற்று, நீ யாரப்பா உனது நாசியை யாவர் அறுத்திட்டாரெனகேட்க, ஷாஜஹான் மனவருத்தத்துடன் உண்மையைப் புகன்றிடில்பரிகாசமாய் விடுமேயென வேறுவிதமாய் மறைத்துப்புகலலாயினன்.

ஷாஜஹான்:—ஐயா! யான் கைச்சண்டையில் மிகவும்தேர்ந்தவனாகையால் அநேகரை அடித்து உதைத்துக் கீர்த்திபெற்றேன். அச்சமயம் ஓர் போக்கிரிப்பயலெனது நாசியைக் கத்தியா லறுத்துவிட்டனன்.

எனபகர்ந்தவை வினவிய வைத்தியன் நிகழ்ந்த இரகஸ்ய மர்மமின்னதென்றுங் கவனியாதவனாகையால் ஷாஜஹான் பகர்ந்தவை உண்மைதா னென்றெண்ணி அவனை வெகுவாய்ப் புகழ்ந்து இவன் சண்டையின் முன்னணியில் நின்று வெகு வீரத்தன்மையாய்ச் சமர் புரியும் சூராதி சூரனென மதித்துச் சொல்வதாயினன்.

வைத்தியன்:—ஐயா! உலகிற் ஜனித்தமாந்தர்களில் பிறந்தான், இருந்தான், இறந்தா னென்பதே உறுதியான வாக்யமென்று உலகோராற் புகலரும் சாஸ்திர விதியன்றி யாவரேனும் அழியாதிருக்கின்றனரா? அவ்வித மிருக்க ஒருவரை யொருவர் அடித்து, உதைத்துக் கொல்லுவது பாபமல்லவோ? அன்றியும், தேகத்தில் வல்லமையிருக்கும் வாலிபதிசையிற்செய்யும் வீரத்தன்மை வயது முதிர்ந்த கிழத்தன்மையில் உண்டாகுமோ? ஈதனைத்தோ மாந்தர் மனோகர்வியாய் தன்னைப்போன்ற மனிதரை அநியாயமாய் அடித்துக் கொல்லுவது நீதியாகுமோ? ஆகையால்.

விருத்தம்.

"மூடவனை மூர்க்கன்கொன்றால் மூர்க்கனை முனிதான்கொல்லும்
மடயனை வலியான்கொன்றால் மறலிதா னவனைக்கொல்லும்
கடவுளாற் ஜனித்தமாந்தர் கர்வித்து வீரம்பேசி
மடயனை யடித்தசோலே வலுவனை யடிக்குங் கண்டாய்"

என்னுந் தன்மையாய் வல்லோர்க்கு வல்லோர் வையகத்திலுள ரென்பதைக் கருதாமல் மனோகர்வியாயிருப்பதே மதியீனம். ஆனாலும், நீர் எத்தனைபேரை அநியாயமாய் அடித்தீரோ அதனாலே தான் நீர் நாசியிழந்து ஞாலத்தோர் நகைத்துப் பரிகாசிப்பதற்காயினீர். ஆகையால் இத்தகைய அற்பகாரியத்திற் பிரவேசியாதீரென்று, அவ்வனத்திலிருக்கும் ஓர்வித பச்சிலையைப் பறித்து உள்ளங்கையிலிட்டுக் கசக்கிச் சாறுபிழிந்து ஷாஜஹான் நாசிரணத்தில் விடவும் கிஞ்சிற்று சவுக்யமாயினன் அப்பால் மூன்றுநாள் வரையிலும் இவ்விதமே செய்துக்கொள்வீராகில் சவுக்கியமாய் விடுமெனப்புகன்று, தான்கொண்டு வந்த கட்டுசாதத்தில் ஷாஜஹானுக்குக் கொஞ்சம் கொடுத்து மற்றதைத்தான் புசித்து பசிதணிந்து நந்நீரருந்திக் களைதெளிந்து அவனிடம் செலவு பெற்றுக்கொண்டு போயினன்.

அப்பால், ஷாஜஹானென்பவன் வைத்தியன் சொன்னவிதமாய் பச்சிலை சார்பிழிந்து தனது நாசிரணத்திற்குத் தடவிக்கொண்டும், பசிவேளைக்குக் காய்கனிகளைப் பறித்துப் புசித்துக்கொண்டும், தபசிகளைப்போல வனவாசியாய்த் திரிந்துக்கொண்டிருந்தனன். அச்சமயம் அமீரென்பவனால் அனுப்பப்பட்ட சோக்கராபையன் மதன்பூருக்குப் போவதற்காக கானகமார்க்கமாய் வருகையில், வழியிலெதிரு ற்ற நந்தவனத்திற்சென்று ஒட்டகத்தை ஓர் விருக்ஷத்திற் கட்டிவிட்டு அருகிலிருக்கும் தாமரைப் பொய்கையி லிறங்கி ஸ்நானபான நேம நிஷ்டை புரிந்து ஆண்டவனைத் தொழுது, பிறகு கட்டுசாதத்தை அவிழ்த்துப் புசித்துக் களைதெளிந்து, தென்றற்காற்று வீசுதற் கினிமை பொருந்திய வசந்தமண்டபத்திற் சென்று சற்றுநேரம் நித்திரைசெய்து விழித்தெழுந்து கைகால் முகங்கழுவி வாய் கொப்பளித்து அன்னம் அடர்ந்து செழிப்புளதாகிய விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்திருக்கும் மா, பலா, வாழை, அன்னாசி கிச்சிலி, மாதுளை, பேரீச்சமென்னும் இனிமைசேர் கனிவர்க்கங்களைப் பறித்துப் புசித்துக் களைதெளிந்துமனோல்லாசமாய் அந்தப்பூங்காவின் விநோதங்களைச்சற்றுப்

பார்த்துவிட்டுப் போவோமெனும் விருப்பத்தினல் அந்தச் சோலைக்குட் பிரவேசித்தனன். அங்ஙனம் அதிவிநோதமாய்ப் புட்பித்திருக்கும் மல்லிகை, முல்லை, இருவாக்ஷி செண்பகம், அல்லி, அசோகு, கொன்றை, தவனம், ரோஜா, மகிழம், மனோரஞ்சிதம் முதலாகிய மணமிகுந்த நறுமலர்களின் விநோதமனைத்தும் கண்ணுற்று ஆனந்த பரவசமுற்றவனாய் மண மலர்களைப் பறித்து முகந்துக்கொண்டு உல்லாசமாய் வருகையில், நீரோடை யருகில் விசனமாய் அழுதுக்கொண்டிருக்கும் ஷாஜஹானைப் பார்த்து பரிதாபமடைந்து, முன்னிருந்த சிநேகிதவாஞ்சையை நினைந்து மனமுருகி "தாயைக்கண்ட சேய் போற்" கதறியோடிவந்து, ஆ! எனது அன்பிற்குரிய நண்பராகிய ஷாஜஹான் சாஹேப் நீர் இவ்வித அங்கயீனராய் அழுதுக்கொண்டிருப்பதைக்கண்ணுற்ற எனதுள்ளம் பலவிதமாய் வருத்தப்படுகின்றனவேயென்று அவனைக் கட்டிக்கொண்டு ஓவென்ற லறிகூச்சலிட்டழுதனன். அச்சமயம், "காற்றுடன்சேர்ந்த நெருப்பினாற்கானகமுழுதும் புகை எழும்புவதுபோல" அவ்விருவரும் ஆரண்ய மதிரும்படிகொஞ்சநேரம் அழுது, அப்பால், ஒருவரையொருவர் தேற்றிக்கொண்டு இருவரும் ஓர் ஆலவிருக்ஷத்தின்கீழ் வந்துட்கார்ந்து ஒருவர்க்கொருவர் க்ஷேமலாபம் விசாரித்துக் கொண்டிருக்கும் சமயம் ஷாஜஹான் தனதுகாலவித்தியாசத்தின் விபரீத தொடுவழக்கினாலுற்ற மனவருத்தத்தைப் புகலலாயினன்.

ஷாஜஹான்:—அப்பா! எனக்கு இந்நாளிலுற்றமதி அந்நாளிலிருந்தால் யான் இத்தகைய துயரனுபவித்திடேன். அஃதேமெனெனின் அப்துல்அவீஸ், ஷம்ஷுத்தீன், மாஹிஜாபின் முதலானோர் கடற்கரையில் ஆதரவற்ற பரதேசிகளாய் அழுதுக்கொண்டிருக்கையில், யாதேனும் ஓர் தந்திரோபாயமாய் மாஹிஜாபினை அழைத்துக்கொண்டு போய்விடுவேனாகில், யான்யாதோர் துயரமுமின்றி சுகானந்தமாகவே யிருப்பேன். அஃதன்றி அறிவீனத்தால் அமீர் முன் அழைத்துச்சென்றதால் அவன் மாஹிஜாபினைக் கலியாணஞ் செய்துக்கொண்டதுமன்றி என்னையும் இவ்விதமாய் நாசியறுத்துத் துரத்தி விட்டனன்.

சோக்கரா:—உம்முடைய வருத்தத்தை நீர் புகல்கின்றீரே. அங்ஙனம் நிகழ்ந்தவை நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பாயிருக்கின்றதே ஹா! ஹா! ஈதன்றோ வேடிக்கை.

ஷாஜஹான்:—என்ன! என்ன! வெகு தமாஷாயிருக்கின்றதே யான் அவற்றை கவனிக்கவேண்டுமென விரும்புகிறேன் சற்றுவிவரித் துரைப்பாய்.

சோக்கரா:—என்னத்தைச் சொல்லுகிறது ¶ "எக்குகோதே குவா ஆப்பிடுப்டுப் மரேமூவா" யென்பதுபோல, உன்னை அவமானஞ் செய்வதற்கு அமீர் உனதுநாசியை அறுத்துவிட்டனன். நீ அழுதுக்கொண்டு போன பிறகு, மாஹிஜாபின் அமீர் கண்ணைக் கலக்கி குருடனாகச் செய்து விட்டனள்.

ஷாஜஹான்:—ஆ! அப்படியா! மெத்த சந்தோஷம் "கெடுவோன் கேடுகினைப்பான்" என்பதுபோல, மாஹிஜாபின் நல்லகாரியஞ் செய்தனள். நல்லதிருக்கட்டும் அவள் யாதுகாரணமாய் அமீர் கண்ணைக் கலக்கி குருடனாகச் செய்தனள்.

சோக்கரா:—"அந்தர்க்காபேத் அல்லாஜானே" யென்பதுபோல, அவரவர் மனதிலிருப்பதை ஆண்டவனன்றி மற்றவர் கவனிக்க முடியுமோ?

ஷாஜஹான்:—அவ்விதமாய் மறைத்துப் பேசுவது சரியல்ல, நீ அருகிலிருந்தமையால் உனக்கு யாவும் தெரிந்திருக்கும். ஆகையால் நிகழ்ந்த உண்மையைச் சொல்வாய்.

சோக்கரா:—யானென்னென் றுரைப்பேன்? நீங்கள் மூவரும் கலகஞ் செய்துக்கொண் டிருக்கையில், அகஸ்மாத்தாய்க் கூச்சற் கிளம்பினதால் யாங்களனைவரும் ஓடிவந்தோம் அச்சமயத்தில் நீ நாசியறுந் தோடினாய், அமீர் வலது கண்ணை மாஹிஜாபின் கலக்கிக் குருடனாகச் செய்தனள். அதனால், அவன் கோபங் கொண்டு ஓர் நிருபமெழுதி அவள் தகப்பனாகிய அப்துல் அசீஸுக்குக்கொடுத்து அந்தப்பெண்ணை அழைத்துச்செல்லும்படியாக என்னிடந் தெரிவித்திருக்கின்றனன். ஆகையால் யான் மதன்பூருக்குப்போகிறேன். நீயும், என்னுடன் வருகின்றனையா? அந்நகரிற் சென்றால் யாதேனும் ஓர் கைத்தொழிற் புரிந்து ஜீவித்துக்கொள்ளுவீர். சாஹேப் உலகத்தில் ஜனித்தமாந்தரில் சதிபதி மனதிசைந்திருந்தால் தான் சம்ஸாரத்தியல்பு, சரியாயிரு

¶ வஞ்சக நினைவையுடையவன் ஒருவனைக் கொல்வதற்கு யோசித்து கிணருவெட்டினால் அந்தக் கிணற்றில் அவனே வீழ்ந்திறப்பான்

க்குமன்றி துஷ்டரா யிருந்திடிற் கஷ்டம் நேர்ந்து சாரிணியை மணந்த அலன்ஷானைப்போல அவதிப்பட்டு அலையவேண்டு மல்லவோ ?

ஷாஜஹான்:-ஆ ! ஈதென்னவிந்தை சதிபதி மனதிசைந்து கலியாணஞ் செய்துக்கொண்டால் அவர்களுக்கு யாது காரணமாய் கலகம் நேர்ந்திடும், ஆகையால், அந்த சாரிணியைமணந்த அலனஷான் சரிதையைச் சற்று விவரித்துரைப்பாய்.

சோக்கரா:—சரி ! அவ்விதமே புகலுவேன் கவனிப்பீர்.

அநியாயஞ்செய்து ஆபத்துற்ற

அலன்ஷான்கதை.

சுந்தர்தேசத்திலிருக்கும் ஓர்வர்த்தகன் தனக்கு ஆண்குழந்தை ஜனித்திறந்தும் பெண் குழந்தை பிறக்கவில்லையேயென, மனவருத்த முற்றிருக்கையில் தெய்வாதீனமாய் அவன்மனைவி கர்ப்பவதியாகி தச மதியும்நிறைந்து ஓர்பெண்குழந்தையை யீன்றனள். வர்த்தகன் மனோ ல்லாசமெய்தியவனாய் தனது இனத்தின ரனைவருக்கும் நல்விருந்தளி த்து யாசக ரனைவருக்கும் தானதர்மம்புரிந்து ஜோதிடகணிதவல்லோ னால் சாரிணியெனபெயரிட்டு ஆசையாய்முத்தங்கொடுத்து மனைவியின் கரத்திற் றந்தனன். வர்த்தகன்மனைவி தனது புத்திரிக்குப் பாலூட்டிச் சீராட்டி வெகு மேன்மையாய் வளர்த்துவருகையில் சாரிணி கவிழ் ந்து தவழ்ந்து நடந்து நாளுக்குநாள் வளர்ந்து ஐந்துவயதான பிறகு தனதுதந்தையினால்விடுத்த வித்தியாசாலையிற்சென்று எழுத்து, அசை, சீர், தளை, இலக்கண, இலக்கிய சாராம்ஸ சாஸ்திரபுராண நூன்முறை யனைத்துங் கற்றுணர்ந்து பனிரெண்டாவதுவயதில் பருவதிசையடை ந்தனள், அந்தப் பெண்ணின் தாய் மிகவும் வாஞ்சையுடன் மங்கள ஸ்நானஞ் செய்வித்து நவரத்ன மயமாய்த் துலங்கும் ஆடை ஆபரண ங்களாற் சிங்காரித்து சுபசடங்குகளனைத்தும் நிறைவேற்றி தமதுஇன த்தினரனைவருக்கு நல்விருந்தளித்து அனுப்பியபிறகு சாரிணியை யாவ ருக்கேனும் மணஞ்செய்து விடுவோமென மணாளனுடன் ஆலோசனை செய்துக்கொண்டிருக்கையில் வர்த்தகன் சொல்லவதாயினன்.

விருத்தம்

கன்னிகையைக் கலியாணஞ் செய்வதற்குக்
கருதுபிதா வித்வானைத் தேடவேண்டும்
அன்னையோ தனவானை நாடவேண்டும்
அழகுளோன் தனையேபெண் தேடவேண்டும்
பன்னுகுரு விவேகியையே பார்க்கவேண்டும்
பந்துக்கள் வம்மிஷனை சேர்க்கவேண்டும்
நன்னயமா யிவ்விதமே யவரவர்க்கு
ஞாலமீ தற்றதொரு வழக்கந்தானே,

என்னுந் தன்மையாய் நமது அருந்தவபுத்திரியாகிய சாரினளுக்கு விவாகஞ் செய்வதற்கு யோசித்திடில் தந்தையாகிய யான் சாஸ்திர புராண நூன்முறை யனைத்துங் கற்றுணர்ந்த வித்வானைத்தேடவேண்டும் தாயாகிய நீபொன்பொருள் ஆஸ்திபூஸ்திநிறைந்த திரவியசம்பன்னனாய் விளங்கும் தனவானையே நாடுவாய் அந்தப் பெண் கைநிறைந்த பொன்னைப்பார்க்கிலும் கண்ணுக்கினிய கணவனைத்தேடுவாள் நமது குருவானவர் அறிவிற்சிறந்த விவேகியைக் கோருவார் சுற்றத்தார் நமது இனத்திற் ஜனித்தவனையே சேர்க்கவேண்டுமென் றெண்ணுவார்கள், இவ்விதமாயிருக்கின்றனவே உலகியல்பு இவையனைத்துங் கவனித்திடாமல் நமது மனதிற்கிசைந்தவிதம் பாஷிப்பது சரியல்லவெனப் பகர்ந்தனன், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற வர்த்தகன் மனைவி சரிதானென சும்மாயிருந்தனள் சிறிதுநாட்சென்றபிறகு வர்த்தகன் இறந்துவிட்டனன். அவன் வைத்திருந்த ஆஸ்தி பூஸ்தியை வைத்துக்கொண்டு தாயும் பெண்ணும் ஜீவித்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனமிற்க, "விஷத்துடன் ஜனித்த நாகசர்ப்பத்தைப்போல" துன்மார்க்கத்தை துணையாய் வகித்துத் தீயகுணவுடன் ஜனித்து உலகோர்க்கிடுக்கண் விளைவித்து பற்பல இடங்களில் அடி உதைப்பட்டு யாவரும் சீச்சீயென் றிகழும்படியான அலன்ஷானென்னும் போக்கிரிப்பயல்தன்தேசத்திற்பிழைப்பதற்கியலாமல்மறுநகர்க்கேகியாகினும் வயற்றை வளர்ப்போமென, கானகவாசியா யலைந்து சுந்த்ரதேசத்தில் வந்து அநேகரை வஞ்சித்துப் பொருள்பறித்து "அரசகுமாரனைப்போல" ஆடை ஆபரண சிங்காரலங்கிர்தனாய் ஊரைச்சுற்றித் திரிந்துக்கொண் டிருக்கையில் அத்தேசத்தின் வர்த்தகன் புத்திரியாகிய சாரினள் தனது சேடியருடன் நந்தவனத்திற்சென்று அங்ஙனம் புட்

பித்திருக்கும் நறுமணம் வீசும் மணமலர்களைப்பறித்து செண்டாகப் புனைந்து ஒருவர்மீ தொருவ ரெறிந்து விளையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயம், அலன்ஷான் யாதோ ஓர் காரியார்த்தமாய் பூங்காவிற்செ ன்று அங்ஙனம் சேடியருடன் விளையாடிக்கொண்டிருக்கும்சாரிணைக் கண்ணுற்று மனமயங்கி! அடடா! இவ்வளவு அழகானந்த முகவஜீ கர தேஜஸமைந்த பெண்களும் உலகிற் ஜனித்திருப்பரெனின் ஆச்சரி யமல்லவோ இவளை எந்ததனவான் மணந்து சுகித்திருப்பானே நாம் பார்த்துவிட்டு சும்மாய்ப்போவது சரியல்ல இச்சமயமே யாதேனும் ஓர் தந்திரோபாயமாய் ஆசை வார்த்தைப்புகன்று நமது காதலைத்தீர் த்துக்கொண்டு போகவேண்டுமெனும் மோசஎண்ணத்தைத் துணையா ய்வகித்து சாரிணள் தனித்திருக்கும் சமயம் அருகிற்சென்று பெண் ணே நீயார்? யானுனை சிறுவயதிற் பார்த்திருக்கின்றேன் அநேகநா ளாயினதால் ஞாபகமில்லையென்றனன். சாரிணள் இவன் உண்மையா னவனெனமதித்து ஐயா! யான் இத்தேசத்தின்வர்த்தகன்புத்திரி அவர் இறந்து நான்குமாதமாகின்றது எனது தாயாரும் யானும் மிகவும் விசனமுற்றிருக்கின்றோம். என்னசெய்வோம்? ஆஸ்திபூஸ்திதிஅநேக மிருந்தும் சுற்றத்தாரு மிருக்கின்றனர். யாவரிருந்தும் யாதுபயன் தந்தையை இழந்தேனேயென அவளுடைய மனவருத்தத்தைப்புகன் றனள், அலன்ஷான் இதுதான் தருணமென கைகுட்டையை முகத் தில்வைத்துக்கொண்டு ஐயோ! மாமா! ஆவியகன்றீரோவென வஞ் சகமாயழுது பெண்ணே! உனது தாயார் க்ஷேமமோ நல்லதிருக்கட் டும் சீக்கிரம் வருவாய் வீட்டுக்குப் போவோ மென்றழைத்துக்கொ ண்டு போகையில், சாரிணள் தமதுஇனத்தானென்றேநம்பிக்கொண்டு தன்தாய்க்குப்போய்ச் சொன்னாள். அவளும் அதிசயித்து ஓடிவந்து, அப்பா! நீயார் எங்கிருந்து வந்தனையென்று வினவினள். அலன்ஷான் தந்திரமாய் ஆ! மாமி! மாமாவைப் பறிகொடுத்தீரோவென்றழுது சற் றுநேரம் பொறுத்து, யாவரும் சமாதானமாய் பேசிக்கொண்டிருந்த னர். அப்பால் அவர்களனைவரும் அன்னம்புசித்து தாம்பூலந் தரித்து க்கொண்டிருக்கையில், அலன்ஷான் வர்த்தகன் மனைவியைப்பார்த்து, மாமி! எனது தந்தையும் மாமாவும் பிரியா நட்பினரா யிருந்தனர். ஓர்நாள் அவர் எமதுவீட்டிற்குவந்து சாரிணை எனக்குவிவாகஞ்செ ய்து கொடுப்பதாக வாக்குதத்தஞ் செய்திருக்கின்றனர். யான் எனது தந்தையுடன் ஓர்நாள் இங்கு வந்திருக்கின்றேன் அச்சமயம் சாரிண ளைக்கண்டேன் மறுபடியும் இன்றையதினம் நந்தவனத்திற் பார்த்து விசாரித்தே னென்று மிகவும் விஸ்வாச முள்ளவன்போற் பாஷி

த்துக்கொண்டிருந்த, மாமி எனது தந்தை ஐம்பது லக்ஷவிராகனும் அநேக மாளிகைகளும் பூஸ்திதிகளும் வைத்துவிட்டு இறந்து போயினர். அவ்வளவு ஆஸ்தி பூஸ்திதி யிருந்தும் என்னத்திற்கு யானொருவ னிருக்கின்றே னென்று விசன முற்றவன்போலபாஷித்துக் கொண்டிருந்த மாமி! யான் சாரிணாளை காந்தர்வமணம்புரிந்து எனது தேசத்திற் கழைத்துக்கொண்டு போகிறேன் நீங்களும் வந்தால் வெகு நலமாயிருக்கு மென்றனன். வர்த்தகன் தேவி கிஞ்சிற்றும் சம்மதியின்றி அப்பா! "காந்தர்வமணம் வேந்தர்க்குரியவை" நமது வம்ஸத்தினர்க் கியலாது. ஆகையால், நமது குருவின் மூலமாய் விவாகச்சடங்குகளனைத்துந் தவறாமல் புரியவேண்டுமென்க அலன்ஷான் மனமிரண்டு அடடா! ஈதென்ன ஆபத்தானகாரியமாக யிருக்கின்றதே, இவர்களினத்தின் குருவை யழைத்துவந்தால் நமது வார்த்தை யனைத்தும் பொய்யாய்ப் போகுமே யென்று விசனமுற்றவனாய், மாமி நீ சொன்னது சரிதான் யான்போய் வருகிறே னெனப் புகன்று தானிருக்கும் வீட்டிற்கு வந்து மிகவும் மனவருத்தத்துடன் நித்திரையின்றி மஞ்சத்தின்மீது சயனித்துக் கொண்டிருக்கையில், அவனுடைய சிநேகிதனாகிய ஹெபிலா வென்பவன் ஓடிவந்து ஏனையா அலன்ஷான் இரண்டு தினமாய் வெளியில் வருகிறதில்லை யென்று வினவினன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அவ் வஞ்சகன் மெல்லென எழுந்து ஹெபிலாவைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, அப்பா நீ எனக்கு ஓர் பேருதவி செய்யவேண்டும் அஃதியாதெனின் யான் இந்நகரத்தின் வர்த்தகன் புத்திரியாகிய சாரிணாளை கலியாணஞ் செய்துக்கொள்வதற் கிச்சித்தேன், அவர்கள் குருவின்மூலமாய் விவாகச்சடங்கு நடாத்தியபின் கலியாணஞ் செய்துக்கொள்ள வேண்டுமென்றனர். இதற்கு யாதேனும் ஓர் உபாயஞ் சொல்லுவீரென்றனன். ஹெபிலா யோசித்து ஐயா யான் குருவேஷம் தரித்து உமது இஷ்டப்படியே நிறைவேற்றுகிறேன் வருவீரென்று அலன்ஷானை அழைத்துக்கொண்டு சாரிணாள் வீட்டுக்குவந்து அவள்தாயைக்கண்டு, அம்மா யான் உமது வம்ஸத்தின் குருவென்று ஆசீர்வாதஞ் செய்தனன். அவள் உண்மையான குருவென மதித்து, நமஸ்காரம் புரிந்து சுவாமி! எனது குமாரத்திக்கும் இவருக்கும் திருமணம் புரிதற் கிச்சித்திருக்கின்றோம், தாங்களிதற்குரிய முயற்சி யனைத்தும் நிகழ்த்துவீரென்றனள். பொய்வேஷ தாரியாகிய ஹெபிலா சமயத்திற் கியன்ற தந்திரோபாய சாதுர்யமாய்ப் பாஷித்துக்கொண்டு அவர்களைத்தனதுமனம்போற் சம்மதிக்கச்செய்து, ஓர்சுபமுகூர்த்தத்

தில் அவர்களினத்தின ரனைவரையும் வரவழைத்து மணவரைப் பந்தல் ஜோடித்து, சாரினுளுக்கும் அலன்ஷானுக்கும் விவாகச்சடங்குகளனைத்தும் வெகு விமரிசையாய்நடாத்தித் திருமணம் செய்து வைத்தனன்.

அப்பால், அலன்ஷான் சாரினுளிடம் ஒருமாதம் வரையினும் சரசசல்லாப மனோல்லாசமாயிருந்து ஆசைதீர்ந்தபின்பு யாருடனுஞ் சொல்லாமல் தனது சுயதேசத்திற்கு ஓடிப்போயினன். சாரினுள் கெர்ப்பவதியா யிருந்து தசமதியும் நிறைந்து, ஓர் சுபதினத்தில் ஓர் ஆண் குழந்தையை ஈன்று அன்புடன் வளர்த்துக்கொண்டிருந்தனள். ஆனால், ஒருவருஷகாலம்வரையினும் அலன்ஷான் வராதகாரணமென்னவென்று விசனமுற்றவளா யிருந்தனள். அச்சமயத்தில் ஹெபிலா வந்து, அம்மா அலன்ஷான் எங்குசென்றனர். அநேக நாள் வரையினும் காண்கிலனே யென்று விசாரிக்க, சாரினுள் நிகழ்ந்தவை யனைத்தும் புகன்று ஓர் கடிதத்தில் தனது மனக்கவலையனைத்தும் விபரமாயெழுதி அவன்கையிற் கொடுத்து, நீர் கிருபைகூர்ந்து என் மணாளனுக்குத் தந்து இங்ஙனம் அழைத்துக்கொண்டு வருவீரென்று வேண்டினள்.

ஹெபிலா அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, அங்கிருந்து புறப்பட்டு அலன்ஷானிடம் வந்து சாரினுள் தந்த கடிதத்தையும் கொடுத்து அவனுக்குச் சில நீதிகளைப் புகன்றனன். அந்நிருபத்தைக் கண்ணுற்ற அவன்கிஞ்சிற்றேனும் மனமிரங்காமல், சாரினுளுக்கும் தனக்கும் நடந்தது சரியான திருமணமல்ல வென்றும், ஹெபிலா நீசஜாதி கிஞ்சிற்றேனும் சுசிகரமில்லாதவன் அவனைத் தமது குருவென மதித்து அவனால் விவாகச்சடங்குநடத்தி மணம்பெற்றியதால் அதுதகாது இவைகட்குக் காரணகர்த்தா சாரினுளின் தாயாகையினால், அவளை அடித்து உதைத்துக் கைகாலை யொடித்துவிட்டு, சாரினுள் எவனாவது ஓர்ஏழையைமணந்து ஜீவித்திருக்கவேண்டுமென்றும்,ஓர்நிருபத்தில் எழுதி பக்குவமாய் மடித்து,ஹெபிலாவின் கரத்திற் கொடுத்து சாரினுளுக்குத் தருவாயென்றனுப்பினன். அவனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து அங்கிருந்து புறப்பட்டு சுந்தர் தேசத்தில் வந்து சாரினுள் கையிற் கொடுத்தனன். அவள் அந்நிருபத்தை வாசித்துப் பார்த்து, மனவிசாரமுற் றழுதனள். அருகிலிருந்த ஹெபிலா ஆச்சரியமடைந்து, ஏனம்மா அழுகிறாயென் றுவினவ, அவள் உற்றவையனைத்தும் புகன்றனள்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஹெபிலா மிகவும் கோபங் கொண்டு அம்மணி அந்த அலன்ஷானென்பவன் மிகவும் மோசக்கருத்துடைய வஞ்சகன். அவன் தனக்கு கலியாண மில்லையென்று கவலையடைந்து என்னை குருவாயிருந்து தனக்குத் திருமணமியற்றும்படி வேண்டிக்கொண்டதினுல், யான் இந்தக் காரியத்திற் பிரவேசித்தேனன்றி இவ்வித மோசஞ் செய்வானென்று முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால் ஒருக்காலும் சம்மதியே னென்று மனவருத்த முற்றுப்போயினன், அப்பால் சாரினுளுக்கு அலன்ஷான்மீதிருந்த காதலால் அவனை எவ்விதமாயினும் வரவழைக்க வேண்டுமென்று வெகு மரியாதையாய்க் கடிதம் எழுதியனுப்பியும் அலன்ஷான்கிஞ்சிற்றும் சம்மதியின்றியவனுய் தன் தேசத்திலிருக்கும் தனவந்தன் குமாரத்தியாகிய கோகர்ஜா னென்னும் பெண்ணைக் கலியாணஞ் செய்துக் கொள்ளுவேன். ஆகையால் யான் வருவதற்கியலாது இனி வீணிற்கடிதமெழுதியனுப்புவதாற் பிரயோசன மில்லை. உனக்கு யான் மணுளனென்பதை யாவரேனுங்கவனித்தா லென்னை இகழ்ந்து பரிகாசிப்பார். இனி உனக்கிஷ்டமான ஓர் ஏழையைக் கலியாணஞ் செய்துக்கொள்வாயென்று பதிலெழுதி யனுப்பினன்.

இங்ஙனம் நிற்க, அலன்ஷான் யெழுதி யனுப்பிய நிருபத்தைக் கண்ணுற்ற சாரினுள் மிகவும் மனவருத்தமுற்று அடடா! ஈதென்ன மோசமென்று விசனமடைந்து, தனது அன்னையின்பாற்சென்று அழுதுத் துடித்து அம்மணி! இந்நிருபத்தைக் காண்பாயென்று கொடுத்தனள். அந்தப் பெண்ணின் தாய் நிருபத்தைப்படித்துப் பார்த்து ஆ! விதிவசமே "எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தியாலே பிழைமோசமாகு மென்பதுபோல" அந்தவஞ்சகனுகிய அலன்ஷானுக்கு அருந்தவப் புத்திரியைக் கொடுத்து அவதிப் படலாச்சுதேயென, மனம்வெறுத்து, அம்மா சாரினுள் நீ யாதொரு சஞ்சலமு மெய்தாதே அவரவர்க் கியன்றவிதமே ஆண்டவனுல் விதிப்ப துலகியற்கையாதலின் உனக்கு மணுளனிருந்தும் விதவையாயின காரணம்போலாயிற்று, ஆயினும் நமக்கு அன்னவஸ்திரத்திற்குக் குறையில்லாமல் உனது தந்தை அநேக ஆஸ்தி பூஸ்திதிகள் வைத்திருக்கின்றனர். இதனைச் சிலவழித்து யா மிருவரும் ஜீவித்துக்கொண்டிருப்போ மென்றனள்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சாரிஞள் மிகவும் மனவருத்த மடைந்து, ஐயையோவிதிவசமே! எனது இளம்பருவம் விருதாவாயி னவே யான்உலகில்உயிரோடிருந்தும்பாதுபயன் "நாரில்லாமலர்போ லும் நதியில்லா வயல்போலும், தாயில்லா சேய்போலும், தத்தளிக் கும்" நாயகனில்லா நங்கையானேனேயென்றழுதுக்கொண்டிருந்தும் அலன்ஷான் மீதுற்ற காதலால் அவன்தேசத்திற்சென்று, அவனிடம் பேசியாகிலும் கைவசப்படுத்திக் கொள்வோமெனும் பேராவலுடன் யாதொருவர் துணையுமின்றி சுந்தர் தேசத்தை விடுத்து ஆரண்யமார் க்கமாய்ச்செல்வதாயினள். அச்சமயம் வழியிலெதிருற்ற மார்க்கத்தில் ஹெபிலா வருவதைக் கண்ணுற்று, ஆ! அண்ணு! வென்றலறி அவன் பாதத்தில் வீழ்ந் தழுதனள். அவன் பரிதாபமுற்றவனுய் அம்மணி! எனிந்தக் கானகத்தில் யாதொரு துணையுமின்றி தனியாகச் செல்கிரு யென வினவினன். சாரிஞள் தனது மனத்துயரனைத்தும் புகன்று அண்ணு! இனி எவ்விதமாயினும் எனது மணுளனை என் கைவசப் படுத்த ஓர் நன்முயற்சி செய்யவேண்டுமென வேண்டிக்கொண்டனள். ஹெபிலா சற்று யோசித்து, அம்மணி! அந்தத்துன்மார்க்கனுக்கு எவ் வளவு மதியுரைத்திடினும் கேளான். ஆனல், என்மனதிலோர் ஆலோ சனை தோற்றுவதாயின. அஃதியாதெனின். அந்த அலன்ஷான் நடன மாதர்களின்மீது அதிக ஆசையுடையவனுகையால், யான் உனக்கு அபிநய சரசசிங்கார பரதநாட்டியமும், சங்கீதசாஹித்யமாய்ப்பாடும் பனுவல்களும் கற்பித்துக் கொடுக்கிறேன் நீயும் ஓர் நடனதாசியென பெயர்வகித்துக்கொண்டு வருவாயாகில் யானுனை அலன்ஷானிடம் அழைத்துச் செல்கின்றேன். நீ அவன் மனம் களிக்க ஆடிப்பாடி சந் தோஷிக்கச் செய்தால், அத்தருணமாயினும் உன்மீது மையலுற்று ஆசையா யிருப்பானென்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சாரிஞள் மனமகிழ்ந்து, அவ்விதமே நன்கெனச் சம்மதித்தனள். ஹெ பிலா அவளுக்கு ஆடல்பாடல் வெகு விமரிசையாய்க் கற்பித்து, ஓர் நாள்; அவளை அலன்ஷான் வீட்டிற்கழைத்துக்கொண்டு தான்முன்ன தாய்ச்சென்று அவனுடன் தமாஷாய்ப் பாவித்துக்கொண்டிருந்த னன். அச்சமயம் தாசிவேஷம்புனைந்திருக்கும் சாரிஞள்வந்து அலன் ஷானைப் பணிந்து, தான் தென்தேசத்தின் நடனதாசியென்றும் தன் னுடைய நடனகச்சேரியைக் கண்ணுற்றகமகிழ்ந்து தன்மேல் விஸ் வாசமாயிருக்கவேண்டு மென்றும் வேண்டிக்கொண்டனள். வஞ்சக ஞகிய அலன்ஷான் நன்கெனச் சம்மதித்தனன். சாரிஞள் இதுதான் தருணமென்று தான் கற்றுணர்ந்த பரத நாட்டியத்தை வெகு விமரி

சையாய் நடித்தனள். இவளுடைய முகக்குறிப்பை யுணர்ந்த அலன் ஷானென்பவன் சாரிணுள் மாறுவேஷமாய் வந்தனளென மதித்து, இனிநாம் இவளுடன் பாஷித்துக்கொண்டிருந்தால் கோகர்ஜான் நம்மை மணம்புரியாளென்றெண்ணி, பெண்ணே! சாரிணுள்! உன் திருட்டுத்தனத்தை யான் கவனித்துக்கொண்டேன். இனி இங்கு தாமதித்தால் ஆபத்தடைகுவாய். ஆகையால், தீவிரமாய் ஓடிப்போவாயென்று அதட்டினன், அருகிலிருந்த ஹெயிலா மனந்தாளாமல்,ஐயா! அலன்ஷான் நீர்புரியும் அநியாயம் நீதிக்கு விரோதமல்லவோ? இந்த சாரிணுளை விவாகஞ் செய்துக்கொண்டு சரியாய் வாழ்ந்திராமல் ஓடிவந்துவிட்டீர். தற்சமயம், அவள் நேரில்வந்து உம்மை வருந்தியும், வெறுத்துப்பேசி துரத்துகின்றீரே இது ஆண்டவனுக்குச் சம்மதமாகுமோ வென்றனன். அலன்ஹான் புங்நகை புரிந்து, யான் கோகர்ஜானை விவாகஞ்செய்துக்கொள்வதற்கு யோசித்திருக்கின்றேனே. இவளென்னத்திற்கு வேண்டியதில்லையென்றனன். ஹெயிலாகோபங்கொண்டு, சீச்சீ! உன்னுடைய வஞ்சகநினைவை ஆண்டவனே அழித்திடுவானென்றுசொல்லி அம்மா! சாரிணுள் இனி உன் மணாளனிறந்தானென தீர்மானித்து, உன்தாய்வீட்டிற்குப் போய்விடுவாயென்றனுப்பிவிட்டு, அங்கிருந்து கோகர்ஜான் தந்தையின்பாற்சென்று அலன்ஷானுடைய துர்க்குணத்தை யெல்லாம் புகன்று அவனுக்கு உமது குமாரத்தியைக் கொடுக்கவேண்டாமெனப் புகன்று தனதிருப்பிடம் போய்விட்டனன்.

இங்ஙனம் நிற்க, அலன்ஷான் தனது வழக்கப்படியே நவரத்ன கசிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களைச் சிங்காரித்துக்கொண்டு கோகர்ஜான் தகப்பனைக்கண்டு கலியாண விஷயத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில், அருகிலிருந்தவர் கலகலவென சிரித்தனர். அலன்ஷான் அதிசயித்து, ஏனிவ்விதம் நகைப்பதாயினீரென்றனன் அச்சமயம், ஹெயிலாவும் யாதோ ஓர் காரணார்த்தமாய் அங்கு வந்திருந்தமையால் அவன் அலன்ஷானைப்பார்த்து அப்பா! உன்னைப்போல சமர்த்தர் உலகிலுளரோ? நீ அணிந்துவந்த ஆடை ஆபரணமெல்லாம் உனக்குச் சொந்தமா? இவையனைத்தும் இரவல் தானே! உமது உத்தியோக மென்ன ஊராரை மோசஞ் செய்யும்வஞ்சக தொழில்தானே, நீ திருடாத நாளேது, உதைபடாத தினமேது, சாரிணுளை மணந்து சுந்தர்தேசத்தில் விடுத்து ஓடிவந்தபாபியல்லவா? இப்போது கோகர்ஜானையும் மணந்து விதவையைப் போற் சதாசஞ்

சலத்தி லாழ்ந்திடச் செய்வதற்கு எண்ணங்கொண்டீரோ? இன்னும் எத்தனை பெண்களை இவ்விதமாய் மோசஞ்செய்வதற்கு நினைந்தீரோ வென்று சிரித்தோ மென்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அலன்ஷான் நாணத்துடன் வெட்கித் தலைகுனிந்தனன். அவனுடைய துர்நடத்தையைக் கண்டுணர்ந்தவர்களிற் சிலர் அங்ஙனம் வந்திருந்தமையால், இவன் மோசத்திற் பிறந்து, மோசத்தில் வளர்ந்த மோசக் காரனாகையால், இவனை ஆளுக்கொரு உதை உதைத்துத் துரத்தவேணுமென்று அவமரியாதையாய் தூஷித்து, அடித்து உதைத்துத் துரத்திவிட்டனர்.

இங்ஙனம் நிற்க கோகர்ஜானைக் கலியாணஞ் செய்துக்கொள்ள வேண்டுமென்று ஆசையாய் வந்த அலன்ஷான் அவமானமடைந்து அடிஉதைப்பட்டு அங்குநிற்பதற்கு பயமடைந்தவனாய்ஓடிவிட்டனன். அப்பால் சாரினாளிடத்திற்குப் போவதற்கும் நாணமுற்றவனாய் துயரப்பட்டுக் கொண்டிருந்தனன். ஆகையால் யாதாமொருவரும் ஓர் பெண்ணைக் கலியாணஞ் செய்துக்கொண்டால் தனது வாழ்நாள்வரையினும் அன்பா யிருக்கவேண்டும். அஃதன்றி மனம்வெறுத்தால் மஹா துயருற்று ஆபத்தெய்துவார். அத்தன்மையாகவே நமது எஜமானாகிய அமீர் மாஹிஜாபினைத் துரத்தி விடுவதற்கு கடிதமெழுதியிருக்கின்றனர். நமக்கென்ன எவ்விதமாயினும் போகிறார். நாம் கஷ்டப்பட்டால் தானே அன்னவஸ்திரங்கொடுக்கிறார். இல்லாவிட்டால் நமக்கும் அவருக்கும் என்ன சொந்த மிருக்கிறது, இத்தனைநாளாய் நீர் அவரிடத்தில் அன்பாயிருந்தும் உம்மை அநியாயஞ் செய்தனரே அதனாற்றான் கண்ணிழந்த குருடனாயினர். சரி போனதுபோகட்டும் நீரென்னுடன் வாரும் நாம் மதன்பூருக்குப் போய் விடுவோமென்றுரைத்தனன்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஷாஜஹான் தன்மனதிலிருந்த வருத்தமனைத்துந் தவிர்ந்து, அந்தத்துஷ்டனாகிய அமீருக்கு அவ்விதமாகிய தண்டனை யமைந்ததே சரியானதென்று சந்தோஷமாய்ச் சொல்வ தாயினன்.

ஷாஜஹான்:—ஆ! ஹா! யாதாமொருவரும் தனக்கு நேரிடுவதையறியாமற் பிறருக்குத் துன்பம் விளைவிப்பதற்கு முயற்சி புரிவது அநியாயந் தானே ஆகையால்,

விருத்தம்.

பூதலத்தில் வாழ்ந்திலகும் மாந்தர்தம்மில்
புண்ணிய பாபத்துண்மை கவனியாமல்
தீதுடனே யனுதினமும் பிறர்க்குத் துன்பம்
தீங்கினையும் விளைவித்து பழியையேற்று
நீதமிலா துஷ்டரென நீணிலத்தோர்
நினைக்கின்ற பாதகருக் கெந்தனாளும்
வேதனையே மிகவிளைந்து அழிவாரென்று
மேதினியோர் சொல்வதுவு முண்மைதானே.

என்பது உண்மையாச்சுதென்று ஷாஜஹான் சொன்னதைக் கேள்வியுற்ற சோக்கராவும் நகைத்து சாஹேப் அமீர் புரிந்த அநியாயத்தினால் ஆபத்தடைந்தான் இனிநாம் மதன் பூருக்குப் போவோம் வருவீர்.

என பகர்ந்தவை வினவிய ஷாஜஹான் சற்றுயோசித்து அடடா! இதுதான் நல்ல தருணம், இவன் இந்தக் கடிதத்தைக் கொண்டு போய்க் கொடுத்தவுடனே அப்துல் அசீஸானவன் மாஹிஜாபினை அழைத்துக்கொண்டு மதன்பூருக்கு போவதற்காக இவ்வழியாய்வருவான். அச்சமயத்தில் யாம் மாஹிஜாபினை அழைத்துக்கொண்டு ஓடிப்போய் விடுவோமென்றெண்ணினவனாய், அப்பா! சோக்கரா யான் இந்த வனத்திற்றானே காலங்கழித்துக்கொண்டிருக்கின்றேன் நீசெல்வாயென்றனுப்பி விட்டனன்.

அப்பால் சோக்கரா வென்பவன் ஷாஜஹானிடம் செலவுபெற்று ஒட்டகத்தின்மீது ஆரோகணித்துக்கொண்டு ஆரண்யமார்க்கமாய் மதன்பூருக்குச் செல்வதாயினன்.

காக்ஷி. 3.

இடம் மதன்பூர்

கதாநாயகர்.

அப்துல் அசீஸ். ஷம்ஷுத்தீன். சோக்கரா.

அப்பால், சோக்கராவென்பவன் வனசஞ்சாரியாய் அநேக நாள் வரையினுஞ்சென்று மதன் பூரில்வந்து அங்ஙனம் நவரத்ன வியாபாரஞ்செய்யும் அப்துல் அசீஸ் கையில் நிருபத்தைக்கொடுத்து சொல்வதாயினன்.

சோக்கரா:—அஜரத்! உமது குமாரத்தியாகிய மாஹிஜாபின் தனது மணாளனாகிய அமீர் கண்ணைக்கலக்கிக் குருடனாகச்செய்து விட்டனள். அதனால் அவர் கோபித்து உம்மைவந்து எஜமானியை அழைத்துக் கொண்டுபோகும்படி நிருபமெழுதித் தந்தனர்.

அப்துல்அசீஸ்:—அடடா! ஈதென்ன ஆச்சரியம்? மாஹிஜாபின் கல்வியிற்றேர்ந்து கற்புநிலை வழுவுறாத உத்தமியாச்சுதே. அவள் யாதுகாரணமாய்க் கணவன் கண்ணைக்கலக்கிக் குருடனாகச்செய்திருப்பாள்?

சோக்கரா:—ஐயா? எத்தகைய உத்தமராயிருந்திடினும் காலவித்தியாசத்தாற் கலகம் விளைவித்துப் பகைஞராவதைக் கவனித்திலீரோ? அத்தன்மையாகவே உமது புத்திரிக்கும், மருகனுக் அகஸ்மாத்தாய்க் கலகம் நேர்ந்தது.

அப்துல்அசீஸ்:—என்ன ஆச்சரியம்? உடலுயிர் போற்பிரியா நட்பினராயிருந்த சதிபதிகட்குக் கலகம் நேர்ந்ததற்குக் காரணம் யாதோ?

என, சந்தேகமெய்தியவனாய் அந்நிருபத்தை அருகிலிருந்த ஷம்ஷுத்தீன் கையிற்கொடுத்து வாசித்துப்பாரென்றனன். அவன் நிருபத்தி லெழுதியிருந்த சங்கதியனைத்தும் படித்துப்பார்த்து மனசஞ்சலமுற்றவனாய் மரம்போ லசைவற்றிருந்தனன். அப்துல் அசீஸ் ஆச்சரியமடைந்து, மைந்தா! ஏன் மவுனமுற்றிருக்கின்றனை யென்று வினவினன். ஷம்ஷுத்தீன் சோக்கராவை ஹலப் தேசத்திற்குப் போவா யென்றனுப்பிவிட்டு அவன் போனபிறகு அப்துல் அசீஸுக்குச் சொல்வதாயினன்.

ஷம்ஷுத்தீன்:--தந்தையே நிருபத்தில் வரைந்துளதாகிய சங்கதியை க்கவனித்திடில் எனக்கே ஆச்சரிய மெய்துகின்றன. அஃதே னெனின் நம்மை கடற்கரையிலிருந்து அழைத்துச்சென்ற ஷாஜஹான் மாஹிஜாபினிடத்தில் சரசசல்லாப மனோல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருந்ததைக் கண்ணுற்று மனம்சகியாத அமீர் தனது கையிலிருந்த கத்தியால் ஷாஜஹான் நாசியை அறுத்துத் துரத்திவிட்டதினால் மாஹிஜாபினுக்குக் கோபமபிறந்து அமீர் கண்ணில்அறைந்து குருடனாகச்செய்துவிட்டதாகவும், அதனால் இத்தகைய துஷ்டவிபசாரி தன்னிட மிருக்கலாகாது தந்தையாகிய நீர்வந்து அழைத்துக்கொண்டு போவீரென்றும் எழுதியிருக்கின்றது.

என, சொல்லி வாய்மூடு முன்னமே அப்துல் அசீஸுக்கு கோபம் பெருகி மீசை துடித்துப் பற்களை நெறநெறவெனக்கடித்து; கண்விழி சிவந்து பெருமூச்சு விடுத்துச் சொல்வதாயினன்.

அப்துல் அசீஸ்:—ஆ! மைந்தா! மாஹிஜாபின் யாதுகாரியஞ் செய்தனள் பார்த்தனையா? ஐயோ! இத்தனைநாள் வரையினும் எமது வம்ஸத்தினர்களில் யாதொருவரும் விபசாரத்வம் செய்திலரே. இத்ததி இத் துன்மார்க்கிபுரிந்த அநியாயத்தை நினைக்க நினைக்க எனதுளம் பலவிதமாய்ப் பதறுகின்றனவே. அன்றியும், நாம்ஆதரவற்ற பரதேசிகளாய் மனந்திகைத்திருக்கையில் அஞ்சேலெனஅபயாஸ்தந்தந்து அன்னவஸ்திரங்கொடுத்து ஆதரித்த தயாநிதியைக் குருடனாகச் செய்தனளே. இப்பழிபாபத்திற்கு யாதுசெய்வோம், அப்பா ஷம்ஷுதீன் நீஎனது சுவீகாரப் புத்திரனாகையால் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" யென்னுந் தன்மையாய் இத்ததியே ஹலப் தேசத்திற் சென்று அமீரைப்பணிந்து எனது நமஸ்காரம் அவருக்குச் சொல்லிவிட்டு அந்தப் பாதகியாகிய மாஹிஜாபினை அழைத்துக் கொண்டு ஆரண்யத்திற்போய் அவள் சிரசைவெட்டிப்போட்டு வருவாய்.

என, பகர்ந்ததை வினவிய ஷம்ஷுத்தீனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, ஐயோ! நாம் ஓர் இராஜகுமாரனு யிருந்தும் என்னென்ன கஷ்ட நிஷ்டூரத்திற் காளாயினோம், தற்சமயம் நமது தாய்வயற்றிற் ஜனித்த தங்கையைப்போன்ற மாஹிஜாபினை சிரசை வெட்டுதற்கும் உடன்பட்டோமே, ஆ! விதிவசமே இவ்விபரீத்தொடு

வழக்கிற்கு பாதுசெய்வேனெனும் மனமயக்கத்துடனே அப்துல் அசீஸ்கொடுத்த வெட்டுக்கத்தியைக் கரத்திலெடுத்துக்கொண்டு ஆரண்யமார்க்கமாய்ச்சென்று ஹலப்தேசத்தில் வந்து அமீரைக் கண்ணுற்று வந்தனம்புரிந்து அங்குநிகழ்ந்த உண்மையனைத்துங் கவனித்து மாஹிஜாபினை யழைத்து, அம்மணி! நீ நற்குலத்திற்பிறந்த சற்புத்திரியாயிருந்தும் இத்தகைய அநியாயஞ் செய்யலாமோவென, அவள் ஷாஜஹானால் விளைந்த சங்கதியனைத்தும் ஆதியோடந்தமாய் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ப் புகன்று, அண்ணா! உலகின் மாந்தர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னால்வருவது முன்னால் தெரியாதென, கண்ணீர் சொரிந்து மனவருத்தமாய்ப் புகன்றனள். இவையனைத்துங் கவனித்த ஷம்ஷுத்தீன் ஆச்சரியமடைந்து அடடா! இவையனைத்தும் அந்த ஷாஜஹானால் விளைந்திருக்கின்றன. ஆகையால், கலகத்திற்குக் காரண கர்த்தா அவன்தானென தீர்மானித்து இனி யாது செய்வதென அங்ஙனமே நின்றிருந்தனன். அச்சமயம் அமீர் ஓடிவந்து அப்பா! ஷம்ஷுத்தீன் இனி உங்கள் உறவுபோதுமானது இச்சமயமே இந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டுபோய் விடுவீரெனபுகன்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஷம்ஷுத்தீன் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து அம்மா! மாஹிஜாபின் நமது தந்தை உன்னை அழைத்துக்கொண்டு வரும்படியாயென்னை அனுப்பினர். உனது நாயகனாகிய அமீரும் உன்னைபோகும்படியாய்ச்சொல்கின்றாரே நீ என்னுடன்வருகின்றனையாவெனவினவினன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அந்தப்பெண்ணும் அவ்விதமே வருகிறேனென்றனள். ஷம்ஷுத்தீனானவன் அமீரிடம் செலவுபெற்று மாஹிஜாபினை அழைத்துக்கொண்டு மதன்பூருக்குப்போகும் மார்க்கத்தில் வழியிலெதிருற்ற பயங்கரமான இருட்சூழ்ந்த கானகத்தில் வருகையில் ஷம்ஷுத்தீன் மனங்கசந்து ஆ! விதிவசமே பெண்ணைக்கொன்று பழிதேடிக் கொள்வதற்கும் ஆளாயினனேயென்று சொல்லிக்கொண்டே இடுப்பிற் சொருகியிருந்த கத்தியைக்கையிலெடுத்து ஓங்கினன். அந்தப்பெண் ஜிவ்வென்றெகிறி அலறித்துடித்து அப்பாற் குதித்துச்சொல்வதாயினள்.

மாஹிஜாபின்:—ஆ! ஈதென்னவிந்தை? அநியாயமா பெண்ணைக் கொல்வதற்குத் துணிந்து கத்தியை ஓங்கினீரே!

ஷம்ஷுத்தீன்:—ஆ! அம்மணி! யானென்னவென் றுரைப்பனே் தந்தையின் சொற்றவறி நடப்பது தர்ம விரோதமல்லவோ?

மாஹிஜாபின்:—அவருமக்குச் சொன்னதென்ன?

ஷம்ஷுதீன்:—நீ உனது நாயகனுசிய அமீரை கன்னத்தி லறைந்து கண்ணைக்கலக்கிக் குருடனுகச் செய்ததனுல், உன்னை காட்டில ழைத்துச்சென்று வெட்டிப்போடும்படியாக என்னை அனுப் பினர்.

மாஹிஜாபின்:—ஐயோ! ஈதென்ன அநியாயம்? நிகழ்ந்த உண்மை மையயுணராமல் என்னை இவ்விதமாய்க் கொல்லத் துணிவது பாபமல்லவோ? அண்ணு! உலகிற் ஜனித்த மாந்தர்கள் ஸ்திரீ ஹத்தி செய்தால் தீவினைக் குட்பட்டு தீராப்பழி பாபத்திற் காளாயிருப்பாரென்பதைச் சற்றேனும் கவனித்திலீரோ

ஷம்ஷுதீன்:—நீ சொல்லும்போதே எனதுளம் பலவிதமாய்ச் சிந் திக்கின்றனவே யானென்செய்வேன். அம்மணி! இப்பழிபாப த்திற் குட்படாமல் உன்னை உயிருடனே விடுத்துப்போகிறேன். நீ இந்தக் கானகத்தில் காய் கனிகளைப்புசித்து ஜீவித்துக்கொ ண்டிருப்பாயாகில் ஆயுட்பிரமாணம் முடிந்தபிறகு ஆண்டவன் கிருபையால் சொர்க்கபதவியிற்போய்ச் சேர்ந்திருப்பாய்.

என, நவின்று ஷம்ஷுதீனென்பவன் மாஹிஜாபினை அங்ஙன மேவிடுத்து மனசஞ்சல முற்றவனுய் மதன்பூருக்கு அழுதுக்கொண்டு போயினன்: இவன் வருகையைக் கண்ணுற்ற அப்துல் அஸீஸ் ஓடி வந்து, அடா மகனே ஏனிவ்விதமாய் அழுகின்றனையென்று வினவி னன்: ஷம்ஷுதீன் பொய் சொல்வதற்கு சம்மதியின்றியவனு யிருந் தபோதிலும்.

விருத்தம்,

பொற்கொடிமணற்றும்போதும் பொதுமகளிணங்கும்போதும்
நற்குலமழியும்போதும் நல்லவர்தம்மைக்கொல்ல
அற்பர்கள்நினைக்கும்போதும் அருஞ்சமர்விளையும்போதும்
சொற்பெரும்துணைசெய்தற்குச் சொல்லலாம்பொய்யைத்தானே.

என்னுந்தன்மையாய், இவ்விஷயத்தைக்குறித்து பொய் சொன் னுல் தோஷமணுகாது அஃதன்றி உண்மையைப்புகன்ருல்இவனுடை யரோஷத்தினுல் காட்டிற்போய் மாஹிஜாபினைத் தேடிப்பிடித்துக் கொன்றுவிடுவானென்றெண்ணி மறைத்துச் சொல்வதற்கும் நாவெ ழாமல் மனந்திகைத்துக் கண்ணீர்த் ததும்ப விசனமுள்ளவனுய் வா ய்குளறி தந்தையே தங்கையாகிய மாஹிஜாபின் மரணமுற்றனளெ

ன்று கோவென்றலறி அழுதனன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற அப்துல்அசீஸ் மனமகிழ்ந்து மைந்தா! அந்த விபசாரியைக்குறித்து நீ விசனப்படாதேயென்று சந்தோஷமுற்றவனாய் இனி நமது வம்ஸத்திற்கு யாதொரு அபகீர்த்தியும் வராதென்று இடதுகையினால் தனது மீசையை முறுக்கினான், அச்சமயமே அவன் புரிந்த அநியாய தீர்ப்புக்கிசைந்தவிதமாய் அவன் இடதுகண்ணில் சுருக்கென வலிய திகரித்தது உடனே தனதுகையால் தேய்த்துக்கசக்கினான். கண்ணொளிமழுங்கிக்குருடனாயினன். ஷம்ஷுதீன் திடுக்கிட்டு ஐயையோ தந்தையே உமக்கு இவ்விதி யமைந்தனவோ? இனியா னெவ்விதமாய் மனந்துணிவேனென் றழுதனன். அருகிலிருந்தவர் ஈதென்ன ஆகஸ்மாத்தாய்க் கூச்சற்கிளம்புகின்றதேயென ஓடிவந்துபார்த்து அப்துல் அஸீஸ்கண்ணில்வருகிற இரத்தத்தையெல்லாம்கழுவி வைத்தியர்களை வரவழைத்து சவுக்கியப்படுத்துவீரென்க அவர்களிடமிருக்கும் கண்ணோய் அவுஷதங்களிற் சிலவற்றைக்கொடுத்தும்சவுக்கியமாகாததால் தங்களால் முடியாதென்று போய்விட்டனர் அப்துல் அசீஸ் சதாசஞ்சலத்தி லாழ்ந்தவனாய் விசனப்பட்டுக்கொண் டிருக்கையில் வர்த்தக விஷயத்தை ஷம்ஷுதீன் பார்த்துக் கொண்டிருந்தனன்.

இங்ஙனம், ஓர்நாள் அப்துல் அஸீஸ் தனக்குற்றவை சாதாரண கண்வியாதியாயிருந்தால் வைத்தியர்கள் தந்த மருந்தினால் சவுக்கியமாய்விடாதோ? இதுஏதோ பழிபாபத்தா லுற்றதென்றே தீர்மானித்துக்கொண்டு ஷம்ஷுதீனுக்குச் சொல்லுதாயினன்.

அப்துல்அஸீஸ்:—மைந்தா! யான் அவனியிற் ஜனித்து இத்தனைநாளாய் யாதொரு பாபமும் புரிந்திலேனே எனக்கு யாதுகாரணமாய் இத்தன்மையான ஆபத்தெய்துவதாயினவோ? அறிகிலேனே.

ஷம்ஷுதீன்:—தந்தையே! யாதாமொருவரும் மனதறியபழிபாபஞ் செய்திலர் தனக்குந்தெரியாமலே ஆபத்தெய்துங்காரணம்போற் பாபமும் வந்துசூழும்.

அப்துல்அஸீஸ்:—ஈதென்ன ஆச்சரியம்? துர்க்குணத்தாற் புரியும் பாபம் தனக்குந் தெரியாமல் விளைவதெனின் நம்பத்தக்கதோ?

ஷம்ஷுதீன்:—தந்தையே! எத்தகையமாந்தரும் நன்மைசெய்தால் நலம் பெறுவோம். தீமைசெய்தால் துன்புறுவோமென்றெண்ணினாலும் புண்ணியஞ்செய்வதற்குக் கிஞ்சிற்று சம்மதித்திடி

னும் பாபஞ்செய்வதற்கு மாத்திரம் தாராளமாய் மனந்துணிந்திடுவர் ஆனல், கல்வியிற்றேர்ந்த அறிஞர்களும் தமது மனதை வெகு ஜாக்கிரதையாய்க் கவனித்துப் பாபத்தை அருகில்வர வொட்டாமல் புண்ணியத்தைச் செய்வதற்குமாத்திரம் சம்மதிப்பர் மதியீனர்கட்கு இவை யனைத்துந் தெரியாது.

அப்துல்அசீஸ்:—சரி! அவ்விதமாயினும் யான் யாதோர் பாபமும் புரிந்திலேனே எனக்குந் தெரியாமல் யாதுதீது விளைந்திருக்குமோ? அறிகிலேனே.

என, தனது சிரசின்மீது கையைவைத்துக் குனிந்த வண்ணமாய்ப் பூமியைப்பார்த்துக் கொண்டிருந்தனன் அருகிலிருந்த ஷம்ஷூதீன் அப்துல் அசீஸ் மனதைத்தேற்றி அவனல் நேர்ந்த பழிபாபத்தைச் சொல்வதாயினன்.

ஷம்ஷூதீன்:—தந்தையே! தன்குற்றமுணரா பிறர் குற்றங்கவனிப்பவர்போற் சந்தேகமெய்துவது நன்கல்ல. நீர் தற்சமயஞ்செய்தது பெண்பழியல்லவோ? அந்தப் பழிபாபத்திற்குச்சரியாய் உமது இடதுகண் குருடாயின இதற்கு யாவரென்செய்குவர்.

அப்துல்அஸீஸ்:—ஆ! அப்படியா! மாஹிஜாபின்செய்த விபசாரத்திற்குரிய தண்டனை விதிக்கும்படி உனக்கு ஆக்ஞாபித்தேன். அன்றி அநியாயமாய் அவளைக்கொல்லச்செய்தேனே?

ஷம்ஷூத்தீன்:—தந்தையே! அந்தமாஹிஜாபின் மீது யாதோர்குற்றமுமில்லை ஒர்நாள் அமீர் விருந்துக்குப் போயிருக்குந்தருணம் மாஹிஜாபின் தனித்திருந்தமையால் ஷாஜஹான் ஓடிவந்து பெண்ணே யானுன்மீது காதலுற்றேன் அதிதீவிரமாய் யாம் மறுதேசம் ஓடிப்போவோம் வருவாயென்க அந்தப்பெண் உத்தமியாகையால் அநேகவித நீதிமொழிகளைப்புகன்று அவன்மனதைத் திருத்தம் செய்துக்கொண்டிருக்கையில், அமீர்வந்து மாஹிஜாபின்மீது யாதோர் குற்றமுமில்லை ஷாஜஹானே குற்றவாளியென மதித்து அவன் நாசியைக் கத்தியாலறுத்துத் துரத்தினன். அதனல் மாஹிஜாபின் திடுக்கிட்டு நமது அடிமைப்பயல் அறியாத்தன்மை யாற்புகன்றதை நீர் ¶ ஸ்திரமென் றெண்ணி கொலைத்தொழிற்புரிவது அநியாயந்தானேயென்று கையைவீசி

¶ ஸ்திரம் - உறுதி, உண்மையென்று சாதிப்பது.

னமையால் விரல்கிகம் அமீர் கண்ணிற்பட்டுக் குருடனுயினன். நீர் இவற்றைக் கவனியாமல் மாஹிஜாபின் விபசாரம் புரிந்தன ளென்று தண்டனே விதித்தமையால் ஆண்டவன் உம்மைக்குரு டனுகச் செய்தனர். இனி இதைக்குறித்து ஆலோசிப்பதற் பிர யோசனமில்லை இதற்கு யாதேனும் அவுஷதங்களால் சவுக்கிய ப்படுத்திக்கொள்ளலாமென்பதை மறந்துவிடும், ஆனல், மஹா ன்களின் ஆசீர்வாதம் பெறுவீராகில் அச்சமயம் கிஞ்சிற்று சவு க்கியமாகும்.

என, பகர்ந்தனன் அப்துல் அசீஸும் அப்படியாவென யா தொன்றையும் ஆராய்ந்துணராமற்செய்வது ஆபத்தாகுமென்று மன சஞ்சலமா யிருந்தனன்.

அன்றைய தினத்திலிருந்து வர்த்தகவிஷயத்தை ஷம்ஷுதீன் பார் த்துக்கொண்டிருந்தனன். ஓர்நாள் அப்துல் அசீஸ் தனக்குற்ற ஆபத் தனைத்தும் ஆதியோடந்தமாய் ஆலோசித்துக்கொண்டு, நமது மனைவி இறந்தநாள் முதற்கொண்டு யாம் எவ்வளவோ கஷ்டகிஷ்ரேத்திற் சிக்கிக் கவலையடைந்தும், ஐங்காதம்போனுலும் தன்னிழல் தன்னு டன்வருவதுபோல நமதுதீவினை நம்மைவிடாமற்கஷ்டப்படுத்துகின் றனவேயென்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், ஷம்ஷுதீன் அவன்மனதைத்தேற்றி ஐயா! நீர்இத்தன்மையாய் வருத்தப்படுவது நன்கல்ல உலகிற்பிறந்தமாந்தர்க்குசுகதுக்கம் சமமாய்வாய்ப்பதெனி னும் ஒவ்வொருவருக்கு பற்பல துன்பமெய்திடினும் அனுபவியாமற் கவலையுற்றாலும் விடுமோ? ஆனுலும் நாம் ஒருவர்க்குத் தீங்குவிளைத் தால் நமக்கேவந்து சூழுமன்றி விலகிநிற்குமோ அத்தன்மையாகவே.

ஆசிரியவிருத்தம்.

அவரவர்கள்செய்தவினை அவரவரேயனுபவிப்பார்
அவையனைத்தும்
தவறுதலென்றுணர்வதெல்லாம் மதியீனத்தாலன்னும்
தப்பிதந்தான்
கவனமுடன்ஒவ்வொன்றும் ஆராய்ந்துபகுத்துணர்ந்து
கருதல்வேண்டும்
அவனிமிசைஉத்தமர்கட் குற்றமவையென்றுணர்வோர்கள்
அழிந்திடாரே.

என்னுந்தன்மையாய் மனிதராய்ப்பிறந்தால் ஒவ்வொன்றையும் நிரவிசாரித்து உலகிற் ஜீவிப்பராகில் கலகத்திற் குட்படாமற் கவலையற்றிருப்பார். ஆகையால், நீர் இவற்றைக் குறித்து யாதொரு மன வருத்தமு மெய்தாதீரெனப்புகன்றனன். அப்துல் அசீஸ் மனந்திகைத்து மைந்தா யான்தான் உண்மையை யுணராமல் மாஹிஜாபினைக் கொல்லும்படி சொன்னாலும், நீ நேரிற் சென்று நிகழ்ந்தவையனைத்துங் கேள்வியுற்றனையே கொல்லாமல் விடுத்திடலாகாதோ? ஐயோ! எனதருமை குமாரத்தியின்உயிரகலும்போது என்னமாய்த்துடித் தழுதனளோவென, கண்ணீர்ததும்பக்கதறியழுதனன். ஷம்ஷுத்தீன் அவனைத்தேற்றி தந்தையே நீர் அவ்விதமாய்ப் புகன்றிடினும் யான் கொல்வேனோ ஆனால், உமது சொற்படியே கானகத்தி லழைத்துக் கொண்டுவந்து கத்தியை ஓங்கினேன். மாஹிஜாபின் மனமிரண்டு ஐயோ யாதொரு பழிபாபம் புரியாத என்னை வீணிற் கொலை புரிதல் நீதியோவென கதறியழுது, அமீர்வீட்டில் நடந்த சங்கதி யனைத்தும் விபரமாய்ப்புகன்று என்னை அநியாயமாய்க்கொன்றால் ஸ்திரீஹத்திசூழ்ந்து உம்மை வருத்தப்படுத்தி ஆண்டவன் ஆக்கினைக்கு உட்படும்படியாய்ச் செய்யுமெனச் சொன்னாள். இவையனைத்துங் கேள்வியுற்ற யான் மனமிரங்கி மாஹிஜாபினை வனத்திற்றானே உயிருடனே விடுத்து வந்தேனென்றான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அப்துல் அசீஸ் மனமிரண்டு ஐயோ! அவளை காட்டில் விடுத்து வந்தனையே இன்னும் என்னென்ன கஷ்டநிஷ்டூரமெய்துவாளோவென விசனமடைந்தனன். ஷம்ஷுத்தீன் பற்பல தைரியவார்த்தைகளால் அப்துல்அசீஸ் மனதைத் தேற்றி தந்தையே என்ன செய்யலாம் அவரவர்க்குற்ற ஆபத்தை அவரவரே யனுபவிக்கவேண்டு மன்றி வீணிற் சஞ்சலமெய்திடில் ஊழ்வினை விடுத்திடுமோ இவ்விதமே உலகின்மாந்தர்களில் அநேகர் பலவித துயருற்று நற்காலம் வாய்ந்த பிறகு சுகப்படவில்லையா? அன்றியும் துஷ்டபுருஷனை மணந்து கஷ்டப்பட்ட ஜோரா வென்பவளின் சரித்திரத்தையும் அவள் தகப்பனுக்குற்ற பிராணபயத்தையும் நினைக்கும்போதே மன நடுக்கமா யிருக்கின்றனவே அவர்கட் கெவ்விதமான ஆபத்தாயிருக்குமென்றனன், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அப்துல்அசீஸ், ஆச்சரியமடைந்து, மைந்தா இத்தகி நீ புகன்ற ஜோராவின் சரித்திரத்தைச் சற்று புகல்வாயென்று வினவ, ஷம்ஷுத்தீன் சொல்வதாயினன்.

அநேகவித ஆபத்துற்றும் ஆவியகலாமல்

அரசபத்தினியாகிய

ஜோராசரித்திரம்.

ஆதியில் கிரானடா தேசத்தின் அரச புத்திரனாகிய நாடிரேன்பவன். ஓர்நாள் அந்திப் பொழுதில் நந்தவனத்திற்சென்று அங்கு அடர்ந்து செழிப்புளதாகிய பூஞ்செடிகளிலிற் புட்பித்திருக்கும் மணமலர்களின் விநோதங்களைக்கண்ணுற்று சந்தோஷமாய்விருக்ஷஜாதிகளின்கிளைகளில் வசித்துலாவும் பறவைகளின்குரலொலியையும் பார்த்துக்கொண்டு தென்றற்காற்றுவீசுதற்கினிமைபொருந்திய வசந்தமண்டபத்திற் சற்றுநேரம் உட்கார்ந்திருப்போமென மனோல்லாசமாய்ச் செல்வதாயினன். அச்சமயம் வழியிலெதிருற்ற நதியில் ஓர் பெண் மிதந்துக்கொண்டு வந்தனள் அரசகுமாரன் பார்த்து, அடடா! ஈதென்ன ஆச்சரியம்? இந்நதிப் பிரவாகத்தில் யாரோ ஓர் கன்னிகை மிதந்து வருகின்றனளே யென்று வியப்புற்றவனாய் ஆற்றின்கரையருகிற் சென்று பார்த்துக்கொண்டிருக்கையில் அந்தப் பெண்ணும் ஜலத்தை விடுத்துக் கரையின்மீது வந்தனள். அவளை நாடிரேன்னும் இராஜகுமாரன் யாரென்று வினவ, தான் அடுத்தகிராமத்திலிருக்கும் ஓர் ஏழையின் புத்திரியென்றும், ஜலங்கொணர ஆற்றிலிறங்கி தவறி வீழ்ந்துவிட்டேனென்றும் பொய்மொழிபுகன்று, தான் ஜீவிக்கும்மார்க்கத்திற் கிசைந்தவிதமாய்ப் பரிதாபமாய்ச்சொன்னதைக் கேள்வியுற்ற அரசகுமாரன் அவளுடைய ரூபசவுந்தரியத்தைக்கண்டு மையலுற்றவனாய் மனமிரக்கத்துடன் பெண்ணே! நீ யாதொரு மனவருத்தமுமெய்தாதே யானுனக்கு அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமணுகாமற் காப்பாற்றுகிறேன். ஆனால் உனக்கு மணமாயிற்றோவென வினவினன். ஜோரா சற்று யோசித்து, நமக்கு இன்னும் மணமாகவில்லையென்று சொன்னால், நம்மை இவன் கலியாணஞ்செய்துக் கொள்வானென மதித்து, சிறு நகையுடன் பூமியைப் பார்த்துக்கொண்டே கடைக்கண் பார்வையாய் குயிலினம் பாஷிப்பதுபோல தனது அழகிய வாயைத்திறந்து எனதன்பிற்கினிய சரசா! யான்பருவதிசையடைந்து ஒருமாதமாகிறது இன்னும் இரண்டு மூன்றுமாதத்திற்குள் யாவரேனும் தனவந்தர்கள் வந்தால் அவர்கட்கு எனை விவாகஞ் செய்துக் கொடுப்பதற்கு ஆலோசனைசெய்துக் கொண்டிருந்தனர். அதற்குள் யான் ஆற்றில் வீழ்ந்து ஆரண்யத்தில்வந்து விட்டேனே. எனக்கு எவ்விதமாய்க் கலியாணமாகுமென்று தந்திரோபாயமாய்ப் புகன்ற

னள். அரசகுமாரனாகிய நாடிர் உண்மையென மதித்து, பெண்ணே! யான்இந்நகரத்தின் இராஜகுமாரனாகையால் யானுனைக்கலியாணஞ்செய்துக்கொள்கிறேன். இனி உனக்கு யாதொரு கவலையுமின்றி மஹாராணியாயிருப்பாயென்று சந்தோஷமாய்ப் பாஷித்துக் கொண்டிருந்து அவ்வனமே தமது இஷ்டம்போற் சுகானந்தமாய் விளையாடிக்கொண்டிருந்து, ஜோராவை அழைத்துக்கொண்டு அரண்மனையில் வந்து தனது தாய்தந்தையர்பாற் புகன்று ஜோதிடகணித வல்லோனால் நியமித்த ஓர் சுபதினத்தில் தமது இனத்தினரனைவரும் மனமகிழ்ந்து ஆசீர்வதிக்கும்படியாய் ஜோராவைக் கலியாணஞ் செய்துக்கொண்டு சுகானந்தமாய் வாழ்ந்துக் கொண்டிருந்தனன்.

இங்ஙனம், கிற்க ஆதியில் ஜோராவென்பவளை மணந்த நூஸரட் அவளுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து ஆதரிப்பதற் கியலாமல் வயற்று சோற்றுக்கு வனவாசமாயிருந்த போதிலும் வம்புசண்டையில் தன்னைப்போற் சமர்த்தர் உலகிலில்லை யென்னும் மனோகர்வத்தைத் துணையாய் வகித்து அற்ப நேசர்களாகிய துஷ்டர்களுடன் சேர்ந்து கட்குடித்தல் சூதாடுதல் அடீல் தடீல் வேடிக்கையும் செய்து கண்ட இடத்திற் கலகம் விளைத்து குய்யோமுறையோவென கூச்சலிட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்து, தனது மனைவியை அடித்து உதைத்து தினந்தோறும் துயரப்படுத்துவதால், ஜோராவீட்டிலிருந்து கஷ்டப்படுவதிலும், வனத்திற்சென்று மிருகங்களின்வாய் பக்ஷண மாவதே நன்கென மதித்து காட்டிற்கு ஓடிப்போய் ஆற்றில் வீழ்ந்து அரசபுத்திரனை மணந்து ஆனந்தமா யிருக்கையில், இச்சங்கதி யனைத்துங் கவனித்துணராத நூஸரட் என்பவன் தனது மனைவியாகிய ஜோரா எங்ஙனமோ ஓடிப்போயினளென்று மதித்து அவளை எவ்விதத்திலேனுந் தேடிப் பிடித்துக்கொண்டு வரவேணுமென்று கானகமார்க்கமா யலைந்து தேடிக்கொண்டு வருகலாயினன்.

ஓர்நாள் அரசபுத்திரனாகிய நாடிரேன்பவன் தனது இரண்டாவது மனைவியாகிய ஜோராவை யழைத்துக்கொண்டு நந்தவனத்திற் சென்று சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருக்கையில் ஜோராவின் முதல்மணாளனாகிய நூஸரட் அங்குசென்று அந்தப்பெண்ணைக்கண்ணுற்று இவளென்ன நமது மனைவியாகிய ஜோராவைப் போலிருக்கின்றனளே இஃதுண்மையைக் கவனிக்கவேண்டும் ஆனால், இச்சமயமே போய் விசாரித்திடில் ஆபத்தாகும் அஃதேனெனின் மனிதரைப் போல் மனிதர் மாகிலமெங்ஙணு மிருப்பரென்பது உலகோரறிந்த

விஷபந்தானே. அன்றியும், இவனே இந்நகரத்தின் அரசனைப்போற்காணகின்றதே இவனிடமிருக்கும் ஸ்திரீயை நமது மனைவிதானென மதித்து அருகிற்சென்று விசாரிப்பது அறிவீனமாகும். ஆகையால், நாம் இவனிடம் தந்திரோபாயமாய்ப் பாஷித்துக்கொண்டிருந்து அவளை இன்னாளென்றறிந்துக்கொள்ளவேண்டுமென தீர்மானித்துக்கொண்டு நாடிர் சமீபத்தில் வந்து நமஸ்காரம் புரிந்து ஐயா! யான் அஸ்வபரீக்ஷையிற் றேர்ந்தவன். எனக்குச் சரியான உத்தியோகம் அகப்படவில்லை அதனால் யான் யாதொரு தொழிலிலும் பிரவேசியாமற் கஷ்டஜீவனமாய் கானகவாசியாயலைந்து, காய்கனி கிழங்குகளைப்புசித்துக்கொண்டு காலங்கழிக்கிறேன். எனக்கு உமது அரண்மனையில் யாதேனும் ஓர் உத்தியோகம் கொடுத்தருள்வீரென்றனன். நாடிர் மனமிரங்கி அப்படியே நல்லதென்று, அவனை அழைத்துக்கொண்டு தனது பத்தினியுடனே அரண்மனையில்வந்து, நூஸரட்டை அஸ்வசாலையின் மேஸ்திரி உத்தியோகத்திலமர்த்தி, மாதம் பத்துவிராகன் சம்பளம் கொடுப்பதாக நியமித்தனன். ஆனல் ஜோராஇவனைத் தனது மணாளனென கிஞ்சிற்றும்மதித்திலள்; ஏனெனில் நூஸரட் முன்னிருந்ததிலைமையைவிடுத்து அழுக்கு வஸ்திரந்தரித்துக்கொண்டு மனைவியைப்பிரிந்த மனவிசாரத்தினல் வனவாசியாயலைந்து வெய்யலிலும் கானலிலும் திரிந்தபடியினல் திரேகங்கறுத்து வறுமையாளன்போலிருந்ததினல் யாவனே பரதேசியென்று பரிதாபத்துடன் அவனிடம் அன்புபாராட்டி அவனுக்கு தினந்தோறும் அன்னபதார்த்தங்கள் கொடுத்துக்கொண்டிருப்பாள். இவ்விதமாயிருக்கையில் ஓர்நாள் நூஸரட்யாவருமில்லாதசமயம்பார்த்து ஜோராசமீபத்திற்சென்று அம்மணி! உலகிற் ஜனித்த மாந்தர்களில் என்னைப்போற் கஷ்டதிஷ்டோம் வாய்ந்தவறுமையாளருமுளரோ ஐயோ! ஆண்டவன் நம்மையெல்லாம் படைத்தும் உம்மை மஹாராணியாக நல்ல பதவியிலிருக்கும்படி செய்தார். என்னை காலமெல்லாம் கஷ்டப்படும்படியாகவும் செய்தார் ஆனல், இத்தருணம் யாதோ என்மேற் கொஞ்சம் கிருபைகூர்ந்து உம்மிடத்தில் ஜீவிக்கும்படியாகச் செய்தனர். நீங்களும் நன்மனதமைந்தவராகையால் தினந்தோறும் நீங்கள் புசித்து மீதியான அன்னபதார்த்தங்களிற் கொஞ்சம்கொடுத்து வருகின்றீர். இதுவும் எனது அதிர்ஷ்டந்தான். நல்லதிருக்கட்டும் உமது தந்தை எந்தவூர் அரசன் உமக்குச்சகோதரர் எத்தனைபேரென்று தந்திரமாய் வினவினன். மர்மமுணராத ஜோரா தனது தார்க்காலத்திற் கிசைந்தவிதமாய் அவனைப்பார்த்து

ஐயா! எனது கஷ்டவிஷ்டேரத்தைப்புகன்றிடில் அஷ்டதிசையும் கண்ணீர்விடுத்துக் கதறியழுதும் அஃதெவ்விதமெனின் யான் அரசபுத்திரியல்ல, ஓர் தனவந்தனுடைய குமாரத்தி என்னை ஓர் துன்மார்க்கனுக்குக் கலியாணஞ்செய்து கொடுத்தார் அவன் தனது தகப்பன் வைத்திருந்த ஆஸ்தி பூஸ்திதியை யெல்லாம் அழித்து துஷ்டநேசம் இஷ்டபந்தத்வமாய் சூதாடல், கட்குடித்தல், முதலாகிய போக்கிரிவிஷயத்திற் சிறந்தவனுயிருப்பதுடன் என்னையும் அடித்து உதைத்து தொந்தரை செய்துக்கொண்டிருந்தனன். என்னுற் சகிக்கவியலாமல் வீட்டைவிட்டு வனவாசியாய் ஓடிவந்து நதியில்வீழ்ந்துஆற்றின் ஜலப்பெருக்கில் மிதந்து ஆரண்யமார்க்கமாயிருக்கும் ஆற்றங்கரையில் வந்தேன் இந்த இராஜகுமாரன் என்னையாரென்று வினவினர். யான் ஓர் ஏழையின் குமாரத்தியென்றும் எனக்கு இன்னும் விவாகமாகவில்லையென்றும் பொய்மொழிபுகன்றேன். அவர் உண்மையையுணராமல் என்னைக் கலியாணஞ் செய்துக்கொண்டாரென்று தனது சவிஸ்தாரமனைத்தும் ஒன்றேனும் விடாமற்சொன்னுள். இவையனைத்துங் கேள்வியுற்ற நூஸரட் உண்மையைக் கவனித்து அடடா ஸ்திரீயாயிருந்தால் இப்படியல்லவோ இருக்கவேண்டும் நல்லது இன்னுஞ் சற்றுநேரத்திற்காண்பிக்கிறேனென்று, பல்லை நெறநெறவெனக் கடித்துக்கொண்டு போயினன்.

அச்சமயம் ஜோரா ஆச்சரியமடைந்து அடடா! இவனென்ன நமது சவிஸ்தாரத்தைக் கேள்வியுற்று கோபாவேசத்துடன் போயினனேயென கலவரமாயிருந்தனள். நூஸரட் அஸ்வசாலையில்வந்து ஜோராசெய்த நயவஞ்சக மோசத்தைக்குறித்துச் சற்றுநேரம் ஆலோசித்து நாமித்ததி அரசனுக்குத் தெரிவித்தால் அவள்பொய்மொழிபுகன்று மோசஞ்செய்ததால் அவளையும் சிரச்சேதம் செய்துவிடுவார். நம்மையும் துரத்திவிடுவார். இதனுல்நமக்கென்னலாபம் அவள்தனது வயற்றை வளர்ப்பதற்காக எவ்வித தந்திரமா யாவது ஜீவித்துக்கொள்ளட்டும், நாம் ஜோராவை பயங்கரப்படுத்திக் கொஞ்சம்பணத்தை வசூலித்துக்கொண்டுபோய் மற்ருெரு கன்னியை மணம்புரிந்துமனேல்லாசமாய் வாழ்ந்திருப்போமென மதித்து ஓர் கடிதத்தில் ஜோராதனது சொந்த மனைவியென்றுந் தன்னைமோசஞ்செய்துவிட்டு இராஜகுமாரனுகிய நாடிரென்பவனை மறுமணம்புரிந்துக் கொண்டதையும் ஆதியில் தன்னைக்கலியாணஞ்செய்துக்கொண்டதற்கு சாக்ஷியாகதிருமணப்பத்திரிகையையுங் கொண்டுவந்திருப்பதாகவும், இதை அரசனு

க்குத்தந்தால்உனக்கு உயிர்ச்சேதமும் அவமானமு மாய்விடும் ஆகை யால் எனக்கு ஆயிரம்பொன் எடுத்துக்கொண்டு அரண்மனை பின் புரத்திலிருக்கும் ஆலவிருக்ஷத்தருகிற் கொண்டுவந்து என்கையிற் கொடுத்தால் யான் யாதொரு கலகமும் புரியாமல் எங்ஙனமாயினும் போய்விடுகிறேனென்று நிருபத்திலெழுதி தனது சிநேகிதனாகிய வெ ஹிஷியின் கரத்திற்கொடுத்து இதைப்பத்திரமாய் எடுத்துக்கொண்டு போய் ஜோராகையிற் கொடுப்பாயென்று அனுப்பினான். அதையவன் இரகஸ்யமாய் வாசித்துப்பார்த்து அடடா! இப்படியா இருக்கிறது இவர்களுடைய ஞாயம்? நல்லதிருக்கட்டும் யாவரெவ்விதம் போனா லும் நமக்கென்ன நாம் இந்நிருபத்தைக்கொண்டுபோய் ஜோராகை யிற் கொடுத்தவுடனே, அவள் மனமிரண்டு ஆயிரம் பொன்னையும் கொண்டுபோய் நூஸரட்டுக்குக் கொடுப்பாள் அச்சமயம், யாம் அவ னைக்கொன்றுவிட்டு அந்த ஆயிரம் பொன்னையும் அபகரித்துக்கொ ண்டு அந்நியதேசத்திற்போய் சுகானந்தமாய் ஜீவித்துக்கொண்டிருப் போமெனும் பேராசையைத் துணையாய்வகித்து இராணிமாளிகைக்கு வருவதாயினன்.

இங்ஙனமிருக்க, ஜோராவின் தோழிப்பெண்ணாகிய சன்சல் வீட் டின் வரவுசெலவு கணக்கைகொடுப்பாயென்று அம்பரைக் கேழ்க்க அவன் மோகவெறியால் சன்சலுடன் சரசசல்லாப தமாஷாய் பாஷி த்துக்கொண்டிருந்தனன். அவள்கோபித்து சீச்சி! துஷ்டா நீ கிஞ் சிற்றேனும் மதியில்லாதவனென்று அவனைத்துரத்திவிட்டு வெளியே வந்தனள். அச்சமயம் நூஸரட் அனுப்பிய வெஹிஷியானவன் கடித த்தை எடுத்துக்கொண்டுவந்து வழியிலெதிருற்றசன்சலைக்கண்டு ஜோ ரா எங்ஙனமென்றுவினவ, அவன் தான் வந்தகாரியத்தைச்சொல்ல, அவள் சந்தேகங்கொண்டு அந்த நிருபத்தை காண்பிப்பாயென்று கேழ்க்க, அவன் சம்மதிக்காமல்போய் ஜோராவைத் தேடிப்பார்த்து அவள் கையிற் கடிதத்தைக் கொடுத்துவிட்டுவருகையில் ஓர் அறை யில் இராஜகுமாரனுடைய கைத்துப்பாக்கி இருக்கக் கண்ணுற்ற இது வும் நமக்கு சமயத்திற்கு உதவுமென்று அதனைத் தனது கைக்குட் டையில் மறைத்துவைத்துக்கொண்டு யாதொருவருக்கும் தெரியாமல் ஓடிவந்து விட்டனன்.

அப்பால், ஜோராவென்பவள் வெஹிஷி தனக்குக் கொடுத்த நிருபத்தைப் பிரித்து மர்மமுணராதவளாகையால் குரலொலி சப்தத்

துடன் வாசித்து அதில் தனது முதல்மணாளனாகிய நூஸரட் அஸ்வ சாலையில் மேஸ்திரியா யமர்ந்திருப்பதையும், அவன் தன்னைக்கலியா ணஞ் செய்துக்கொண்டதற்குச் சாக்ஷியாகத்திருமணப்பத்திரிகையும் கொண்டு வந்திருப்பதாகவும், தனக்கு ஆயிரம் பொன் கொடுத்தா லாச்சுது இல்லாவிட்டால் அரசனுக்குத்தெரிவிப்பேனென்றும் எழு தியிருந்ததையும் படித்து மனமிரண்டு ஐயோ! வென்றேன் விதியை யென்றால், அன்றே தீக்குற்ற காரணம்போல் அந்தப்பாபியை மண ந்து பற்பலதுயருற்று பகவான் கிருபையால் தப்பிப்பிழைத்துவந்து, இந்த அரசனை மணந்து அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமின்றி ஆனந்த மாயிருக்கையில், அந்தத்துஷ்டனும் வந்து நமது திருட்டுத்தனத்தை வெளிப்படுத்துதற்கு ஆலோசித்திருக்கின்றனனே. இதனை அரசன் கேள்வியுற்றால் அவமானமாவதுடன் ஆவிக் கபாய மெய்து மல்ல வோவென தலைமீதுகையைவைத்துக்கொண்டு, விசனமாயிருந்தனள். அருகிலிருந்த சன்சல் ஏனம்மா ஓர்விதமாய் மனஞ்சலித்திருக்கின்று யென்றுவினவினள், ஜோராவுக்குக் கோபமதிகரித்து, சீச்சீ! போடி! போ! வயறெரியுந் தருணம் என்னத்தைச் சொல்கிறதென கடு கடுத்து முகஞ் சுளித்துக்கொண்டு வெளியில் வந்து, தான் இரவுபதி னைந்து நாழிகைக்குமேல் அரண்மனையின் பின்புரத்திலிருக்கும் ஆல விருக்ஷத்தினருகில் வந்து உமக்கு ஆயிரம் பொன் தருகிறேனென்று ஓர் நிருபத்தி லெழுதி வெஹிஷ்யை வரவழைத்து அவன் கையிற்ற ந்து, இதனை அஸ்வசாலைமேஸ்திரிக்குக்கொடுத்துவிடுவாயென்றனள். அவன் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, அந்நிருபத்தை யெடுத் துக்கொண்டுபோய் யாருமின்றிய தனிமையான இடத்திற் பிரித்துப் படித்துப்பார்த்து அதிலெழுதி யிருந்தவையனைத்துங் கவனித்து, அடடா! இதுதான் நமது அதிர்ஷ்டானத்திற்குரிய நல்லதருணமெ ன கடிதத்தை மடித்து, அதிவேகமாய்ச் சென்று நூஸரட்கையிற் கொடுத்து விட்டு, அன்றையதினம் அதிசீக்கிரமாய் அன்னம் புசித்து விட்டு ஜோரா வருகிறேனென்று குறிப்பித்த ஆலவிருக்ஷத்தின்கிளை மேல் ஏறிக்கொண்டு கைத் துப்பாக்கியில் குண்டு மருந்து தயார்செ ய்து வெகுஜாக்கிரதையாய் இலை மறைவில் உட்கார்ந்துக் கொண்டிரு ந்தனன். கடிதத்தை வாங்கிய நூஸரட் அதனைப் பிரித்துப் படித்துப் பார்த்து, சந்தோஷமுற்றவனாய் இனி ஜோராவைப்பற்றி யோசிப்ப தாற் பயனில்லை எப்படியாகிலும் போகிறாள். நமக்கு ஆயிரம்பொன் கொடுத்து விட்டால் நாம் நமது வீட்டிற்குப்போய் தாய்தந்தையரு டன் சுகமா யிருக்கலாமென்னும் வீணாசையைத் துணைவகித்து, அன்

றைய தினம் வெகு சந்தோஷமாய் திவ்யான்ன சுகபோஜனம் புசித்து ஆடை ஆபரண சிங்காரலங்கிர்தனாய் இன்றைய தினத்திலிருந்து நமது கஷ்டமெல்லாந் தீர்ந்துவிட்டதென்று இரவுபத்துநாழிகைக்கு மேற்பட்டு கடிதத்தில் எழுதியிருந்த குறிப்பின்படியே ஆலவிருக்ஷத்தின் சமீபத்திற் போயிருந்தனன். ஜோராவென்பவள் எவ்விதமாயினும் நூஸரட் துலைந்துபோனால் பீடை ஒழியுமென்று தன்னிடமிருந்த ஐந்நூறு பொன்னையும் ஓர் வஸ்திரத்தில் மூட்டையாகக் கட்டிக்கொண்டு இரவுபதினைந்துநாழிகையில் அரசன்முதலானோர் கண்ணுறங்கி நித்திரைபுரியுந்தருணம் மெதுவாய்நடந்து ஆலவிருக்ஷத் தருகிற் போயினள். இவள் தோழியாகிய சன்சனுக்குமாத்திரம் மர்மந்தெரியுமாகையால் பத்தடிதூரத்திற்குப்பின்னால் பூனைபோல்மெதுவாய் நடந்து போயினள், ஜோரா விருக்ஷத்தருகிற்போய் பிராணபதி இதோ பொன் காசுகள் கொண்டுவந்தேன் வாங்கிக்கொண்டுபோய் என்னினும் அழகுடைய வேறெந்தப் பெண்ணையாகிலும் மணஞ்செய்துக்கொண்டு மனோல்லாசமாய் வாழ்ந்துக்கொண்டிருப்பீரென்று தான் கொண்டு வந்த மூட்டையைக் கையிற்கொடுத்தனள் நூஸரட் அதனை வாங்கிக்கொண்டு கிடைத்தமட்டும் போதுமென்று போய்விடாமல், அவைகளை எண்ணிக்கையிடவே, ஐந்நூறுபொன் இருந்தது அதனால் அவன் கோபங்கொண்டு சீச்சீ துஷ்டி உன்னை சும்மாவிடக்கூடாது நீ வெகு மோசக்காரி! ஆயிரம் பொன் கொண்டுவந்தா லாச்சுது, இல்லாவிடில் பொழுதுவிடிந்தபிறகு அரசனிடந்தெரிவித்து ஆக்கினை விதிப்பேனென்று பயமுறுத்தினன் ஜோரா மனமிரண்டு, ஐயையோ இனி என்னசெய்வேன் நாயகா! நீர் யாதொரு கலகமுஞ்செய்யாதீர் என்கையிலிருந்தது, அவ்வளவுதான், இதோயான் இத்ததியேசென்று கஜானா பெட்டியைத்திறந்து மற்ற ஐந்நூறுபொன்னும் கொண்டு வருகிறேனென்று சொல்லி விட்டு வீட்டுக்குத் திரும்பினாள். அச்சமயம், விருக்ஷத்தின் கிளைமேல் இலைமறைவில் ஒளித்துக் கொண்டிருந்தவெஹிஷியானவன் கைத்துப்பாக்கியால் திடீரென்று சுட்டனன். அச்சமயம் நூஸரட் வெஹிஷியைப்பார்த்துஅடடாதுரோகியென்று திரும்பினன். அந்த குண்டு ஜிவ்வென்றெகிரி நூஸரட் வலதுசெவியைப் பளீரென்று அறுத்துக்கொண்டு போயினதால், அந்தஅதிர்ச்சியினாலே நூஸரட் செவியொளி மழுங்கி மரணமூர்ச்சையாய் வீழ்ந்தனன். வெஹிஷி மரத்திலிருந்திறங்கிவந்து நூஸரட்வசமிருந்த ஐந்நூறு வராகனையும் எடுத்துக்கொண்டு, துப்பாக்கியை அங்ஙனமே

போட்டுவிட்டு ஆரண்யமார்க்கமாய் ஓடிவிட்டனன். வெடி குண்டு ஓசையைக் கேள்வியுற்று நித்திரைசெய்பவரனைவரும் திடுக்கிட்டெழுந்தனர். இராஜகுமாரனாகிய நாடி ரெழுந்து ஜோராவைக்காணாமல் அவள் எங்குசென்றனளென்று தேடிக்கொண்டு போயினன். ஜோரா நூஸரட் மரணமுற்றனனென்று பயந்தோடினள்.

அவள் தோழியாகிய சன்சல் நாடிர்முன் ஓடிவந்து நூஸரட், ஜோரா இருவருமெழுதியகடிதங்களையும்முன்னமேஅவ்விருவருக்குந் தெரியாமல் திருடி வைத்துக்கொண் டிருந்ததினால் அவைகளையுங் கொடுத்துதான் அருகிலிருந்து சகல சங்கதியும் கவனித்தவளாகையால் நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ப் புகன்றனள். இவையனைத்துங் கேள்வியுற்ற நாடிர் சன்சலை அழைத்துக்கொண்டு ஆலவிருக்ஷத்தருகில் வந்து நூஸரட் மரணமூர்ச்சையாய் வீழ்ந்திருப்பதையும், தனது கைத்துப்பாக்கி அங்குகிடப்பதையுங்கண்டு ஆச்சரிய முற்றவனாய்த் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு ஜோராவைக் காவலாளிகளால் அழைத்துக்கொண்டு போகும்படி செய்து தானும் அவர்களுடனே அரண்மனையிற்சென்று கொலைபுரிந்த விஷயத்தை விசாரிக்கையில், சன்சல் சாக்ஷியாயிருந்து நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ப் புகன்றனள். நாடிர் தனதுகைத்துப்பாக்கியையும் கடிதங்களிரண்டையும் இராஜசமுகம் கொடுத்தனன். அந்நிருப மிரண்டையும் வாசித்துப்பார்த்த அரசன் ஜோராவைக் குற்றவாளியென தீர்மானித்து சிரச்சேதம்செய்யும்படியாக ஆக்ஞாபித்தனன். அருகிலிருந்த மந்திரியானவன் ஆலோசித்துக் கொலைபுரிந்தவன் வெஹிஷியாகையால் அவனைத் தேடிப் பிடித்துக்கொண்டு வருமளவும் ஜோராவை சிறைச்சாலையி லிருக்கும்படி ஆக்ஞாபித்து அவளுடைய தோழியாயிருந்து சாக்ஷிக்காரியான சன்சலை அவளுக்கு காவலாக நியமித்து, நூஸரட்டை அடக்கஞ் செய்யும்படியாய் ஏவலாளிகட்கு ஆக்ஞாபித்தனன். அவர்கள் சவப்பெட்டி யொன்று செய்து அங்கு மரணமூர்ச்சையாயிருக்கும் நூஸரட்டைத்தூக்கி பெட்டிக்குள்வைத்து மூடி தமது தோள்மீது சுமந்துக்கொண்டு போயினர். அச்சமயம் நூஸரட்டுக்கு மூர்ச்சைதெளிந்து கண் விழித்துப்பார்த்து அந்தகாரமாகிய இருளாயிருந்தமையால் மனமிரண்டு குய்யோ முறையோ வென கூச்சலிட்டனன். பெட்டியை எடுத்துச்சென்றவர்பயந்து ஐயையோ இறந்தவன் * ஷைத்தானாகிவிட்டனனென்று மதித்துத் திடீரெனபெட்டியைபோ

* ஷைத்தான்-பிசாசி. பேய். அலகை.

ட்டு விட்டு ஓடிப்போயினர். பெட்டியுடைந்துவெளியில்வந்த நூஸரட் வெஹிஷி தன்னைக்கொல்ல நினைத்து துப்பாக்கியால் சுட்டதினுற் கோபமதிகரித்து இனியாமவனைச் சும்மாவிடக்கூடாது எவ்விதமாயி னும் அவனைத்தேடிப் பிடித்துக்கொன்று போடவேணுமென்று ஆரண்யமார்க்கமாய்த் தேடிக்கொண்டு போயினன்.

இங்ஙனம், நிற்க, ஏவலாளிகள் அரண்மனையில் ஓடிவந்து அரசே, இறந்துபோனவன் ஷைத்தானுகி விட்டனனென்று நிகழ்ந்தவை யனைத்தும் புகன்றனர் அரசன் ஆச்சரியமடைந்து மந்திரக்காரர்களைக் கேட்க, அவர்கள் அஞ்சனம் போட்டு பார்த்து, அரசே! அவன் இறந்து போகவில்லை, மரணமூர்ச்சையாயிருந்து இப்போதுதன்னைக்கொல் வதற்கு நினைந்த வெஹிஷியை தேடிக்கொண்டு காட்டுக்குப் போயி ருக்கின்ருனென்றனர். அரசன் வியப்புற்று, அடடா ஈதென்ன வெகு தமாஷா யிருக்கின்றனவேயென நகைத்து, அவ்விருவரையும் வரவழைத்து விசாரிக்கவேண்டுமென்று தலையாரிகளை அனுப்பினன். அவர்களும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து நூஸரட், வெஹிஷியைக் தேடிக்கொண்டு போயினர். சிறைச்சாலையிலிருக்கும் ஜோரா சன்சல் இல்லாத சமயத்தில் தனக்குற்ற ஆபத்தனைத்தும் ஓர் தூதுவனிடம் தெரிவித்து இதனை என் தகப்பனிடம் சொல்லிவிட்டு வருவா யென்று தனது கழுத்திலணிந்திருந்த மோகனமாலையை அவனுக்கு வெகுமதியாய்க் கொடுத்தனுப்பினள். அவனும் நன்கெனச் சம்மதித்து ஜோரா சொன்ன குறிப்பின்படியே அவளுடைய தகப்பனிருக்கும் வீட்டைக்கண்டு பிடித்து அவனிடம் சகலமுந் தெரிவித்தனன். அவன் மிகவும் விசனமுடன் அந்தத்தூதனை வழித்துணையா ய்மைத்துக்கொண்டு ஜோரா விருக்கும் சிறைச்சாலையில் வந்து ஆ! எந்தன் அருமைமகளே உனக்கிவ்விதி வாய்த்ததோ வென கண்ணீர் சொரிந்துக் கதறியழுதனன்.

ஜோரா தந்தையின் மனதைத்தேற்றி, ஐயா நீர் இங்ஙனம் அழுதுக் கொண்டிருப்பது சரியல்ல, இச்சமயமே வெஹிஷியைத் தேடிப் பிடித்துக்கொண்டு வருவீராகில் யான் தப்பித்துக்கொள்வே னென்றனள். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அவள் தந்தையாகிய பர்வஜ் என்பவன் சற்று யோசித்து அம்மணி நின் சொற்படியே யான் வெஹிஷியைத் தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டு வருகிறேனென்று அவனுடைய அடையாள மனைத்தும் சரியாய்ச் சொல்லும்படியாய்க்

கேள்வியுற்று கானகமார்க்கமாய்ச் செல்வதாயினன். அச்சமயம் ஓர் ஜோதிடன் வழியிலெதிருற்று ஐயா எங்கு செல்கின்றீரென்று கேழ்க்க தனது சவிஸ்தாரமனைத்தும் புகன்று, எனது குமாரத்தியை ஆபத்திலகப்படச் செய்து காட்டுக்கு ஓடிப்போன் வெஹிஷியைத் தேடிக்கொண்டு போகிறேனென்றனன்.

ஜோதிடன் சற்றுநிதானமாய் ஆருடசாஸ்திரத்தைக்கவனித்துப் பார்த்து ஐயா! உமது புத்திரியின்முதல்மணாளன் இறந்துபோகவில்லை தன்னைக்கொன்றவனைத் தான்தேடிக்கொண்டு போயிருக்கின்றனனென்றுரைத்தனன். பர்வஜ் அப்படியாவென அதிசயித்து எவ்விதமாயினும் அவர்களிருவரில் ஒருவனைத் தேடிப்பிடித்திழுத்துக்கொண்டுவந்தால் நமது புத்திரிதப்பித்துக்கொள்வாளெனமதித்துக் கானகமார்க்கமாய்ச் செல்வதாயினன்.

இங்ஙனம் நிற்க, சிறைச்சாலையிலிருந்த ஜோராவென்பவள் ஓர் நாள் இரவில் தனது தாதியாகவும் காவலாளியாகவுமிருக்கின்ற சன்சல் நித்திரை செய்துக்கொண்டிருக்கையில் மெல்லெனக் கதவைத்திறந்து வெளியேசென்று காவலாளிகளின் கண்ணுக்குந்தெரியாமல் கானகமார்க்கமாய் ஓடிவிட்டனள். பொழுதுவிடிந்தபிறகுசன்சல் நித்திரைதெளிந் தெழுந்திருந்து ஜோராவைக்காணமல் மனவருத்தமடைந்து ஐயோ! அரசனுக்குத்தெரிந்தால் ஆபத்தாய் விடுமேயென திகிலடைந்தவளாய்அழுதுகொண்டிருக்கையில்அருகிலிருந்தவர்யாதென விசாரித்து ஜோராஓடிப்போன சங்கதியைக்கவனித்து சன்சலைக்குற்றவாளியாய்த் தீர்மானித்து அரசன்முன் கொண்டுவந்து விடுத்தனர்! மன்னன் மர்மமனைத்து முணர்ந்து ஆச்சரியமெய்தியவனாய் அடடா. ஈதென்ன விந்தை நமது அரணின் காவலரித்தனை பேரிருக்க ஓர்ஸ்திரீயானவள் எவ்விதமாய் சிறைச்சாலையிலிருந்து ஓடிப்போவாளென சந்தேகித்து நல்லதிருக்கட்டும் அடீ! சன்சல் உன்னுடைய அஜாக்கிரதையினால் ஜோரா ஓடிப்போனதினால் நீயே அவளைப்பிடித்துக்கொண்டு வரவேணுமென்று ஆக்ஞாபித்தனுப்பினன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற சன்சல் வெகுவாய்த் துக்கித்து ஐயோ! விதிவசமே நாம் இத்தனை நாளாய் இந்த அர்ண்மனையில் சுகானந்தமாய் ஜீவித்துக்கொண்டிருந்தும் யாரோ ஓர் விபசாரியால் நாம்கானகவாசியாயலைச்சற்படுவதற்காயிற்றேயெனவயற்றெரிச்சலாய்ஜோராவைத்தூஷித்துக்கொண்டு ஆரண்யமார்க்கமாய் அவளைத்தேடிக்கொண்டு போயினள்.

இவர்கள் நிலை இங்ஙனம் இவ்விதமாயிருக்க, முன்னம் நூஸரட்டை துப்பாக்கியாற் சுட்டுவிட்டு ஐந்நூறு பொன்காசுகளை எடுத்துக்கொண்டு வனத்திற்கு ஓடிப்போன வெஹிஷியென்பவன் வழியிலெதிருற்ற "ஓர்முசாபரிவீட்டில்" அன்றையதினம்யாதொருவரும்வராமலிருந்தமையால் அவ்வீட்டின் கதவைத்திறந்து உட்சென்று மூடித்தாளிட்டுக்கொண்டு, தான்கொண்டுவந்த கட்டுசாதத்தை அவிழ்த்துசாப்பிடுவோமென்று உட்கார்ந்தனன். அச்சமயம் அவனைத்தேடிச்சென்ற நூஸரட் அம்மார்க்கமாய் வருகையில் வெய்யல் தீக்ஷண்யத்தினால் நிற்க நிழலின்றி வெஹிஷியிருக்கும் வீட்டிற் சென்று கதவைத்திறக்க அது மூடியிருப்பதைக்கண்ணுற்று ஈதென்ன முசாபரிவீடுதானே உட்புறந்தாளிட்டிருக்கும் காரணமென்னவென்று ஜன்னலின்வழியாய்ப் பார்க்கையில், தனதுபகைஞனாகிய வெஹிஷியிருப்பதைக்கண்டு யானையைக்கண்ட சிங்கத்தைபோற் கர்ஜ்ஜித்து, அடடா! சிநேகிதத்துரோகி இதோபாருனைக்கொன்று விடுகிறேனென்று அருகிலிருந்த விருக்ஷங்களின் கிளைகளை யொடித்து ஏணியைப்போற்கட்டி அந்தவீட்டின் சுவற்றின்மீது சாத்திவைத்து பக்குவமாய் அந்த வீட்டின் மேற்கூறையின்மீதேறி ஓட்டைப்பிரித்துக் கீழே குதிப்பதற்குள் வெஹிஷியானவன் மனமிரண்டு கதவைத்திறந்துக்கொண்டு ஓடிப்போயினன், நூஸரட்டும் அவனைவிடாமற் பின்தொடர்ந்துகானகமெல்லாம் துரத்திக்கொண்டுபோகையில் கடல்தோற்றக்கண்ணுற்ற வெஹிஷியானவன் பொன்மூட்டையை தனதுஇடுப்பில் பிகுவாய்ப் பிணைத்துக் கட்டியிருந்ததால், ஓடுவதற்கு முடியாமல் இனிதாமதித்தால் ஆபத்தாகுமெனமதித்துத் தனது முழுவல்லமையுடன் அதிதீவிரமாய் கடற்கரையில்ஓடி அங்கிருக்கும் காவலாளியின் பாதத்தில்வீழ்ந்து பணிந்து ஐயா! எனக்குற்ற பொல்லாதகாலத்தினால் ஆவிக்கபாய மெய்துதற்கிசைந்தவிதமாய் எனது பகைஞன் துரத்திக்கொண்டுவருகிறான். ஆகையால் நீர்என்மீது தயைசெய்து ஓர்படகைவரவழைப்பீராகில் யான் படகின்மீதமர்ந்துபோய் எந்தக் கப்பலிலாவது ஏறிக்கொண்டு போய்விடுவேனென, மிகவும் பரிதாபமாய்ப்புகன்றனன், அந்தக்காவலாளி பட்டான் ஜாதியாகையால் கொஞ்சமும்நெஞ்சமிரங்காமல், அடடா திருடா எழுந்திருடா நீயாதோ நயவஞ்சக மோசமாய்க் களவுபுரிந்துவந்தவன்போ லிருக்கின்றது, இதோயானே உனைப்பிடித்துக்கொண்டுபோய் இந்நகரத்தின் தலையாரிகள் வசம்ஒப்பித்துவிடுறேன்பாரடாவென்று தன்காலினால் வெஹிஷியை எட்டியுதைத்து தனதுவஸ்திரத்தினால் அவனைச்சேர்த்து கட்டுவதற்கு

முயற்சி புரிகையில் வெஹிஷிமிகவும் விசனமுற்றவனாய் அடாபாபி! அபயமென்றுவந்தால் அஞ்சேலென் றாதரிக்காமல், ஆவியைப்போக்கும் அறிவீனனாய் யிருக்கின்றாயே! துரோகியென, அவன் கையிற் பிடித்திருந்தகொடியையும், விளக்கையும் பிடுங்கிக்கொண்டு அந்தக் காவலாளியைக் கடலில் தள்ளிவிட்டனன் அவன் ஆண்டவனேயென்று கூச்சல்போட்டுக்கொண்டு மரணமடைந்தனன்.

அப்பால், வெஹிஷி சந்தோஷித்து தனது கையிற்பிடித்திருந்த விளக்கை அசைத்துக் கொடியை ஆட்டினன். ஓர்படகு அதிதீவிரமாய் கரையருகில்வந்தது, உடனே வெஹிஷி குதித்தேறிக்கொண்டனன், அச்சமயமே நூஸரட் ஓடிவந்து அவனும் படகில் ஏறிக்கொண்டு வெஹிஷியை அடிக்க இருவரும் குத்துசண்டை குஸ்தி முதலாகிய பற்பலவித யுத்தம் புரிவதுடன் ஒருவரையொருவர் அடித்தும் கடித்தும், உதைத்தும், கிள்ளியும், தள்ளியும், ஒருவரையொருவர் கொல்லவேணுமெனும் ரோஷத்தை மனதில்வகித்து சண்டைசெய்யுந்தருணம் வெஹிஷியானவன் திடீரென அங்கிருந்த எண்ணையை பஞ்சுமூட்டையில்வார்த்து அருகிலிருந்த நெருப்புக்கொள்ளிகட்டையால் தீமூட்டிவிடவே படகு திகுதிகுவென்றெரிந்துவிட்டதால் யாவரும் கடலில்குதித்து நீந்திக்கொண்டுபோய்க் கரைசேர்ந்தனர். அச்சமயம் வெஹிஷி அதிதீவிரமாய்க் கரையின்மீதிற் சென்று கானக மார்க்கமாய் ஓடினன். நூஸரட் அவனை விடக்கூடாதெனும் கோபாவேசத்துடன் பின்தொடர்ந்தோடினன். இவ்விபரீதத்தைக்கண்ணுற்ற படகுக்காரர் ஈதென்னவிந்தை இவ்விருவருக்குள் நேர்ந்தகலகம் யாதோ? வெனும் கலவரத்துடன் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இம்மனம் நிற்க, ஆரண்யமார்க்கமாய் ஓடியவெஹிஷிதான் திடகாத்திர வல்லமையுள்ளவனாயிருந்திடினும் ஐந்நூறுபொன் காசுகளை இடுப்பில்கட்டியிருக்கின்ற பளுவினால் ஓடுதற்குச்சக்தியற்றவனாய்ப்பின் தொடர்ந்துவந்த நூஸரட்கையில் அகப்பட்டுக்கொண்டனன். அவன் தனது இரண்டுகையினாலும் வெஹிஷியின்முதுகிலறைந்து அடடா! சிநேகிதத் துரோகி! யானுனை நம்பினவனாயிருக்க நீஎன்னை கொல்வதற்குத் துப்பாக்கியாற் சுட்டனையே ஈதுனக்கு நீதியோ பாதகாவென தனதுவிரலை முஷ்டியாய் மடக்கிக்கொண்டு அவன்முகத்தில் இரண்டு மூன்றுகுத்துகுத்தினன். வெஹிஷிக்குக்கோபமதிகரித்து இனி தாம

தித்தால் ஆபத்தாய்விடுமென மதித்துத் தானும் நூஸரட்டை அடித்தனன், இவ்விருவரும் ஒருவரையொருவர் கொல்லவேண்டுமெனும் ஆசையினல். குத்துசண்டை மல்யுத்தம் முதலானவைபுரிந்தும், ஒருவரையொருவர் அடித்தும் சுடித்தும் கிள்ளியும் தள்ளியும், உதைத்தும் மிதித்தும் பலவிதமாய்ச் சண்டைசெய்யும் தருணம் நூஸரட்டைசோர்ந்து, மெய்சோர்ந்து நாவரண்டு களைத்திளைத்து மூர்ச்சையாகினன். வெஹிஷி இதுதான் தருணமென்று நூஸரட் கழுத்தை மிதித்து ஒடித்துக்கொன்றுவிட்டனன். அச்சமயத்தில் இவர்களைத் தேடிக்கொண்டு சென்ற தலையாரிகள் கானகத்தில் சண்டைசெய்கின்றவர் யாவரோவென ஓடிவந்து பார்க்கையில், வெஹிஷியானவன் நூஸரட்டைக்கொன்றுவிட்டு ஓட்டம்பிடிக்க, தலையாரிகள் திப்ரமையடைந்தவராய் கண்ணீர் சொரிந்து பரிதாபத்துடன் நூஸரட்டை அந்தக் கானகத்திற்றனே அடக்கம்செய்துவிட்டு அவர்களனைவரும் வெஹிஷியைத் தூஷித்து, இனிநாம் அவனை சும்மாவிடக்கூடாது எவ்விதமாயினும் பிடித்திழுத்துக்கொண்டுபோய் அரசன் முன்விடுத்துப் பழிக்குப்பழியாய் வெஹிஷியைச் சிரச்சேதம் செய்விக்கவேணுமெனும் ரோஷத்துடனே மறுபடியும் வெஹிஷியைத்தேடிக்கொண்டு கானகமார்க்கமாய் போயினர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகைய அற்புதானந்த காக்ஷியாயிருக்கையில்,முன்னம் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்டோடிய ஜோராவென்பவள் பயங்கரமான ஓர் இருட்சூழ்ந்த கானகத்தில்தனியாகச்செல்கையில் வழியிலெதிருற்ற சன்சல் நயவஞ்சகமாய் அவள் முன்சென்று, அம்மணி நீ மஹாராணியாயிருந்தும் வனவாசியாயலைவதற்குத் தலைவிதியோவென உதட்டில் உறவும், மனதிற்பகையுமாய் மோசமாய்ப்பாஷித்து, அம்மா! நீ வீட்டைவிட்டுவந்தநாளாய் இராஜகுமாரன் உன்மீதிலுற்ற மையலினல் அன்னுகாரம் புசியாமல் மனமயக்கமாயிருக்கிறர். ஆகையால் உன்னை அழைத்துக்கொண்டுவரும்படி எனை அனுப்பினர் இனி யாதொரு சந்தேகமுமெய்தாமல் என்னுடன் வருவாயம்மாவென் றழைத்தனள், ஜோரா சற்றுயோசித்து, அடீ! துன்மார்க்கி உன்னலேதானே எனக்கிவ்வளவு கஷ்டநிஷ்டூரம் வாய்ந்ததுபாதகி இப்போதும் யான் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டதினல் பிடித்துக்கொண்டுபோகவந்த காதகி "விஸ்வாச கொக்கு போல" வீண்வார்த்தைஎன் பாஷிக்கின்றனையென்று தூஷித்து யானுன் வஞ்சகத்திற்குட்படேன் போடி போ! என்று சென்றனள்,

அத்ததி சன்சல்! வெகு ரோஷத்துடனே அடீ! விபசாரி இதோபா ருனைப்பிடித்துக் கொடுக்கிறேனென்று ஒடிவருகையில், ஜோராமன மிரண்டு இனி தாமதிக்கலாகாதென பயந்தோடி விட்டனள். சன்சல் அவளைத்துரத்திக்கொண்டு ஒடியும் அகப்படாததினல் மனம்வெறு த்து வனமெங்கனும் தேடித்திரிந் தலைந்துக்கொண்டிருந்தனள்.

இங்ஙனம் நிற்க, ஜோராவென்பவள் ஆரண்யமார்க்கமாய்ச்செ ல்லுந்தருணம் வழியிலெதிருற்ற மலையருகிற்சென்று அங்குமலையைக் குடைந்துக் கொண்டுபோகும். (Railway.) இருப்புப் பாதையைக் கண்ணுற்று ஆச்சரியமடைந்து இனிநமக்கு நற்காலம் வாய்ந்ததென சந்தோஷித்து (Railway Station) ரயில்வேஸ்டேஷனில்வந்து லக்னே தேசத்திற்குப் போவதற்காக டிக்கட்கேட்டனள். ஸ்டேஷன்மாஸ் டர், ரயில் போய்விட்டதாகவும் இரவு இருபதுநாழிகையில் வண்டி வருவதாகவும் தெரியப்படுத்தினன். ஜோரா மனவருத்தமடைந்து ஐயோ! என்னைப்போன்ற அதிர்ஷ்டயீனரும் அவனியிலுளரோ? இச்சமயம்வண்டி அகப்பட்டால் லக்னே தேசத்திற்கேனும் சென்று நமது உறவின ரிடத்திற்போய்ப் பிழைத்துக்கொள்ளலா மல்லவோ எனது காலவித்தியாசத்தினல் ரயில்வண்டியும் போய்விட்டது, இனி தாமதித்தால் சன்சல்வந்து நம்மைக்கண்டுபிடித்து அரசன்முன்கொ ண்டுபோகும்படியாய் ஏதேனும் ஓர் உபாயம்புரிவாள் அன்றியும் வெஹ்ஷியைத்தேடிக்கொண்டுபோகும் தலையாரிகள்வந்திடினும் நம் மைப்பிடித்துக்கொண்டு போவார்களேயென்று திகிலடைந்தவளாய் அங்கிருந்துபுறப்பட்டு மறுபடியும்ரயில்பாதைவழியாய்ப்போகையில் அங்குதோன்றிய ஓர் அறையிலிருக்கும் ரயில்வேகாவலாளி கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு போவதைப் பார்த்து ஐயா யான் லக்னே தேசத்திற்குப் போவதற்தாகவந்தேன் நாழிகையாய்விட்டதால் வண் டிபோய்விட்டதாம் இரவு இருபது நாழிகைக்குவருகிற வண்டியிற் போய்விடுகிறேன் இராத்திரியாகையால் எனது வீட்டிற்குப்போக பயமாயிருக்கின்றது, ஆகையால் வண்டிவருகிறவரையினும்இந்தவீட் டிலிருக்கின்றேனென்று வேண்டினள். அவன் சற்றுயோசித்து அம் மா யான் வீட்டுக்குப்போகவேண்டுமென்றனன், ஆனல் நீ வருகிற வரையிலும் யான் இதற்குள் இருக்கின்றேன் நீ கதவைமூடி தாளி ட்டு பூட்டிக்கொண்டுபோய் ரயில்வருகிறசமயத்தில்வந்து திறந்துவிடு வீராகில் யான்லக்னேதேசத்திற்கு டிக்கட்டுவாங்கிக்கொண்டு ரயிலே றிப்போய்விடுவேனென்றனள். காவலாளியும் அவ்விதமேநன்கெனச்

சம்மதித்து ஜோராவை அந்தவீட்டி லிருக்கச்செய்து கதவை மூடித் தாளிட்டுப்பூட்டிக்கொண்டு தனது வீட்டிற்குப்போய்விட்டனன்.

இங்ஙனம் நிற்க, சன்சல் ஜோராவை வனமெங்ஙணுந்தேடினுங் காணுமையால் மனம்வெறுத்து, சீச்சீ நம்மைப்போன்ற மதியீனர்களும் உலகிலுளரோவென தன்னைத்தானே தூஷித்துக்கொண்டுஐயோ கையிலகப்பட்ட ஜோராவைப்பிடித்துக்கொண்டு குய்யோமுறையோவென கூச்சலிட்டால் வழிப்போக்கதாலது பிடித்துக்கொண்டு அரசன்முன் வருவார்களே அவ்விதமுமின்றி அவளிடம் தந்திரமாய்ப் பேசியதாலல்லவோ தப்பித்துக்கொண்டுஓடிவிட்டனளென்று காடெல்லாந் தேடித் திரிந்தலைந்துக்கொண் டிருந்தனள். அச்சமயம் வெஹிஷியைத் தேடிக்கொண்டுசெல்லும் பர்வஜ்ஜென்பவன் சன்சலைப் பார்த்துவிட்டு வயறெரிந்து, அடீ! துன்மார்க்கி உன்னாலல்லவோ எனது குமாரத்தியாகிய ஜோராவுக்கு சிறைச்சாலையி; லிருப்பதற்கின்ற ஆபத்தெய்தினவென்று நிந்தித்திகழ்ந்து அடீ! வஞ்சகி! எனது குமாரத்திக்கு நற்காலம் வாய்ந்து மஹாராணியானபிறகு உன்னையானே தேடிப்பிடித்திழுத்துக் கொண்டுபோய் இராஜசமூகம் விடுத்துச்சிறைச்சாலையிலிருக்கும்படி செய்யாவிட்டால் யானென்ன ஆண்பிள்ளையா பாரடீ! துன்மார்க்கியென்று தூஷித் திகழ்ந்தனன்.

இவன் வார்த்தையைக் கேள்வியுற்ற சன்சலுக்குக் கோபமதிகரித்து, அடடா மதியற்ற பேயே! மானமில்லா நாயே! விபசாரியாகிய ஜோராவைப்பெற்ற கிழட்டொடிவானே! உன்குமாரத்தியால்தானே எங்களுக்கெல்லாம் இவ்விதியமைந்தன, ஈதுணராமல் ஏதேதோ வாயில் வந்தபடி உளறுகின்றனையே உன் கிழத்தலைக்குக் கேடுவர, உன் நரைத்தலையை நாய்பிடுங்க, இத்தனை நாளாய் யான் அரண்மனையில் ஜீவித்திருந்து இச்சமயம் உனது குமாரத்தியாகிய ஜோராவினால் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமுற்று ஆரண்யவாசியா யலைந்துத் திரிவதானேனே பாதகா! துர்க்குணத்திற் சிறந்த காதகாவென, வாயில் வந்தபடி பலவிதமாய்த் தூஷித் திகழ்ந்தனள். பர்வஜ்ஜென்பவனுக்குக் கோபமதிகரித்து சன்சலைக் கன்னத்தில் குத்துவதற்குக் கையை ஓங்கினன். அதை அவள் தடுத்துவிட்டுக் கிழவன் தாடியைப் பிடித்திழுத்துப் பூமியிற் றள்ளினள். அங்ஙனம் (Railway.) இருப்புப்பாதையின் கம்பியிருந்ததினால் அவன் வஸ்திரத்தினால் அவனுடைய கழுத்தை ரயில் கம்பியில் கட்டிவிட்டுக் கானகமார்க்கமாய் ஓடிவிட்டனள்.

இங்ஙனம், பர்வஜனுக்கு நேர்ந்த ஆபத்து பிராணபயமாயிருந்ததினுல் அவன் குய்யோ முறையோவெனக் கண்ணீர் ததும்பக் கதறியழுதனன். அந்தக் கம்பியின் பக்கத்திலிருக்கும் ரயில்வே காவலாளியின் வீட்டில் அடைபட்டிருக்கும் ஜோரா கவனித்து, ஈதென்ன தந்தையின் அழுகுரலாயிருக்கின்றதேயென ஜன்னலைத் திறந்து பார்த்து மனம்பதறி ஐயோ எனது அன்பானதந்தையே, உன்னை எந்தப் பாபிகளோ சித்ரவதை செய்வதற்காக ரயில் கம்பியில் கட்டிவிட்டு ஓடிப்போயினரே ஐயையோ! கதவைத் திறப்பதற்கும் முடியாமல் வெளிப்பக்கம் தாளிட்டிருக்கின்றதே யான் எவ்விதமாய் வருவேன். இன்னுஞ்சற்று தாமதித்தால் ரயில்வண்டி ஓடிவந்து உம்மை நசுக்கி பிழிந்து செக்கிலகப்பட்ட எள்ளைப்போற் செய்துவிடுமே யென்று மனம்பதறி பூமியிற் புரண்டழுது இனி தாமதித்தால் ஆபத்தாகும். ஆனுலும் "முயற்சியுடையோ ரிகழ்ச்சியடையா ரென்னுந்" தன்மையாய் நம்மாலான சாமர்த்தியம் யாதுசெய்வதென்று யோசித்தும் ஒன்றுந்தோற்றுமையால் என் தந்தைக்குமுன் யானேமரணமுற்ருல் என் மனச்சஞ்சலந் தீருமென்று தனதுமுழுபலத்துடன் தனதுவலது காலினுல் தான் அடைபட்டிருக்கும் வீட்டின் கதவை எட்டி உதைத்தனள். அந்த உதையினுல் கொஞ்சம் மூளியாயிருந்த அந்தஓட்டைக் கதவு சுக்கற்சுக்கலாய் ஒடிந்துவிட்டது. உடனே ஜோரா, திடீரென வெளியே ஓடிவந்து ரயில்கம்பியில் பிணைத்திருந்த தனது தந்தையின் கட்டுகளை அவிழ்த்து அவனைத் தூக்கும்போதே ரயில்வண்டி புகைகளைக் கக்கிக்கொண்டு கபகபவென்று அதிவேகமாயோடிற்று, இவ் விபரீத பயங்கர ஆபத்தைக் கவனித்த பர்வஜ் மனமிரண்டு அம்மணி! அந்நாளில் என்தாய்வயற்றிற்பிறந்து சன்சலால்இறப்பதற்காயினேன். இந்நாளின் இத்தகைய பிராணபயத்தை தடுத்து என் உயிரைக் காப்பாற்றியதால் இத்ததி நீயே எனது தாயென்று ஜோராவைப் புகழ்ந்தனன். அச்சமயம் இவர்களைத் தேடிக்கொண்டு செல்லும் தலையாரிகள் ஜோராவைக்கண்டு, ஆ! ஹா! இதோ பார்த்தீரா! மணாளனைவஞ்சித்து மஹாராணியாயிருந்த ஜோரா அகப்பட்டாளென அவளையும் அவள் தந்தையாகிய பர்வஜ்ஜென்பவனையும் அழைத்துக் கொண்டு போயினர்,

இங்ஙனம், இவர்கள் நிலை இத்தகைய ஆச்சரிய காக்ஷியாயிருக்கையில், பர்வஜ்ஜென்பவனை ரயில் கம்பியிற் கட்டிவிட்டு ஓடிப்போன ஜன்சல் ஆரண்யமார்க்கமாய்ச் செல்கையில், வழியிலெதிருற்ற ஆல

விருக்ஷத்தின் நீழலில் களையாய் உட்கார்ந்திருக்கும் வெஹிஷியைக் கண்ணுற்று, அடடா துன்மார்க்கா! உன்னுலல்லவோ எங்களுக்கெல்லாம் இவ்விதியமைந்தன, நீ பணத்தாசையினுல் நூஸரட்டைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதினுல், ஜோரா சிறைச்சாலையி லிருக்கும் படியாகவும், உன்னைத் தேடிக்கொண்டு தலையாரிகள் காட்டிற்குப் போகவும், சிறைச்சாலையிலிருந்த ஜோரா என்னை வஞ்சித்து வனவாசியாய் ஓடிப்போகவும், அரசன் அவளைத் தேடிப் பிடித்துக்கொண்டு வரும்படியா யென்னையனுப்பியதும், பர்வஜ்ஜென்பவன் என்னை வழியிற்கண்டு தூஷிக்கவும், யானவனை ரயில்வேகம்பியில் கட்டிவிட்டோடி வந்ததும், உன்னுடைய சேஷ்டையல்லவோ பாதகா! ஐயோ! "கோபமே பாபங்களுக்கெல்லாந் தாய்தந்தை கோபமே குடிகெடுக்கும்" என்பதுபோல, எனது கோபத்தினுல் தள்ளாத கிழவனுகிய பர்வஜ்ஜென்பவனை ரயில்கம்பியிற் கட்டிவிட்டு வந்தேனே இந்நேரம் அவன் கழுத்தின்மீது வண்டியோடி அவன்சரீரத்தை நசிக்கி பிழிந்துவிடுமே அடா! துரோகி! உன்னு லெத்தனை பேருக்கு ஆபத்தாயிற்று பாதகா வென தூஷித்தனள். இவையனைத்துங் கேள்வியுற்ற வெஹிஷிக்கு நூஸாட்டைக் கொன்ற பாபம் சூழ்ந்திருப்பதினுல் யாதொன்றுந் தோற்றுமல் கர்ஜ்ஜித்து அடீ! சன்சல் என்ன! யான் சும்மாயிருந்தாற் பற்பலவிதமாய்த் தூஷிக்கின்றனையே! இதோபாருனை நூஸரட்டைக் கொன்றதுபோற் கொன்றுவிடுகிறே னென்று அங்கிருந்து எழுந்து துரத்திக்கொண்டு ஓடுகையில் இவர்களைப் பிடித்துக்கொண்டு போவதற்காக கானகமார்க்கமாய் வந்திருக்கும் தலையாரிகள் வெஹிஷியையும், சன்சலையும், கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு போகையில், ஜோரா பர்வஜ்ஜென்னும் இருவரையும் அழைத்துச்செல்லும் தலையாரிகளுடனே சேர்ந்து யாவரும் கும்பலாக ஆரண்ய மார்க்கமாய்ச் சென்று அரண்மனையணுகி இராஜ சமஸ்தானத்தில் வந்தனர்.

அச்சமயம், அரசன்சந்தோஷப்பட்டு குற்றவாளியாகிய ஜோரா சன்சல், வெஹிஷி, இம்மூவரையும் ஓர்புரத்தில் நிற்கச்செய்து பர்வஜ்ஜென்பவனைப்பார்த்து நீர் யாரையா? புதிதாயிருக்கின்றனவேஇந்தக் குற்றவாளிகளுடன் நீர் சம்பந்தப்பட்ட காரண மென்னவென்று வினவ, பர்வஜ் சொல்லுகிறுன். அரசே! இந்த ஜோரா எனது குமாரத்தி இவளை யான் அன்பாய்வளர்த்து போக்கிரிப்பயலாகிய நூஸரட்டுக்குக் கலியாணஞ் செய்துகொடுத்தேன். அந்தப்பாபி! கிஞ்சிற்றும் தயை தாக்ஷண்யமின்றி அடித்துத் துரத்திவிட்டதினுல் இங்கரில் வந்து அரசபுத்திரனைமணந்து ஆனந்தமாயிருக்கையில் இந்தவெஹிஷி

நூஸரட்டை கொல்வதற்கு சுடவும், நீங்கள் ஜோராவைச் சிறைப்படுத்தினீர். ஆனதால்யான் கொன்றவனை அழைத்துவந்தால் என்மகளை விடுத்திடுவீரென்று கானகமார்க்கமாய் வெஹிஷியைத்தேடிக்கொண்டுபோயினேன். இந்த சன்சல் எனை அடித்து உதைத்து பூமியிற்றள்ளி ரயில்கம்பியில் கட்டிவிட்டனள். இந்த அனியாயத்தை நீங்கள் சரியாய்க் கவனித்து விசாரணை செய்யவேண்டுமென்றனன். அரசன் ஆச்சரியமடைந்து அடடா! ஈதென்ன வருவதெல்லாம் தொடுவழக்காயிருக்கின்றனவே யென சிரித்துக்கொண்டு தலையாரிகளை உண்மையாய் நிகழ்ந்தவை யாதெனவிசாரிக்க, அவர்கள் அரசனைப்பணிந்து மாநிலம் புகலரும் கீர்த்திவாய்ந்த மஹாராஜேஸ்வரா! யாங்க ளிவர்களைத் தேடிக்கொண்டுபோகையில் ஓர் கானகத்தில் இந்த வெஹிஷி நூஸரட்டுடன் சண்டைசெய்து அடித்துக் கொன்றுவிட்டனன். அச்சமயம்பிடிக்க முயன்றும், அகப்படாமல் ஓடிப்போய் மறுபடியும் சன்சலைக் கொல்வதற்குத் துரத்திக்கொண்டுபோகையில் இவ்விருவரையும் பிடித்துக்கொண்டு வந்தோம். வருகிற வழியில் ஜோராவையும் இந்தக் கிழவனையும் அழைத்துக்கொண்டு வந்தோமென்றனர். ஜோராவை விசாரிக்க அவள் தனது காலவித்யாசத்தினாலுற்ற ஆபத்தனைத்தும்புகன்று தான் பிராணனைப் போக்கிக்கொள்ள நதியில் வீழ்ந்தபோதே மரணமுற்றதற்குச் சமானமாகவும் தெய்வாதீனமாய்த் தப்பித்துக் கொண்டு கரையேறினதால் மறுஜனனமுற்றதாகவும் பலவிதசாதுரிய வார்த்தைகளால் அரசனை ஏமாற்றினள். அரசபுத்திரனும் இவள்மீதிருக்கும் ஆசையினால் சரிதானென் றொத்துக்கொண்டு அவள் குற்றத்தை மன்னித்து தனது மனைவியா யிருப்பதற்கு சம்மதித்தனன். சன்சல் பர்வஜ்ஜைக்கொல்லாமல் விடுத்தபடியினாலே அவள் குற்றத்தையும் மன்னித்துவிட்டு பணத்தாசையினால் நூஸரட்டைக்கொன்ற வெஹிஷியைமாத்திரம் கொலைஞர்களாற் சிரச்சேதம் செய்துவிட்டனர். அப்பால் இவ்வளவு கஷ்டநிஷ்டூரத்திலும்சிக்கி அவதிப்பட்ட ஜோராவென்பவளை அவள் சமர்த்தினால் மாநிலம்புகலருங் கீர்த்திவாய்ந்த மஹாராணியென யாவரும் ஆசீர்வதிக்கும்படியாய் நாடிரென்பவனுடன் சிம்மாசனத்திலமர்த்தி மகுடாபிஷேகஞ்செய்தனர். ஆகையால் தந்தையே! எனது தங்கையாகிய மாஹிஜாபினும் இவ்விதமே சிலகாலம்வருத்தமுற்றிடினும் ஆண்டவனருளால் யாதொருகஷ்டநிஷ்டூரமுமின்றி சுகானந்தமாயிருப்பா ளென்றனன், அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற அப்துல் அஸீஸும் ஒருவாறு மனதைரியமுற்றிடினும் சதா சஞ்சலமா யிருந்தனன்.

இங்ஙனம் இவர்கள் சில இத்தகையதா யிருக்கையில், ஷாஜஹானால் நேர்ந்த கலகத்தினால் கானகவாசியா யலைந்துக்கொண்டிருக்கும் மாஹிஜாபின் தனது விதிவசத்தை நினைந்து அழுதுக்கொண்டு வனசஞ்சாரியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் ஓர் பயங்கரமான சோலைக்குட்சென்று, இனியாம் எவ்விதமாய்த் தப்பித்துக்கொள்வதென ஆலோசித்து அங்குதோன்றும் கிளைவழி மார்க்கத்திற் செல்கையில், மிகவும் விர்த்தாப்பியமுள்ள ஓர் கிழவன் அங்குதோற்றக்கண்டுமாஹிஜாபின் அதிசயித்து, இத்தகைய பயங்கரமான இருட்சூழ்ந்த கானகத்தில் மனிதசஞ்சாரமு மிருக்கின்றனவே. ஈதென்ன ஆச்சரியமென்று அவரை விசாரிப்பதாயினள்.

மாஹிஜாபின்.—ஐயா! நீர் யாவர்? என் தலைவிதிவச மிவ்வாறமைந்ததால் அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜன நல்லுணவருந்தாத நாய்போ லலைந்துக் கானகவாசியாய்த் திரிகின்றேனே. தாங்களும் என்னைப்போற் கஷ்டநிஷ்டூரத்திற் சிக்கியவர்போற் காண்கின்றதே. நீர் யாரையா என, மிகவும் பிரியமுடன் வினவினள். அந்தக் கிழவன் சிரித்து அம்மணி! யான் பிறந்த நாள் முதற்கொண்டு யாத்திரைவாசியாக தேசசஞ்சாரமே செய்துக்கொண் டிருக்கின்றேனன்றி ஓர் தேசத்திலாயினும் சிறிதுநாள் வாசஞ்செய்தறியேன் இவையனைத்தும் நம்மாலுற்றவையென மதிக்கலாகாது. சலமும் ஆண்டவன் செயல்தான் அஃதன்றி நாம் வீணாக பலவித யோசனைசெய்வது மதியீனமேயாகும் இதற்குத்திருஷ்டாந்தமாய் உன்னைப்போன்ற ஸ்திரீகள் யாதேனும் ஓர் நகரத்தில் மணாளனுடன் சுகானந்தமாய் வாசஞ்செய்கின்றனரே நீயேன் ஆதரவற்ற பரதேசியைப்போல ஆரண்யவாசியாய் அலையவேண்டு மென்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற மாஹிஜாபின்தனக்குற்ற ஆபத்தனைத்தும் நினைந்து நினைந்து விசனமுற்றுக் கண்ணீர்த் ததும்ப சஞ்சலமுற்றவளாய்ச்சொல்வதாயினள்.

மாஹிஜாபின்:—ஐயா! யான் ஓர் கப்பல் வர்த்தகன் புத்திரியாயிருந்தும் எனக்கு இத்தகைய அரியாய ஆபத்தெய்தி ஆரண்யவாசியாய் அலைவதற்காயிற்று.

கிழவன்:—ஈதென்ன ஆச்சரியம்? நீ கப்பல்வர்த்தகண் புத்திரியாயிருந்தால் உனக்கு யாதொரு குறையும் அணுகாமல் வீட்டிற்

ருனே இருக்கமாட்டாயா? யாது துயருற்றதென வனவாசியா யலைகின்றனையோவென எனக்கே சந்தேக மெய்தலாயினவே. ஈதுண்மை யாதோ விபரமாய்ப் புகல்வாய்.

மாஹிஜாபின்:—ஐயா! நீர் புகன்றவை உண்மையே யான்இவ்விதமா யலைவதற்குக் காரணம் யாதெனின். எனது தாய் இறந்துவிட்ட பிறகு எனது தந்தை என்னையும் எனது தமயனையும் அழைத்துக்கொண்டு தமது வழக்கப்படியே கப்பலேறி ஆழிசஞ்சாரியாய்ப் போகையில், காற்றுமழையும் விசேஷமாய்ப் பொழிந்ததினால் ஓர் பேரிடிதோன்றி கப்பல்மீது வீழ்ந்து சுக்கல் சுக்கலாய் ஒடித்துவிட்டது யாங்கள் உயிர்ச்சேதமின்றி தப்பித்துக் கொண்டு ஜலத்தில் மூழ்காமல் நீந்திக் கரைசேர்ந்து; ஆதரவற்றப் பரதேசிகளாய் அழுதுக்கொண்டிருக்கையில், ஷாஜஹானென்பவன் எங்களை அழைத்துக்கொண்டுபோய் அமீர்முன் விடுத்தனன். அவரென்னை திருமணம் புரிந்துக்கொண்டு, என் தந்தைக்கும் தமயனுக்கும் சில திரவியங்கொடுத்து வர்த்தகஞ்செய்வதற்கு அனுப்பிவிட்டனர். யானும் எனது மணாளனும் சுகானந்தமாய் வாழ்ந்துக்கொண்டிருக்கையில், ஷாஜஹானால் நேர்ந்தகலகத்தினால் யான் இவ்விதமாய்த் துயருற்று வனவாசியா யலைவதாயின. ஆயினும் என்னைப்போற் கஷ்டநிஷ்டூரமெய்திய வருமுளரோ? ஹா! ஹா! ஈதென்ன ஆச்சரியம்? ஐயையோ விதிவசமே.

என, தனது சவிஸ்தாரமனைத்தும் ஆதிபோடந்தமாய்ப்புகன்று தனது மனவருத்தத்தினால் முகத்திலறைந்துக்கொண்டு மண்மேற்புரண்டழுதனள், அந்தக்கிழவன்பரிதாபமடைந்து அம்மணி நீயாகிலும் கொஞ்சநா ளனுபவித்த துன்பத்தைச் சகிக்க வியலாமல் விசனப்படுகின்றனையே உன்னிலும் விசேஷமாய்த் துன்பமனுபவித்த சவுந்தரவல்லி தனது கஷ்டநிஷ்டூரமனைத்துந் தவிர்த்து ஓர் நகரினைப்பரிபாலனஞ் செய்துக்கொண்டு சக்ரவர்த்தினியா யிருக்கையில் யாசகன்போலவந்த தனது மணாளனைக் கண்ணுற்று மனோல்லாசமடைந்து கணவனுடன் மதனரதிபோற் சுகானந்தமாய் வாழ்ந்திருக்க வில்லையாயென மாஹிஜாபினுக்குத் தைரியம் புகன்று, அம்மணி நீ யாதொரு மனத்துயரு மெய்தாதே ஜனிக்கும்போதே அவரவர்க்கியன்றவிதமே ஆண்டவன் விதித்த விதிப்படியே அமையுமென்றனர். அவ்வார்த்தை

யைக் கேள்வியுற்ற மாஹிஜாபின் ஆச்சரியமடைந்து, ஐயா! யான் தான் பாபியென்றாலும் என்னிலும் விசேஷதுய ரனுபவித்த சவுந்தர வல்லிக்கு எவ்வளவு கஷ்ட நிஷ்டூரம் வாய்ந்தனவோ? அப்பால், அவள் இராஜரீகம் புரிந்ததும் சாமார்த்திய மல்லவோ? யான் அத னைக் கவனிக்கவேண்டும் விபரமாய்ப் புகல்வீரென்றனள். அந்தக்கிழ வன் சிரித்து நல்லது அவ்விதமேசொல்லுகிறேன் கவனிப்பாயென்று புகல்வதாயினன்.

சதாசஞ்சலமேய்திய

சவுந்தரவல்லி சரித்திரம்.

சத்தியபுரியெனும் நகரினைப்பரிபாலனஞ் செய்திருந்த சாரங்க ஹஸ்த மஹாராஜன் தனது மனையாளுடன் மனோல்லாசமாய் வாழ்ந் திருந்தும் மைந்தனில்லையே யென்று மனவருத்த முற்றிருந்தனன். இவ்விதமாய் வெகுநாட் சென்றபின் இராஜபத்தினி கர்ப்பவதியாகி தசமதியும் நிறைந்து ஓர் சுபதினத்தில் ஓர் ஆண்குழந்தையைப் பெற் றனள். சாரங்க ஹஸ்தராஜன் மனமகிழ்ந்து நகரத்தின ரனைவர்கட் கும் சர்க்கரை வழங்கச்செய்து, மந்திரியினால் ஜோதிடகணித வல் லோனைவரவழைத்து மைந்தன் ஜாதங்கணித்துரைப்பாயென்க, அன் னோன் குழந்தை பிறந்த இராசிலக்கின குறிப்பின்படியே சுவேதச் சந்திரனென நாமகரணம் புனைந்து அரசனாற் கொடுத்த தக்ஷிணைதாம் பூலம் பெற்றுக்கொண்டு போயினன்.

அப்பால், இராஜபத்தினி குழந்தைக்குப் பாலூட்டிச் சீராட்டி வெகு மேன்மையாய் வளர்த்துக்கொண்டிருக்கையில், சுவேதச் சந்தி ரன் கவிழ்ந்து தவழ்ந்து நடந்து நாளுக்கு நாள் வளர்ந்து ஐந்துவய தானவுடனே அரசன் தனதுமைந்தனை வித்தியாசாலையில்விடுத்தனன் போதகாசிரியன் அனுக்கிரகத்தின்படியே சுவேதச்சந்திரன் எழுத்து, அசை, சீர், தளை, இலக்கண இலக்கிய சாரமென மனைத்தும் தெள்ளி தாய்க் கற்றுணர்ந்து வேதசாஸ்திர புராணநூன்முறை யனைத்தும் வாசித் துணர்ந்தவனாயினன். இவனுக்கு பதினாறு வயதானவுடனே அரசன் கலியாணஞ் செய்வதற்காக அமைச்சனிடம் ஆலோசித்துக் கொண்டிருக்கையில், அரசகுமாரனாகிய சுவேதச்சந்திரன்கிஞ்சிற்றும் சம்மதியாமல் தந்தையே எனக்கு அந்தசம்ஸாரத்தொல்லை வேண்டா

மென்று வனவாசியாய்ப்போவதற்கு பிரயாணமாயினன். அச்சமயத்தில் அந்நகரத்திலிருக்கும் வைசியன் புத்திரியாகிய சவுந்தரவல்லியானவள் தனது சகிகளுடன் சேர்ந்துக்கொண்டு நந்தவனத்திற் சென்று மனோல்லாசமாய் விளையாடிக் கொண்டிருக்கையில் சம்ஸாரம் சாகரமென பயந்து வனவாசியாய்ப் போகும் சுவேதச்சந்திரன் கண்டு காதல்மீறி, அடடா! இத்தகைய ரூபசுந்தரியுடன் சுகித்திருப்பது தான் சுகானந்தமென மதித்திருக்கையில், அந்தப்பெண் தனது சேடியருடன் தனதில்லத்திற் கேகினள்.

அப்பால் சுவேதச்சந்திரன் மதன்சரத்தினுற் றிகைத்து மையலுற்றவனாய்த் தனது அரண்மனையில் வந்து அன்னம் புசியாமல் அங்கிருக்கும் பஞ்சணையிற் சயனித்தும் நித்திரையின்றியவனு யிருக்கையில் அவனுடைய தாயாகிய மஹாராணி மைந்தனிருக்கும் கோலத்தை கண்ணுற்று ஆச்சரிய முற்றவளாய் மன்னனுக்குத் தெரிவிக்க அவன் மந்திரியையனுப்பி இராஜகுமாரன் மனக்குறிப்பைக் கவனித்துக்கொண்டுவருவாயென்னவே, அமைச்சனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து அரசபுத்திரனைத் தனியா யழைத்துக்கொண்டுபோய் அவனுளத்தின் கருத்து யாதென விசாரித்தனன் இராஜகுமாரன் சற்று நிதானித்துமந்திரி யான் இந்நகரத்தின்கன்னியின்மீது ஆவலுற்றேன். அந்த ரூபசவுந்தரியை எனக்கு விவாகஞ்செய்து வைத்தல் வேண்டுமென்றனன். அமைச்சன் இச்செய்தியை அரசனுக்குதெரிவித்தனன். அம் மன்னன் யோசித்து அமைச்சா, உனது மனம்போற் செய்வாயென்க. அந்த மந்திரியானவன் ஓர்நாள் நகரத்தினரனைவருக்கும் நல்விருந்தளிப்பதாக அரசன் உத்திரவுசெய்ததாகவும் யாவராயிருந்திடினும் அன்றையதினத்தின்ஊர்விருந்திற்கு வராதவர்களை தண்டிப்பதாகவும், தெரிவித்து, நகரோனைவரும் ஒருமிக்கவந்து அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் புசித்து தாம்பூலம் பெற்றுக்கொண்டுபோகவேணுமென்றும் வெட்டியானால் தமதுதேசமுழுமையும் பறைசாற்றச் செய்தனன். இச்சுபசங்கதியைக் கேள்வியுற்ற அந்நகரவாசிகளாகிய குடிக ளனைவரும் கூட்டங்கூட்டமாய் வந்து அன்னம் புசித்துவிட்டு தாம்பூலம் பெற்றுக்கொண்டு போகும்போது அரசனால் விதிக்கப்பட்ட நியமப்படியே அமைச்சன் அருகிலிருக்கும் சுவேதசந்திரன் சவுந்தரவல்லியைக்குறிப்பிக்க மன்னன் அக் கன்னியின் தந்தையைத் தனியே யழைத்துச் சென்று உன்குமாரத்தியை என் மைந்தனுக்குத் தருகவேண்டுமென்னலும் அவன் உமது அர

சுரிமையை எனக்குத் தந்தால் என துகுமாரத்தியை உன்மைந்தனுக்த்தருருவேனென் றுரைத்தனன். மன்னன் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து * சுவேதச்சந்திரனுக்கு சவுந்தரவல்லியை மணஞ்செய்து வைத்துத் தனது அரசுரிமையையும் வைசியனுக்குத்தந்து மகுடாபிஷேகம் செய்து வைத்தனன்,

பிறகு அந்தப்பாதகன் தனது மகளேயும் மருமகனேயும் சம்பந்தியையும் நகரைவிட்டுத் துரத்தி விட்டனன். அப்பால் சுவேதச்சந்திரன் மனமெலிந்து மனேயாளுடன் தாய்தந்தையரையும் அழைத்துக் கொண்டு மறுநகர்க் கேகையில், விருத்தராகிய அன்னே தந்தையை ஓர் குடியானவன் வீட்டில் விடுத்து அவர்களுக்குக் கொஞ்சம் திரவியம் கொடுத்து ஜீவித்திருப்பீரென சொல்லி விட்டு மனேயாளுடன் வனவாசியாய் வருகையில் வெகுதூரம் நடந்து கால்களயர்ந்து பசியாற் களேத்திளேத்து மூர்ச்சையாகினன் அச்சமயம் சவுந்தரவல்லி மிகவும் விசனத்துடன் அக்கானிலிருக்கும் நீரோடையிற் சென்று ஜலங்கொணர்ந்து கணவனேக் குடிப்பிக்கச்செய்து களேயாற்றினள். அவன் மெல்லென எழுந்து பெண்ணே யாம் எவ்விதமாய் ஜீவிப்பதென துயருறுந் தருணம் தனது விரலிலணிந்திருந்த கணேயாழிமோதிரத்தை கழட்டிக் கொடுத்து இதனே இந்நகரத்தின் கடைவீதியிற் சென்று விற்கிரயம் செய்வீராகில் யாவரேனும் நூறுவிராகன் கொடுத்து வாங்கிக்கொள்வார் யாம் அந்ததிரவியத்தை வைத்துக்கொண்டு யாதேனும் வர்த்தகம் செய்து ஜீவித்திருப்போமென்றனள், அவனும் அவ்விதமேநன்கெனச்சம்மதித்து, அவளே அழைத்துக்கொண்டுபோய் அந்நகர் புரத்திலிருக்கும் ஓர் சத்திரத்தி லிருக்கும்படி சொல்லிவிட்டு தான் கணேயாழிமோதிரத்தை எடுத்துக்கொண்டு நகரிற் பிரவேசித்து விலேகூறுந்தருணம் தலேயாரிகள் கண்ணுற்று இவனேப்பார்த்தால் மிகவும் ஏழையாயிருக்கின்றதே இவனுக்கு இத்தகைய ஜோதிப்பிரகாசமுள்ள நவரத்னமிழைத்த கணேயாழிமோதிரம் எவ்விதமாய்க்கிடைத்திருக்குமென்று சந்தேகப்பட்டு, அடடா! நீ இதனே எங்குதிருடிக் கொண்டு வந்தனேயென்று அடித்து மிரட்டி அரசன் முன் அழைத்துச்சென்றனர், அவ்வேந்தனும்ஆச்சரியமுற்று அடா, திருடா இதனே

* சாரங்கஹஸ்தன் தனது அரசுரிமையை, தனது சம்பந்தியாகிய வைசியனுக்குத் தந்தால், அவனுடைய மருமகனுகிய தனது மைந்தனுக்கு தானே கொடுப்பானென்று நினேந்தனன்.

எங்கிருந்து திருடிக்கொண்டு வந்தனையென்று கேழ்க்க, சுவேதச்சந்திரன்மனமிரண்டு, ஐயா! இதுஎன்னுடையமனைவியினுடையது எமது பொல்லாத காலத்தினால் இதனை விற்கிரயம் செய்வதற்காயினேனென்றுசொன்னான். அரசன் வியப்புற்று அவளெங்கிருக்கின்றாளென வினவ, சத்திரத்தி லிருக்கிறதாய் அடையாள மனைத்தும் விபரமாய்ப் புகன்றனன். அவ்வேந்தன் அவனை சிறைச்சாலையிலடைத்துவிட்டு ஓர் தாதியை யழைத்து நீ இந்நகர்புரத்தி லிருக்கும் சத்திரத்திற் சென்று அங்கு சவுந்தரவல்லியெனும் பெயரமைந்த ஓர் பெண் இருக்கின்றாள் அவளை அதிதீவிரமாய் அழைத்து வந்தாயானால் உனக்கு வேண்டிய வெகுமதியளிக்கிறேனென்று சொல்லியனுப்பினன். அவளும்நன்கெனச் சம்மதித்து சத்திரத்தில் வந்து ஐயையோ பாபம் ஒருவன் கணையாழி மோதிரம் விற்பதற்காக இராஜவீதியில் வரும்போது பட்டத்துயானை அவனை மிதித்துக் கொன்றுவிட்டதென்று சொன்னாள். அருகிலிருந்த சவுந்தரவல்லி யோடிவந்து, ஐயோ ஈதென்ன அநீதம் நமது மணாளனும் கணையாழிவிலை கூறுவதற்கேகினரே. அவர்தானோவென்று திடீரென்றெழுந்துவந்து தாதியை விசாரிக்கையில், அவள் இவளை மோசஞ்செய்வதற் கிசைந்த விதமாய் மிகவும் பரிதாபத்துடன் அம்மா அவர் உனக்கென்ன வேண்டுமென்க, எனது மணாளனென்றாள். ஐயோ அவர்தானோ? சரி சரி என்னசெய்யலாம் சீக்கிரமாய் வருவாயம்மா அவர்முகத்தை யாகிலும் பார்த்துவிட்டு வருவாயென்று அழைத்துக்கொண்டு வந்து அரசன் மாளிகையில் விடுத்து, அவனிடத்தில் வெகுமதி பெற்றுக்கொண்டுபோய் விட்டனள்.

அப்பால் மன்னன் மதன்சரத்தினால் மனமயங்கி ஆடைஆபரண சிங்காரலங்கிர்தனாய் சவுந்தரவல்லி யிருக்கும் மாளிகையில்வந்து, காதலி நாமிருவரும் சுகித்திடுவோம் வருவாயென்க, அவள் திடுக்கிட்டு அரசே எனது விரதநாட் தீர்ந்தபின்பு உமது இஷ்டப்போற் சம்மதிப்பேனென்றுஏமாற்றினள். அவனும் உண்மையென்றே மதித்து அங்கிருந்துவந்து சிறைச்சாலையி லிருக்கும் சுவேதச்சந்திரனைத் துரத்தி விட்டனன். அவன் அதிவேகமாய் சத்திரத்தில் ஓடிவந்து மனையாளைக் காணாமல் மனவிசாரமாய்த்தேடிக்கொண்டு சவுந்தரவல்லியிருக்கும் மாளிகையி னருகில்வந்து ஆ! எனது அன்பிற் கிசைந்த சரசவதனியென்று விசனப்பட்டழுதுக்கொண்டிருப்பதைக்கவனித்த சவுந்தரவல்லி தனது நாயகனென்றறிந்து இன்றிரவு பதினைந்துநாழிகைக்குமேல் இராஜ உடுபாவனையும் அஸ்வமும் வாங்கிக்கொண்டு

வருவீராகில் யான் அரசனை ஏமாற்றி நமது தேசத்திற்கு ஓடிப்போவோமென்று ஓர் ஓலையிலெழுதி அதினுடன் நூறுவிராகனையும் முடிந்து பூமியில் விட்டெறிந்தனள். அவன் அதனையெடுத்து வாசித்து பார்த்து சந்தோஷமடைந்து இராஜ உடுபாவனையும் குதிரையையும் வாங்கிக்கொண்டு இரவு பத்து நாழிகையில் வந்து மாளிகையின் ஓர் புரத்தில் வந்து அஸ்வத்தை மரத்தடியில் கட்டிவிட்டு ஆடை ஆபரணங்களைத் தலையின் கீழ்வைத்துக்கொண்டு சயனித்து நித்திரைபோயினன். அச்சமயம் ஓர் திருடன் அங்குவந்து சுவேதச்சந்திரன் தலையின் கீழ்வைத்திருக்கும் ஆடை ஆபரணங்களை திருடிக்கொண்டு குதிரையையும் அவிழ்த்துக்கொண்டு அங்கு விட்டிருந்த நூலேணியை அசைத்தனன். சவுந்தரவல்லி தனது மணாளன் தானேயென்று உப்பரிகையினின்றும் நூலேணிவழியாயிறங்கிவந்து இருட்டுகாலமாகையால் தனதுமணாளனென்றே திருடனை மதித்து, கைஜாடைகாட்டி இராஜ உடுபாவனையை வாங்கி ஆண்வேஷமாய் அணிந்துக்கொண்டு அஸ்வத்தின்மீதேறி கானகமார்க்கமாய் அவன்பின்னேசென்று,பொழுது விடிந்தபின் அவன் முகத்தைப்பார்த்துத் திருடனென்றறிந்து மஹாவிசன மடைந்து அஸ்வத்தினின்று கீழே இறங்கி ஜலங்கொண்டுவருவாயென்று அவனை குளத்திற்கு அனுப்பிவிட்டு குதிரையின் காலைக்காயப்படுத்தி விட்டு கானகமார்க்கமாய் வருகையில் மற்றோர் தேசத்தின் அரசகுமாரனும் மந்திரிகுமாரனும்வந்து இவள் மர்மமனைத்துங் கவனித்து தங்களைச் சுகிக்கும்படி வேண்டுதலும், அவர்கள் கரத்திலிருக்கும் தனுசைவாங்கி அதிற் சரந்தொடுத்துவிடுத்து இதனை எவர்கள்கொண்டு வருகின்றனரோ அவர்களையே மணம்புரிவேனென்றனள், மர்மமுணரா அவ்விருவரும் உண்மையென்றே மதித்து ஓடுகையில், சவுந்தரவல்லி இன்னோர் கிளைவழிமார்க்கமாய் ஓடிவந்து இரத்தன்பூரின் சத்திரத்திலிருக்கையில் அந்நகரத்தில் தினந்தோறும் ஒவ்வொரு அரசரை நியமிப்பதும், அவர்கள் இறப்பதுமா யிருக்கையில் அன்றைபதினத்தில் ஆண்வேஷமாயிருக்கும் சவுந்தரவல்லியை அரண்மனையில் அழைத்துச் சென்று மகுடாபிஷேகஞ் செய்தனர். அவள் பகற்பொழுதனைத்தும் இராஜரீகம்புரிந்து இரவில் அமுதருந்தி மலரணை மஞ்சத்திற் சயனித்து நித்திரையின்றி தனது காலவித்யாசமனைத்தும் நினைந்து நினைந்து விசனப்படுவதும், சந்தோஷிப்பதுமாயிருக்கையில் ஓர் சர்ப்பமானது தனது வழக்கம்போல் இறங்கி வருகையில் சவுந்தரவல்லி மனமிரண்டு சந்திராயுதத்தினால் துண்டு துண்டாய் வெட்டி எறிந்துவிட்டனள் பொழுது விடிந்தபின் அமைச்சரா

தியோர்சவத்திற்குரிய சாமான்களனைத்தும் தயார்செய்துவைத்து விட்டு சவுந்தரவல்லியை வந்துபார்த்து அவள் உயிருட னிருப்பதை யும் சர்ப்பம் வெட்டுண்டிருப்பதையும் பார்த்து அரசே யாங்கள் இத் தனை நாளாய் தின மொவ்வொருவருக்கு பகலில் முடிசூட்டுவதும் இரவில் அவர்கள் இறந்துவிட்டால் அருணோதயத்தில் மயானத்திற் சேர்ப்பதுமே வழக்கமாயிருந்தன. இன்றைபதினம் நீர்உயிருடனிரு ப்பதை கவனிக்கில் ஆச்சரியமா யிருக்கின்றதென புகன்றனர். சவுந் தரவல்லி சிரித்துக்கொண்டு மந்திரிகளே இங்குவந்து சயனிப்பவரை யெல்லாம் இந்தப்பாம்புதான் கடித்துக்கொன்றது இதனை தகனஞ் செய்து விடுவீரென்று சொல்லிவிட்டு அங்கிருந்து நந்தவனத்திற் செ ன்று தனது வழக்கம்போல் யாதொருவருங் காணுவிதமாய் ஸ்நான பான நேமநிஷ்டைபுரிந்து ஆடை ஆபரணங்க ளணிந்துக் கொண்டு வந்து பலகாரபக்ஷணம் புசித்து அரண்மனையில்வந்து தன்னைப்போல ஓர்படமெழுதி சத்திரத்தில் கட்டிவைக்கச்செய்து இதனைப்பார்த்து இகழ்வோரையும் புகழ்வோரையும் அழைத்துக்கொண்டு வருவீரெ ன்று சொல்லி தலையாரிகளை அங்கு காவலிருக்கச் செய்துவிட்டு சிம் மாசனத்தில் வந்தமர்ந்து இராஜரீகம் புரிந்திருந்தனள்.

அப்பால், சுவேதச் சந்திரன் அஸ்வத்தையும் வஸ்திரமூட்டை யையும் மனையாளையும் காணுமல் வெறியனைப்போல் தேடிக்கொண்டு வருகவும், வஞ்சகவேந்தனும், திருடனும், அரசகுமாரன்மந்திரிகுமா ரனுகிய இந்நால்வரும் சவுந்தரவல்லி மோசஞ்செய்தோடினளென்று தேடிக்கொண்டு வருகையில், ஓர்நாள் ஐந்துபேரும் இரத்தின் பூரில் வந்து சவுந்தரவல்லியின் ரூபத்தை எழுதி கட்டிவைத்திருக்கும் பட த்தைப்பார்த்து இகழ்வதும் புகழ்வதுமா யிருக்கையில் தலையாரிகள் இவ் வைவரையும் பிடித்துக்கொண்டுபோய் சவுந்தரவல்லியின் முன் விட்டனர். அவள் வஞ்சகவேந்தனுக்கு மதிபுகன்று அனுப்பிவிட்டு, திருடனுக்கு தண்டனைவிதித்து, அரசகுமாரனுக்கும் மந்திரிகுமார னுக்கும் அந்நகரத்திலிருக்கும் இரண்டு கன்னியரைக் கலியாணஞ் செய்து அனுப்பி விட்டு, தனது சவிஸ்தாரத்தை சபையோருக்குச் சொல்லி விட்டு தனது சுயரூபமாய் விளங்கி மணுளனுடன் மனோல் லாசமாய் வாழ்ந்திருந்தனள். அத்தன்மையாகவே உனக்கும் இன் னுஞ் சிறிதுநாளில் நல்லகாலம் வருமென்று சொல்லிவிட்டு அந்தக் கிழவன்போய் விட்டனன்.

அப்பால் மாஹிஜாபின் அவ்வனத்திற்ருனே சஞ்சரித்துக்கொண்டு ஓர் கிளைவழிமார்க்கமாய்ச் செல்கையில் ஓர் மதயானை அவளைத் துரத்திக்கொண்டு ஓடிவருகையில் மாஹிஜாபின் பயந்து ஓடி ஓர்மூங்கிற் காட்டில் நுழைந்தனள். அந்தவனம் அக்கினி பற்றி திகுதிகுவென எரிந்துக்கொண்டு நாற்புரமும் கொழுந்துவிட்டெரியவே என்னசெய்வாள் பாபம்! பேதமை யென்பது மாதர்க்கணிகல மென்னுந் தன்மைபோல் மனமிரண்டு திகிலுற்றுத் தியங்குந் தருணம் அருகிலிருந்த மலைவெடித்து அம்மலைவெடிப்பில் ஓர் சுரங்கந் தோன்றியது, அதனுள் வெகு பக்குவமாய்ச்சென்று, அங்கிருக்கும் விநோதங்களனைத்தும் பார்த்துக்கொண்டு வருகையில் அங்ஙனம் ஓர் நந்தவனந் தோன்றியது அதைக்கண்ணுற்றவுடனே பேரானந்தமெய்தி இனி நமது பசி தணிய காய்கனிகளையேனும் புசித்துக் களைதெளிவோமென்றெண்ணியவளாய் அங்கிருக்கும் தாமரைப்பொய்கையிலிறங்கி ஸ்நானபானஞ் செய்துக்கொண்டு அங்ஙனம் அடர்ந்து செழிப்புளதாகிய விருக்ஷாதிகளிற் காய்த்துக் கனிந்திருக்கும் இனிமை சேர்பழதினுசுகளிற் சிலவற்றைப் பறித்துப் புசித்தனள். அவ்வனம் தெய்வகன்னியர் வசிக்கும் ஸ்தலமாகையால் அந்தக் கனிகளெல்லாம் தேவாமிர்தத்திற்கும் இனிமையான ருசிகரமாயிருந்ததினுல் மனக்களிப்படைந்து நந்நீரருந்தி அருகிலிருக்கும் வசந்தமண்டபத்திற் சென்று சற்றுநேரம் சயனித்து அப்படியே நித்திரைபோய்விட்டனள். அச்சமயம் அப்சரசமாதர்கள் தமது வழக்கம்போல் அங்ஙனந்தோன்றி தாமரைப் பொய்கையில் ஜலக்கிரீடை விளையாடியபிறகு வசந்த மண்டபத்தில் வருகலாயினர். அங்குசயனித்திருந்த மாஹிஜாபினைப்பார்த்து ஆச்சரியமுற்றவராய் ஈதென்ன நூதனகாக்ஷியாயிருக்கின்றனவே தேவர்கள் வசிக்குமிடத்தில் நரஸ்திரீ வந்திருப்பதென்ன விபரீத மென்று வியப்புற்றவராய் இனி நாம் இவளுக்கு தரிசனந்தந்தால்நம்மைவிட்டு நீங்காமல் நம்முடனேயிருப்பதற்கு ஆசைப்படுவாள். அச்சமயம் நம்மைப் போன்ற தேவர்கள் கண்ணுற்ருல் நம்மைப் பழித்துப் பரிகாசஞ் செய்வாரென்றெண்ணி, தமது மந்திரவித்தையினுல் மாஹிஜாபினை மனிதசஞ்சாரமுள்ள பாலைவனத்தில் கொண்டு போகும்படி ஓர்வித சுழல்காற்றிற்கு ஆக்ஞாபித்த வுடனே அக்காற்று மாஹிஜாபினைச் செண்டுபோ லெடுத்துக் கொண்டுபோய் அப்சர ஸ்திரீகள் குறிப்பித்த இடத்தில் கொண்டுவந்து விட்டது.

அப்பால் மாஹிஜாபி னெழுந்து கண்விழித்துப்பார்த்து அடடா! ஈதென்ன ஆச்சரியம் நாம் சயனித்திருந்தது நந்தவனமாச்சுதே இத்ததி நாம் பயங்கரமான பாலைவனத்தில் வந்திருக்கும் காரணமென்னவென்று சந்தேகமுள்ளவளாய் பிரயாணமாயினள். அவ்விதமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் அம்தா நகரத்தின் கானகத்தின் மார்க்கமாய் வந்து அங்குதோற்றும் ஓர் மாஞ்சோலையிற் சென்று கனிவர்க்கங்களைப் பறித்துப் புசித்து நந்நீரருந்தி அவ்விருக்ஷத்தடியிற்றானே சயனித்து நித்திரை புரியுந் தருணம், தன்னை ஓர் வேந்தன் அழைத்துச் செல்வதுபோலும், ஓர் சிறுவனை ஓர் துஷ்டன்கொன்றுவிடுவதுபோலும், ஷாஜஹான் தன்னைத் துரத்திக்கொண்டு வருவதுபோலும், ஒருவன் தன்னை அஞ்சவேண்டாமென்று ஆதரித்த ஷாஜஹானை மிரட்டி பயமுறுத்துவதுபோலும், தன் பிராணனை போக்கிக்கொள்ளநினைப்பதுபோலும், இரண்டு பக்கீர்கள்வந்து தடுப்பதுபோலும், பிறகு ஓர் ஊரில் இராஜரீகம்புரிவதுபோலும், கினவுகண்டு திடுக்கிட்டெழுந்து யாதொன்றுங் காணமல் மஹா ஆச்சரியத்துடன் இன்னமென்னென்ன நேரிடுமோவென்று யோசித்திடினும் இனி நமக்கு நற்காலம் வாய்ந்திடுமென்றுசந்தோஷமாய்ச்செல்வதாயினள்.

மாஹிஜாபின்சரித்திரம்

(முதல்வால்யம்.)

முற்றிற்று.

மற்ற விபரங்களை இரண்டாம் வாலியத்தில் மற்றசங்கதியனைத்தும் விரிவாய்த் தொகுத்திருக்கின்றன.

இந்நூலின்

பிழைதிருத்த அட்டவணை.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	30	மகவின	மகவின்
4	3	சிலவருள்லீரெங்க	சிலவருள்வீரெங்க
5	3	கரததிற்	கரத்திற்
6	3	இந்தினமுழுதும்	இத்தினமுழுதும்
7	5	நபிநாயகன்	மஸ்தான்
,,	23	ஷம்ஷதீன்	ஷம்ஷுதீன்
8	16	சாலையிச்	சாலையிற்
9	29	நபிநாயகம் சல்லல்லாகு அலை கிவசல்லம்	இல்வாழ்க்கை யகற்றித் துறவி யெய்திய ஓர் மஸ்தான்
,,	30	காணிற்	காணிற்
10	4	முகம்மது சல்லல்லாஹு அலை கிவசல்லமவர்கள்நபிநாயகம்	இல்வாழ்க்கையகற்றித்துறவியா கிய ஓர்மஸ்தான்
,,	11	நபிநாயகம்	மஸ்தான்
,,	14	நாயகமே	ஐயனே
,,	24	நபிநாயகம்	மஸ்தான்
15	14	திருவடியை	திருவடியிற்
17	18	ஷாஜஹான்	ஷம்ஷுதீன்
18	18	அவளுடன்	அவர்களுடன்
19	2	எனக்கு	எனக்கு
24	25	மருமுருகி	மனமுருகி
34	26	சிறித்து	சிரித்து
37	29	அஜாத்	அஜாத்
44	23	விடுத்துவான்	விடுத்திடுவோன்
53	6	அலனஷான்	அலன்ஷான்
,,	12	ஜனித்திறந்தும்	ஜனித்திறந்தபின்
54	23	தாயும் பெண்ணும்	தாயும் பெண்ணுமாய்
,,	29	சுந்த்ரதேசத்தில்	சுந்தர்தேசத்தில்
56	17	ஹெபிலா	ஹெயிலா
57	8	கெர்ப்பவதியா	கர்ப்பவதியா
59	10	ஹெபிலா	ஹெயிலா

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். டி. ரோஸ்

சுகந்த

மூக்குத்தூள்.

—*—

இந்த பெயர் பெற்ற சுகந்த மூக்குத்தூளானது வெகு பெயர்களால் உபயோகித்து ஆபிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றிருக்கின்றது. இந்த மேலான பெருமை தங்கிய தூளினால் தீரும் வியாதிகளாவன:—ஜலதோஷம், பீனிசம் ஒற்றைத் தலை நோய், மண்டைக்குத்தல், கண்ணிலுண்டாகும் எல்லா வியாதிகளையும் தீர்ப்பதுடன் கண்டத்திற்கு மேற்பட்ட 96 வியாதியையும் மூளையைச்சார்ந்த வியாதிகளையும் சொஸ்தப்படுத்தி வைக்கும்.

இத்தூளானது சாதாரண புகையிலைத்தூளை 10-15 தடவை உபயோகப்படுத்துவர் இந்த சுகந்த மூக்குத்தூளை 2-தடவை உபயோகிப்பதனால் 15 தடவைகள் உபயோகிப்பதை விட மேலாகக்காணப்படும். மூன்று பைசா சாதாரண புகையிலைத் தூளுடன் இந்த சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்துக் கலந்தால் எல்லாம் மேற்படி சுகந்த முண்டாகிவிடும். இதை அநேகபிரபுக்கள் தங்கள்வீடுகளின் குடும்ப அவுஷதமாய் வைத்து உபயோகித்து வருகிறார்கள். இந்தத் தூளானது சாதாரண தூளைப் போல் இரண்டொரு தினங்களில் தன் சுபாவ குணமாகிய வாசனை, காரம் முதலியவைகளை விட்டு விடாது. எக்காலமும் அதன் காரமும் வாசனையும் குணமும் தன்னை விட்டகலாதபடி காத்துக் கொண்டே இருக்கும்.

கிறயம் புட்டி 1-க்கு	0 4 0	டஜன் 1-க்கு ரூபா	2 8 0
8-பலம் கொண்ட சேர் 1-க்கு			2 0 0

வேண்டியவர்கள் அடியிற்காணும் விலாசத்திற்கு யெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். தாவூத் சாஹிப்

யூநானி ஔஷதசாலை

போஸ்டு பாக்ஸ் நெ. 1219, மதறாஸ்.

சோல் ஏஜென்ஸி

பஞ்சசக்தி புத்தக சாலை,

போஸ்டு பாக்ஸ் நெ. 1051.

நெ 40, 28-வது வீதி

இரங்கோன்.